# ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்

மலர்:01, இதழ்: 16 | மாதமிருமுறை | 01-15, ஜூன் 2026 | ₹ 30/-

SHREE TAMIZH, Vol.01, Issue 16 | Fortnightly | JUNE 01-15, 2026



ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# திமுகவின் நிழல் தவெக

ஹிந்து அறநிலையத்துறை செயலராக ஸ்வர்ணா ஐ.ஏ.எஸ் அவர்களை த.வெ.க அரசு நியமித்தது. பிராமணரை எப்படி நியமிக்கலாம் என்று திராவிட மாடல் கூவியவுடன் அவர் மாற்றப்பட்டார். கல்வித்துறை அமைச்சராக வெங்கட்ரமணன் அறிவிக்கப்படுவார் என்று பேசப்பட்டவுடன், கல்வித்துறையில் பிராமணரா? என்று திராவிட ஒப்பாரி கேட்டவுடன், அந்த அமைச்சராக வேறொருவர் அறிவிக்கப்பட்டார். முதல்வரின் சிறப்பு அதிகாரியாக, முதல்வரின் ஜோதிடர் ரத்தன் பண்டிட் நியமிக்கப்பட்டார். முதல்வரின் தனி அலுவலரை நியமிப்பது முதல்வரின் விருப்பம். இதற்கு கல்வித் தகுதியோ, அனுபவமோ கட்டாயமில்லை. ஜோதிடரை நியமிக்கலாமா என்றவுடன், அந்த உத்தரவு பின்வாங்கப்பட்டது. வந்தேமாதரம் ஒலித்தது தவறு என்று தி.மு.க சொன்னவுடன், ஆதவ் அர்ஜுனா தி.மு.க.வின் நிலைபாடே அரசின் நிலைபாடு என்றார். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உதயநிதியின் கருத்தை ஆமோதித்தார், பா.ஜ.க வில் இருந்தபோது காவி உடை தரித்த திருவள்ளுவர் படத்தை பதிவிட்ட த.வெ.க அமைச்சர் நிர்மல்குமாரும் தி.மு.கவின் காவி எதிர்ப்பு நிலைபாட்டை வழிமொழிந்தார். மதுபானக் கடைகளை மூடினால், கஞ்சாவும், கள்ளச்சாராயமும் அதிகரிக்கும் என்று மதுவிலக்கிற்கு மூடு விழா நடத்தியதோடு, பாட்டிலுக்கு 10 ரூபாய் என்று பாடி ஆட்சிக்கு வந்துவிட்டு, 10 ரூபாய் கூட்டி விற்பதையும் நியாயப் படுத்துகிறார் அமைச்சர். ஆட்சிப் பொறுப்பெடுத்து ஒரு மாதத்திற்குள், தி.மு.கவின் தாளத்திற்கு ஆடும் குரங்காகவே த.வெ.க அரசு உள்ளது. தி.மு.க சொல்றான், த.வெ.க செய்யறான் என்பதே நடைமுறையாக உள்ளது.

கரூர் வழக்கை விசாரிக்க தி.மு.க அரசால் பணியமர்த்தப்பட்ட திரு.அஸ்ரா கர்க்-ஐ அன்று கடுமையாக சாடிய த.வெ.க, இப்போது அவரையே உளவுத்துறை ஐ.ஜியாக பணியமர்த்தியிருக்கிறது. தி.மு.கவின் ஏவல்துறை தலைவர் என்று த.வெ.க வால் தேர்தல் நேரத்தில் அடையாளம் காட்டப்பட்ட சென்னை கமிஷனர் திரு.அருண், லஞ்ச ஒழிப்புப் பிரிவு இயக்குநராகப் பணியமர்த்தப்பட்டுள்ளார். நீதிமன்றமே விசாரிக்கச் சொன்ன ஊழல் நடந்த ஆவின் நிறுவனத்தின் ஊழல் கண்காணிப்பு அதிகாரியாக, தி.மு.கவின் ஏவலாளியாக செயல்பட்ட டேவிசன் தேவாசிர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் எப்படி தி.மு.கவின் ஊழல்களை வெளிக்கொண்டு வருவார்கள்? திராவிடக் கட்சிகள் தமிழர்களை ஹிந்தி படிக்கவிடாமல் தடுத்தும், நவோதயா பள்ளிகளைத் தடுத்தும், தமிழகத்திற்கு வரவேண்டிய பி.எம்ஸ்ரீ திட்ட நிதியை வரவிடாமல், கல்வித்துறையை சீரழித்த போக்கையே த.வெ.க அரசும் தி.மு.க வின் அழுத்தத்தால் தொடர்கிறது.

தேச விரோத விஷயங்களில், த.வெ.க, தி.மு.க.வை விஞ்சி நிற்கிறது. வெளிப்படையான எல்.டி.டி.ஈ ஆதரவு, ஐ.எஸ்.ஐ தொடர்புடையவருக்கு மந்திரிப்பதவி, கோவை குண்டு வெடிப்புக் குற்றவாளிகள் முன்விடுதலைக்குப் பரிசீலனை, இஸ்லாமிய வங்கிமுறை கோரிக்கையை ஊக்குவிப்பது என்று மறைமுகமாக தி.மு.க செய்ததை த.வெ.க வெளிப்படையாகவே செய்கிறது. முதல் மாதத்திலேயே, தி.மு.கவிற்கு பயந்து முடிவை மாற்றியும், தி.மு.கவின் நரேடிவைப் பின்பற்றும் இந்த ஆட்சியை திமுகவின் நிழல் ஆட்சி என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

# கரப்பான்பூச்சி ஜனதா கட்சி - என்னய்யா கட்சி இது? பின்னணி என்ன?

அருண்பிரபு

உச்சநீதிமன்றத்தில் கடந்த மே 15 அன்று மூத்த வழக்கறிஞர் பதவி பற்றியும் அதற்காக போலிச் சான்றுகள் சமர்பித்துப் பித்தலாட்டம் செய்வது பற்றியும் ஒரு வழக்கில் விவாதம் வந்தது. நம் நாட்டின் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அவர்கள் வேதனையுடன் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். "நம் நாட்டில் சில இளைஞர்கள் கரப்பான்பூச்சிகள் போல எதற்கும் பயனில்லாமல் ஒரு வேலையும் கிடைக்காமல், வழக்கறிஞர் தொழிலில் இடமும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஊடகம், சமூக ஊடகம் போன்றவற்றில் சமூக செயல்பாட்டாளர்கள் என்ற பெயரில் கிளம்புகிறார்கள். RTI ஆர்வலர் அல்லது ஏதோ ஒரு ஆர்வலர், செயல்பாட்டாளர்கள் என்று கிளம்பி விடுகிறார்கள். இவர்கள் தராதரமின்றி அனைவரையும் தாக்குகிறார்கள்." என்று குறிப்பிட்டார்.

நீதிபதி ஜாய்மாலா பக்சி குறிப்பிட்டது "மூத்த வழக்கறிஞர் என்ற பதவி விரட்டிப் பிடிப்பதற்கோ, ஆதரவு திரட்டி, சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுத்துப் பெறுவதற்கோ உரியதல்ல." அமர்வில் இருந்த அனைத்து நீதிபதிகளும் "யாராவது ஒரு வழக்கறிஞர் தொழில் ஒழுங்கற்ற நடத்தை கொண்டிருந்து அவருக்கு மூத்த வழக்கறிஞர் பதவியை உயர்நீதிமன்றங்கள் வழங்கினால், உச்சநீதிமன்றம் தலையிட்டு அதைச் செல்லாது என்று அறிவிக்கும்" என்றனர். அதே போல அனைத்து நீதிபதிகளும் சமூக ஊடகங்களையும் RTIஐயும் பயன்படுத்தி நீதித்துறையைக் களங்கப்படுத்திப் பேசுவதைக் கண்டித்தனர். மேலும் போலி சான்றிதழ்கள் வழங்கித் தொழிலில் ஈடுபடும் வழக்கறிஞர்கள் மீது கடும் நடவடிக்கை இருக்கும் என்றும் எச்சரித்தனர்.

இதில் தலைமை நீதிபதி சொன்ன கரப்பான்பூச்சி உதாரணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த நாட்டு இளைஞர்களைக் கரப்பான்பூச்சிகள் என்கிறார் தலைமை நீதிபதி என்று ஆட்டம் காலியான ஆம் ஆத்மி கட்சியின் முன்னாள் தொ(கு)ண்டர் அபிஜித் டிப்கே என்பவர் வானுக்கும் பூமிக்குமாகக் குதித்தார். இவர் 2020 முதல் 2023 வரை ஆம் ஆத்மி கட்சியில் சமூக ஊடக அணியில் இருந்தார். 2020 தேர்தலில் ஆம் ஆத்மி கட்சிக்காக மீம்ஸ் போட்டு இளசுகளை ஈர்க்க வேலை செய்தார். இவருக்கு டில்லி கல்வித்துறையில் தகவல்தொடர்பு ஆலோசகர் என்ற பதவியைக் கொடுத்தார் கேசரிவால். 2023ல் வெளிநாட்டில் படிக்கப் போகிறேன் என்று கிளம்பிவிட்டார் டிப்கே. அமெரிக்காவுக்குப் போய் பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் படிப்பதாகச் சொன்னார். மேலதிக விவரம் இல்லை.

அமெரிக்காவில் இருந்தபடியே கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்று ஒரு வலைத்தளம் தொடங்கினார் டிப்கே. அதை லித்துவேனியாவில் பதிவு செய்தார். இரண்டொரு நாட்களில் 40000 உறுப்பினர்கள் என்றார்கள். இவர்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தை 2 கோடி பேர் தொடர்கிறார்கள் என்றார்கள். X தளத்தில் 2 லட்சம் பேர் தொடர்கிறார்கள் என்றார்கள். கரப்பான்பூச்சி போல மாறுவேடம் அணிந்து ஊரைச் சுத்தம் செய்கிறோம் என்று ஒரு கும்பல் கிளம்பி ரீல்ஸ் போட்டார்கள். ஹரியாணாவில் உள்ளூர் போராட்டம் ஒன்று ஏற்பாடாகிப் பிசுபிசுத்தது. ஆனாலும் இணையத்தில் அங்கம் வங்கம் கலிங்கம் என்று அடுக்கினார்கள்.

தலைமை நீதிபதி "நாட்டு இளைஞர்களைக் கரப்பான்பூச்சி என்று சொல்லவில்லை, சட்டத்துறை வேலைக்கு லாயக்கில்லாமல், துறையில் பதவிக்கு அலைபவர்களைத் தான் சொன்னேன். ஏன் திரித்துப் பேசுகிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு டிப்கே "தலைமை நீதிபதி மோடியின் டிகிரி குறித்து விவாதிக்கும் வரை இப்படித்தான் வீம்புக்குப் பேசுவோம்" என்று திமிராகப் பேசினார். டிப்கேவைப் பேட்டி கண்ட ஊடகங்கள் எவை என்று பார்த்தால் அல் ஜசீரா, பிபிசி போன்ற நம்நாட்டுக்கு எதிரான வெளிநாட்டு ஊடகங்கள்.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் இந்தக் கரப்பான்பூச்சி ஜனதா கட்சிக்கும் போலி வழக்கறிஞர்களுக்கும், போலி சான்றிதழ் தந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிய CBI விசாரணை கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது சொல்லப்படும் கருத்துக்கள் தீர்ப்பின்




பகுதியாக வந்தால் மட்டுமே சட்டத்தின் வலிவு பெறும், அல்லாத நிலையில் obiter dicta அதாவது போகிற போக்கில் சொன்ன கருத்து என்று கடந்து செல்லப்படும். ஆனால் அப்படிப்பட்ட கருத்தை வைத்து இணையதளம் தொடங்கி விளம்பரங்கள் பெற்று, வணிக நடவடிக்கையாக ஆக்கியிருப்பது பற்றியும் இதன் பின்னணியில் இருப்பது யார் என்பது குறித்தும் விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது விமர்சனத்தைக் குறிவைக்கும் வழக்கு அல்ல என்றும், கருத்தை வைத்து வணிகச் சுரண்டல் செய்வதும், சுற்றில் விட்டுப் பணம் பார்ப்பதும், திரித்துக்கூறி ஆதரவு திரட்டுவதும் ஆகிய குற்றங்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நம் உளவுத்துறை IB வெளிநாட்டுத் தலையீடும், பணமும் இருப்பதாகச் சந்தேகித்து அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது. இந்த அபிஜித் டிப்கே ஆம் ஆத்மி கட்சியில் இருந்ததாலும் அவர்களிடம் இருந்து விலகியதாகச் சொன்னாலும் இவரது கல்விக்கு நிதி முதல் பல ஏற்பாடுகள் ஆம் ஆத்மி கட்சி செய்தது என்ற ஐயம் இருப்பதாலும் டிப்கேவை கண்காணிக்கிறது உளவுத்துறை. இது ஏதோ இளைஞர்களின் எழுச்சி என்று காட்ட பல முனைகளில் முயற்சிகள் நடந்தாலும் ஆம் ஆத்மி கட்சியும் அவர்களை இயக்குபவர்களுமே இதற்குப் பின் உள்ளனர் என்று உளவுத்துறைகள் உறுதியாகச் சொல்கின்றனர். பல சமூக ஊடகக் குழுக்கள் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி பெயருக்கு மாற்றப்பட்டன. இப்படி மாற்றக் குழுவினர் எப்படி ஒப்புக்கொண்டனர் என்று ஆராயும்போது ஏதோ ஒரு வகையில் ஈடு செய்யப்பட்டு இந்த மாற்றம் நிகழ்ந்திருப்பதாகச் சந்தேகம் வருகிறது. கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்று பெயர் மாற்றப்பட்டவுடனே அப்போது வரை ஆளில்லாத குழுவில் லட்சக் கணக்கில் ஆள் சேர்ந்தது. இது எப்படி என்று ஆராயப் போனால் நூல் பாகிஸ்தான் தாண்டி நீள்கிறது. துருக்கி வரை போகிறது என்று தகவல். பங்களாதேசில் ஆள் வைத்து திக / திமுக வகையறா We Dravidians என்ற பெயரில் சமூக ஊடகங்களில் திராவிடம் வளர்த்த கதை நினைவுக்கு வந்தால் கம்பெனி பொறுப்பல்ல.

**கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்று பெயர் மாற்றப்பட்டவுடனே அப்போது வரை ஆளில்லாத குழுவில் லட்சக்கணக்கில் ஆள் சேர்ந்தது. இது எப்படி என்று ஆராயப் போனால் நூல் பாகிஸ்தான் தாண்டி நீள்கிறது. துருக்கி வரை போகிறது என்று தகவல்.**

இந்த மாதிரியான ஒரு இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், மீம்ஸ், ஷார்ட்ஸ் என்று போட்டுத்தான் நேபாளத்தில் ஆட்சியை மாற்றினார்கள். நேபாளத்தில் இளசு எழுச்சி முடிந்து ராப் பாடகர் பிரதமர் ஆனார். உக்ரைன் போலவே. அங்கே கலவரத்தின் போது அந்நாட்டு நிதியமைச்சரை அவ்வூர் இளசுகள் என்ற பெயரில் தெண்டித் திரிந்த பயங்கரவாதிகள் அடித்துப் போட்ட போது “இங்கு அப்படி நடக்கும் பொன்னாள் என்னாளோ?” என்று சமூக ஊடகங்களில் ஏங்கிய

**தலைமை நீதிபதி "நாட்டு இளைஞர்களைக் கரப்பான்பூச்சி என்று சொல்லவில்லை, சட்டத்துறை வேலைக்கு லாயக்கில்லாமல், துறையில் பதவிக்கு அலைபவர்களைத் தான் சொன்னேன். ஏன் திரித்துப் பேசுகிறார்கள்?'' என்று கேட்டார்.**

பயங்கரவாத ஆதரவாளர்கள் பட்டியலை IB அரசிடம் கொடுத்து இப்படித்தான் இங்கும் திட்டமிடுகிறார்கள் என்று சந்தேகம், அதனால் தான் விசாரிக்கிறோம் என்றவுடன் அரசும் இந்தக் கட்சியின் வலைத்தளம் பற்றி சர்வதேசப் புகாரளித்து லித்துவேனியாவில் தளத்தைத் தூக்கியது. இவர்களது X தளம் நம் நாட்டில் முடக்கப்பட்டது, இன்ஸ்டா தடுக்கப்பட்டது. ஆனால் தெற்காசியா என்ற பெயரில் இடம் சொல்லிவிட்டுப் பதிவுகள் போடுகிறார்கள் பாகிஸ்தானியரும், பங்களாதேசத்தவரும். துர்க்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் என்று பாபரின் சொந்த ஊர்களில் இருந்து உறுப்பினர் சேர்க்கை ஓஹோ என்று நடக்கிறது கரப்பான்பூச்சி ஜனதா கட்சிக்கு சேர்ந்து என்ன மொகலாய ஆட்சியா கொண்டு வரப் போகிறார்கள்?

நேபாளம் மட்டுமல்ல பங்களாதேசத்திலும் இப்படி இளசுகள் எழுச்சி என்று ஆரம்பித்து ஹசீனாவின் வீட்டைச் சூறையாடி அவரை விரட்டியடித்துவிட்டு இன்று அல்லா கே நாம் பே தே தே பாபா என்று சோற்றுக்கும் மின்சாரத்துக்கும் நம்மிடம் கையேந்துகிறது வங்கதேசம். அங்கே இருந்து பல சிஐஏ நடத்தும் (சம்பந்தமில்லை என்று சொல்லிக்கொண்டாலும்) தனியார் போராட்டக் கம்பெனிகள் பாரதத்தின் அமைதியைக் குலைக்கவும், பிரிவினையைச் செயல்படுத்தவும் மெனக்கெடுகின்றன. ஆனால் ஓரடி முன் வைத்தால் விழுகிற அடியில் பத்தடி பின் செல்ல வேண்டியிருப்பதால் மோடியை மாற்று என்று கூவுகிறார்கள். இம்ரான்கானை மாற்றியது போல அங்கே முடியாதா என்று முனீர் கெஞ்சுவதாகத் தகவல். வைத்துக்கொண்டா வஞ்சனை செய்கிறார்கள் டீப் ஸ்டேட்டார்? பஞ்சாபில் போதை, ஆயுதம் என்று பாகிஸ்தானும் அனுப்பிகொண்டே இருக்கிறது. 90% எல்லைக் காவலிலோ ராணுவத்திலோ சிக்குகிறது. மீதி உள்ளூரில் போலீசிடம் மாட்டுகிறது. வங்கத்தில் பீரராயத் திட்டம் போட்டால் சுவெந்து அதிகாரி சுட்டேபுடுவேன் என்று அதிகாரத்தில் அமர்ந்து விரட்டுகிறார். வேறெங்கும் பெரிய தாக்கம் இல்லை. உக்ரைனை உருப்படாமல் அடித்து, நேபாளத்தை ஒரு பொல்லாத நிலையில் தள்ளி, வங்கதேசத்தில் அத்தனை தொழில்களையும் மூடி இளசுகள் எழுச்சி என்ற பெயரில் டோனல்டு லூ செய்த லூட்டிகள் கொடுமையானவை. இலங்கையிலும் இப்படித்தான் ஜனாதிபதி மாளிகையை நொறுக்கினார்கள். இப்போது உள்ளூர் வெறுப்பின் வேர்கள் ஓடினாலும் சோற்றுக்கும் வேலைக்கும் பாரதத்தை விட்டால் ஆளில்லை என்பதால் இலங்கை பேசாதிருக்கிறது.




இத்தனை தோல்விகளுக்குப் பிறகும் பாரதத்தில் எப்படி முனைகிறார்கள். விஜயின் வெற்றிதான் காரணம் என்கின்றனர் விவரமறிந்தோர். மிஷநரி பின்னணி, காட்சிப் பிழையாகக் கட்டமைக்கப்பட்ட இளசுகள் எழுச்சி, மீம்ஸ், ரீல்ஸ், ஷார்ட்ஸ் இன்னபிற சமூக வலைத்தள மூளைச்சலவைகள் என்று தமிழகத்தில் வென்றதை உதாரணமாகக் கொண்டு பாரதம் முழுவதும் செய்ய முனைகிறார்கள். ஆனால் தமிழகத்தில் விஜய்யின் திரைப்படம் தொடங்கி அவரைச் சூழ்ந்துள்ள லாட்டரி அடிப்பவர்கள் வரையிலான பண விவகார விசாரணை ஏற்கனவே நடப்பதால் விஜய்யின் இந்த வெற்றி பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று பலரும் சொல்கிறார்கள். ஐந்தாண்டுகள் ஆளக் கம்யூனிஸ்டுகள் விடமாட்டார்கள், பஞ்சாயத்துகள் பல நடந்தேறும், சிக்கல்கள் நித்திய கண்டம் தரும் என்பது அரசியல் நோக்கர்கள் கருத்து. ஆனால் இந்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சி இவரது வெற்றியை அப்படியே தூக்கிக் கொண்டு போய் பாரதம் முழுமைக்கும் செய்து முடிக்கத் துடித்த துடிப்பின் விளைவு. ஆனாலும் கொண்டையை மறைக்க மறந்த கதையாக ஆம் ஆத்மி கட்சியின் ஆளை வைத்து விளையாட்டை ஆரம்பித்ததால் கேசரிவால் வேலையா என்று நம்நாட்டு மக்கள் விலகிக் கொண்டனர், இளசுகள் உட்பட.

இந்தக் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி ஊடக வெளிச்சம் தவிர வேறு தாக்கம் தரவில்லை. நல்ல பெயராக வைக்கவேண்டும். என்னதான் நீதிபதி சொன்னதைக் கலாய்க்கிறேன் என்றாலும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்று பெயர் வைத்தால் என்னடா பெயர் இது என்று மக்கள் முகம் சுளிக்கத்தான் செய்வார்கள். இது பற்றிய விசாரணை முழுமையாக நடந்து கேசரிவால் வகையறாவின் முகத்திரைகள் முழுமையாக அகற்றப்படுவதே நாட்டுக்கு நலம் பயக்கும். அரசுக்கு ஒத்துழைப்போம். வந்தே மாதரம்.

# திருவள்ளுவர் அடையாள மோசடி

பால கௌதமன்

திருவள்ளுவர் பிறந்த நாளான வைகாசி அனுஷத்தை, ஆளுநர் ரவி அவர்கள் 2024ம் ஆண்டு முதல் ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவர் படத்திற்கு மலர் தூவியும், திருவள்ளுவர் கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தியும் பொது விழாவாகவும் கொண்டாடி வந்தார். இந்த மரபை அடியொற்றி தற்போதைய ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவர்கள் மே 30 அன்று திருவள்ளுவர் திருநாள் விழாவை ஆளுநர் மாளிகையில் கொண்டாடினார். இந்த விழாவில் திருவள்ளுவர் படத்திற்கு காவி உடை அணியபட்டிருந்தது. திருநீர், குங்குமம் இடம் பெற்றிருந்தது என்று எதிர்ப்பு கிளம்பியது. தை 2 அதாவது ஜனவரி 15 திருவள்ளுவர் தினமாக அரசு அனுஷ்டிக்கும் போது வைகாசி அனுஷம் என்ற புதுப்பழக்கத்தை புகுத்துகிறார்கள் என்றார் எதிர்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின். திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்திருப்பது அயோக்கியத்தனம், இந்தச் செயல் அகம்பாவம் திமிர் என்றெல்லாம் வைகோ சாடினார். தமிழர்களை கிள்ளுக்கீரை என்று நினைக்கவேண்டாம் என்றும் வைகோ எச்சரித்தார். ஜூன் மாதம் 7ம் தேதி கவர்னர் மாளிகை முன் கருப்புக்கொடி போராட்டம் நடத்த போவதாக வைகோ அறிவித்திருக்கிறார். இந்த நிகழ்விற்கு த.வெ.க.வின் கூட்டணி கட்சியான விடுதலைசிறுத்தைகளின்தலைவரும்அமைச்சருமான வன்னியரசு கண்டனம் தெரிவித்துள்ளார். வழக்கம் போல மீ டூ கவிஞர் வைரமுத்துவும் கவிதை வடிவில் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளார்.

திருவள்ளுவருக்கு காவி கொடுத்ததால், அயோக்கியன் என்றும், அகம்பாவி என்றும், திமிர் பிடித்தவர் என்றும் சொல்லும் வைகோ, 1993ம் ஆண்டு திருவள்ளுவர் படத்தை காவி உடையுடன் வெளியிட்ட திமுக தலைவர் அன்பழகனை அயோக்கிய பேராசிரியர், திமிர் பேராசியர், அகம்பாவ பேராசிரியர் என்று அழைப்பாரா? தமிழர் திருமணமும், இனமானமும் என்ற பேராசிரியர் அன்பழகன் எழுதிய புத்தகத்தை வெளியிட்டது பூம்புகார் புத்தக நிலையம். இந்த புத்தகத்திற்கு முன்னுரை எழுதியவர் திமுகவின் குடும்பத் தலைவராக இருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி. ஆகவே, திமிர் கலையிலும், அகம்பாவ கலையிலும், அயோக்கியத்தன கலையிலும் தேர்ச்சி பெற்றதனால் கலைஞர் என்ற பட்டம் கருணாநிதிக்கு உள்ளது என்று வைகோ சொல்வாரா?

1955ம் ஆண்டு கல்கி இதழ் காவி உடை தரித்த வள்ளுவரின் படத்தை வெளியிட்டது. அந்த காலங்களில் வந்த சினிமாக்களில் எல்லாம் வள்ளுவ பெருமான் திருநீற்றுடன் தான் காட்சியளித்தார். அந்த காலங்களில் பாடப்புத்தங்களில் வள்ளுவர் படம் திருநீற்றுடன் தான் இடம் பெற்றிருந்தது. திருக்குறள் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் அனைத்துமே திருநீற்றை தாங்கிய வள்ளுவர் படத்தை தான் பெற்றிருந்தன. திருநீற்றுடன் வள்ளுவரை ஏற்றுக்கொள்ள முடியாத என்ற அண்ணாதுரையின் நாத்திக சித்தாந்தம் நெற்றியில் பட்டையில்லாமல், மார்பிலே பூணூல் இல்லாமல் வெள்ளை நிற துணி தரித்த திருவள்ளுவரை 1963ல் உருவாக்கியது. பூணூல் அடையாளம் இல்லாத வள்ளுவரை வரைய பிராமணரான ஓவியர் வேணுகோபால் சர்மாவிற்கு பாரதிதாசன் குறிப்பு கொடுத்தார் என்று பேசப்படுகிறது. திட்டமிட்டு திருவள்ளுவரிடமிருந்து ஹிந்து அடையாளங்களை நீக்கிவிட்டு, இப்போது திருவள்ளுவருக்கு ஹிந்து அடையாளம் கொடுப்பது நியாயமா என்று அடையாள மோசடி செய்த திராவிட கும்பல் கதறுவது வேடிக்கையாக உள்ளது.

1935ம் ஆண்டு மறைமலை அடிகள் தலைமையில் மே 18 அன்று சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் கூட்டம் நடந்தது. அன்றைய நாள் வைகாசி அனுடம். மயிலாப்பூரில் அமைந்துள்ள திருவள்ளுவர் கோவிலில் வழிபாடு நடத்தி அறிஞர்களும், அரசியல்வாதிகளும், ஆன்மீக பெரியோர்களும் ஊர்வலம் நடத்தினர். இந்த கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்திய தனித்தமிழ் இயக்க நிறுவனர் மறைமலை அடிகள் வைகாசி அனுடமே திருவள்ளுவர் திருநாள் என்று உறுதிபட பேசினார். இது தொடர்பான பல நிகழ்ச்சி களில் தமிழ்தாத்தா உவே சாமிநாதய்யர், திருவிக, தே.போ. மீனாட்சி சுந்தரனார், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, நமச்சிவாய முதலியார், வேங்கடசாமி நாட்டார் போன்ற அக்காலத்து தமிழ் மேதைகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அரசியலில் இரு துருவங்களாக செயல்பட்ட சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும், ஈ.வே.இராமஸ்வாமியும் வாழ்த்து செய்தி அனுப்பினர். காஞ்சி மகான் ஸ்ரீ ஸ்ரீ சங்கர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார். இந்த பாரம்பரியத்தை அடியொற்றி 1955ல் தமிழ்

**தமிழின் அடையாளமே கருணாநிதி தான் என்று ஏறத்தாழ 60ஆண்டுகளாக ஒரு பிம்பத்தை திமுகவினர் கட்டமைத்து வருகின்றனர். இந்த போலி பிம்பத்திற்காக திருவள்ளுவரும் காவு வாங்கப்பட்டிருக்கிறார்.**

மன்றம் என்ற பெயரில் இலங்கையைச் சார்ந்த புலவர் க.பொ.ரத்தினம் அவர்கள் வைகாசி அனுடத்தை உலகம் முழுவதும் கொண்டாட ஏற்பாடு செய்தார். 1966ம் ஆண்டு வைகாசி அனுஷம் ஜூன் மாதம் 2ம் தேதி பொது விடுமுறையுடன் கொண்டாடப்பட்டது. இதற்கான அரசாணை மார்ச் 18 1966 அன்று வெளியிடப்பட்டது. இந்த விடுமுறைக்கும் கொண்டாட்டங்களுக்கும் நன்றி தெரிவித்து சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள திருவள்ளுவர் மன்றம் வெளியிட்ட அறிக்கையில் 14.4.1963 அன்று திமுக நிறுவனர் அண்ணாதுரை, அப்போதைய காங்கிரஸ் நிதியமைச்சர் திரு பக்தவத்சலத்திடம் வைத்த கோரிக்கையை ஏற்று தமிழக அரசு செயல்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகள், ஒரு அடிப்படை உண்மையை உணர்த்துகிறது. வைகாசி அனுடத்தை புதிய கண்டுபிடிப்பு என்று சொல்லும் உதயநிதியின் திமுகவை நிறுவிய அண்ணாதுரையின் கோரிக்கையை ஏற்று வைகாசி அனுடம் உதயநிதி பிறப்பதற்கு முன்பே தமிழக அரசால் கொண்டாடப்பட்டு இருக்கிறது என்பதை தெளிவாக்குகிறது. உதயநிதியின் கொள்கை குருவான ஈ.வே.ராமசாமியால், உதயநிதியின் தந்தை ஸ்டாலின் பிறப்பதற்கு முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. தமிழின் அடையாளங்களாக கருதப்படும் அனைத்து தமிழ் அறிஞர்களாலும் திருவள்ளுவர் பிறந்த நாளாக கொண்டாடப்பட்டது வைகாசி அனுஷம் என்பதும் உறுதியாகிறது.

**இந்த பராம்பரியத்தை மாற்றியது யார்?**

ஹிந்து அடையாளங்களை மறைக்க வேணுகோபால் சர்மா என்ற பார்ப்பனரை வைத்து படம் வரைய செய்தது முதல் அடையாள மோசடி. அண்ணாதுரை மறைவுக்குப் பின் மாட்டுப்பொங்கல் அன்று திருவள்ளுவர் ஜெயந்தி என்று அறிவித்து திருவள்ளுவருக்கு என்று தனிச்சிறப்புடன் பல நூறு ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வந்து வைகாசி அனுஷத்தை மறைத்து திருவள்ளுவரின் முக்கியத்துவத்தை ஒழித்த உதயநிதியின் தாத்தாவான கருணாநிதி செய்தது இரண்டாம் மோசடி

இப்படி அடையாள மோசடி, வரலாற்று மோசடி ஆகியவற்றில் ஈடுபட்ட உதயநிதியின் தாத்தா சிலை மோசடியிலும் ஈடுபட்டுள்ளார். சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ளது திருவள்ளுவர் திருக்கோயில். இந்த திருக்கோயிலுள்ள திருவள்ளுவர் திருமேனியை ஆண்டுதோறும் அறுபத்து மூவர் திருவிழாவில் வீதி ஊர்வலத்தில் எழுந்தருளச் செய்வர். வள்ளுவரை திருவள்ளுவ நாயானார் என்றழைப்பர். கருணாநிதி முதல்வரான பின் திருவள்ளுவர் திருக்கோயிலை புனரமைப்பு செய்ய கோரிக்கைகள் எழுந்தன. இதை ஏற்று புனரமைப்பு பணிக்கு கருணாநிதி உத்தரவிட்டார். அப்போது ஒரு பழைய திருவள்ளுவர் சிலை கண்டெடுக்கப்பட்டது. பின்னப்பட்ட திருமேனியை வழிபாட்டிற்கு வைக்க இயலாத காரணத்தால் அதை கோவில் வளாகத்தில் ஒரு கூடாரத்தில் வைத்திருந்தார்கள். இந்த திருமேனி பூணூல் உடன் இருந்தது. இதை ஆய்வு செய்த தமிழ்நாடு தொல்லியல் துறை நிபுணர்கள் இச்சிலை 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கண்டறிந்தனர். இதன் வாயிலாக, இந்த கோவில் 600ஆண்டுகால பழமையானது என்பது உறுதியாகிறது. கருணாநிதி முதல்வராக இருந்த 2009ம் ஆண்டில் தமிழக அரசின் கீழ் செயல்படும் இந்து அறநிலையத்துறை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கொடுத்த தகவல்களின் படி வைகாசி அனுஷம் திருவள்ளுவர் பிறந்தநாளாக இத் திருக்கோவிலில் கொண்டாடப்படுகிறது என்பதை உறுதிபடுத்தியுள்ளது. இத் திருக்கோவிலில் ஓரமாக வைக்கப்பட்டிருந்த 600ஆண்டுகாலம் பழமையான திருவள்ளுவர் சிலை 2006 - 2007க்குப் பின் கோவில் வளாகத்திலிருந்து மாயமானது. கருணாநிதி தன் புகழ் பாட 2010ம் ஆண்டு நடத்திய செம்மொழி மாநாட்டையொட்டி இந்த சிலை எங்கு போனது என்று யாருக்கும் தெரியவில்லை. திருவள்ளுவர் அடையாள அழிப்பின் உச்சமாக திமுக ஆட்சியில் நடந்த சிலை கடத்தல் சம்பவம் இது. தமிழின் மீட்சிக்கு கருணாநிதியே காரணம், தமிழுக்காக கருணாநிதியை தவிர யாருமே எதுவும் செய்ய வில்லை. தமிழின் அடையாளமே கருணாநிதி தான் என்று ஏறத்தாழ 60ஆண்டுகளாக ஒரு பிம்பத்தை திமுகவினர் கட்டமைத்து வருகின்றனர். இந்த போலி பிம்பத்திற்காக திருவள்ளுவரும் காவு வாங்கப்பட்டிருக்கிறார்.

அடையாள மோசடி செய்து அயோக்கியதனமாக கட்டிய பிம்பம் உடைவதை தாங்கிக்கொள்ள முடியாமல் புலம்பும் திராவிட கூட்டத்தின் மோசடி வலையில் ஆளும் கட்சியான தவெக விழுந்துள்ளது. இதன் அமைச்சர் அருண்ராஜ் திருவள்ளுவருக்கு காவி அணிவிப்பதை கண்டிக்கிறேன் என்று அறிக்கை விடும் அளவிற்கு திமுகவின் பிரச்சாரம் அமைந்துள்ளது. திமுகவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் காணாமல் போன வள்ளுவர் சிலையை மீட்க தவெக அரசு வழக்குப் பதிந்து ஒட்டுமொத்த தமிழ் அறிஞர்களின் நீண்டநாள் கோரிக்கையான வைகாசி அனுடத்தை அரசு விழாவாக அறிவித்து வான்புகழ் வள்ளுவனுக்கு சிறப்பு செய்ய வேண்டும்.

# விஜய் அமைச்சரவை ஒரு பருந்துப் பார்வை

-ராஜேஷ்



தமிழக அரசியல் ஒரு விசித்திரமான, ஆச்சரியமான கட்டத்தை கடக்கிறது என்றால் மிகையில்லை. ஆம், ஜெயிச்ச தவெகவுக்கு எப்படி நாம் ஆட்சிக் கட்டிலில் அமரும்படி வெற்றி பெற்றது என்பதும், எதிர்க்கட்சித் தலைவராக ஸ்டாலின் உட்கார முடியாத அளவிற்கு தோல்வியை திமுக தழுவியது எப்படி என்றும், நாம் தானே ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும், மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது எப்படி? மனிதர்களைக் கடந்து மாடுகளிடம் பிரச்சாரம் செய்த நாதக சில மனிதர்களின் வாக்குகளை மட்டுமே பெற்று சுருங்கியது குறித்தும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இந்த தன்னறிச் சோதனை எல்லாம் நமக்கு தேவையில்லை, தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் கடையனும் கடைத்தேற்றும் ஆகச் சிறந்த தத்துவம் குறித்த பயிற்சிப் பட்டறைகள் உடனடியாகவே தொடங்கி விட்டது.

**“தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்”**- குறளுக்கேற்ப தன் மனசாட்சி குத்திக் கிழித்து விடக் கூடாது என்ற அடுத்த கட்ட நகர்வில் செல்வதே உத்தமம் என பாஜக தலைவர்கள் யோசிக்க ஆரம்பித்து விட்டனர். தனித்துவமான கட்சியல்லவா, வித்தியாசமான பயணத்தை தொடர்கிறது. நிற்க.

**அசைந்து கொடுக்காத ஆளுநர் அர்லேக்கர்:**

அரசு அமைக்கத் தேவையான எண்ணிக்கை 118 என்ற இலக்கத்தை அடையாத நிலையில் நாளுக்கு 3 முறை ஆளுநரை தவெக தலைவர் விஜய் சந்திப்பதும், ஆட்சி அமைக்க அழையுங்கள் எனக் கேட்பதுமாக இருந்தார். ஆளுநர் அர்லேக்கரோ கொஞ்சமும் அசைந்து கொடுக்காமல் தேவையான எண்ணிக்கையை காட்டுங்கள் உடனே மணிமகுடம் உங்களுக்கே என தெளிவாக சொன்னார். அதற்குள் திராவிட கோஷ்டிகள், கம்யூனிஸ காவலர்கள், காங்கிரஸ், ஊடக உ.பிகள் என அரசியலமைப்பின் அரிச்சுவடிகளில் ஆராய்ச்சியில் இறங்கியதோடு, ஆளுநரை அர்ச்சிக்க ஆரம்பித்தனர். தான் ஏன் ஆட்சி அமைக்க விஜய்யை அழைக்கவில்லை என்பதை ரிபப்ளிக் சேனலில் ஆடியோ மூலமாக விளக்கமளித்தார் தமிழக ஆளுநர் அர்லெக்கர். இதற்குப் பின் தான் அடக்கி வாசிக்கலாகினர். 118 என்ற இலக்கை அடைய பல்வேறு வழிமுறைகளை செய்யத் தொடங்கியது த.வெ.க. & கோ. அரசியலில் திருமங்கலம் ஃபார்முலா தொடங்கி பல வழிமுறைகளை இந்தியாவுக்கே உதாரணமாக காட்டிய தமிழகத்தில் முதன்முறையாக தெலுங்கு படமான “புஷ்பா” ஸ்டைலில் “சோஃபா” மாடலை அறிமுகப்படுத்தியது தவெக. எந்தக் கட்சியிடமெல்லாம் ஆதரவு கிடைக்க வாய்ப்பு என நினைக்கிறார்களோ அந்த கட்சி அலுவலகத்திற்கு திடீரென சோஃபா வருவது அரசியல் நோக்கர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

**துரோக கூட்டணி கட்சிகளும், திமுகவின் ஓயாத ஒப்பாரியும்:**

“அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்” என காத்திருந்த காங்கிரஸுக்கு, திமுக கூட்டணி வெற்றி பெறாதது அவ்வளவு சந்தோஷத்தை தந்தது என்றே தான் சொல்ல வேண்டும். சம்பிரதாய நன்றியைக் கூட கூட திமுகவுக்குச் சொல்லாமல் பனையூருக்கு பாய்ந்து சென்று ‘உள்ளேன் ஐயா’ என அட்டெண்டன்ஸ் போட்டது காங்கிரஸ். வெளியிலிருந்தெல்லாம் இல்லை உள்ளேயே வந்து ஆதரவு தருகிறோம் எனச் சொன்னது. திமுக கட்டிய கூட்டணி கோபுரத்தில் முதல் செங்கல் உருவப்பட்டது. நாம் இப்போது என்ன செய்வது? எஜமானர் ஸ்டாலினிடமே கேட்டு விடலாம் என கம்யூனிஸ்ட் கட்சிகளும், விசிக மற்றும் IUMLகட்சி களும் முடிவு செய்து அவரை சந்தித்தன. அந்தச் சந்திப்புகளில் என்ன நடந்தது? என்பது முழுமையாக தெரிவதற்குள் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிலிருந்து ஆதரவு என முடிவை அறிவித்தன. காம்ரேடுகளுடன் சேர்ந்து முடிவெடுப்போம் எனச் சொன்ன விசிக காரியமாக காலதாமதம் செய்ததாக பேச்சு எழுந்தது. IUML ஆதரவை கொடுத்தும் மறுத்தும் போக்கு காட்டியது.

திமுகவோ காங்கிரஸின் துரோகத்தை கட்சியினர், கூலி பேச்சாளர்கள், இணைய செயற்பாட்டாளர்கள் மூலம் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தது. பதிலுக்கு காங்கிரஸும் தன் பங்குக்கு திருப்பித் தாக்கியது. ஒருவழியாக தவெக ஆட்சியமைக்க அவர்கள் யாரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றார்களோ அவர்களின் ஆதரவுடன் ஆட்சியமைக்க ஆளுநரிடம் உரிமை கோரியது.

**ஆஹா! நமக்கு வாய்த்த ஆகச் சிறந்த ரீல்ஸ் அமைச்சர்கள்:**

தவெக ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை திமுக கூட்டணி கட்சிகளின் தயவினால் பெற்று பதவிப் பிரமாணமும் நடைப்பெற்றது. ஆளுநர் வழியே அமித்ஷா ஆட்சி செய்தால் நம்ம கதி என்னாவது? என பயந்த கட்சிகள் ஓரளவுக்கு நிம்மதியடைந்தன. முதல் தவணையாக ஜோசப் விஜய் எனும் நான் எனச் சொல்லி முதல்வராக விஜய்க்கு பதவிப் பிரமாணம் நடந்தது. திரையில் முதற்காட்சிப் படம் பார்க்கும் ரசிக கண்மணிகள் எப்படி விசில் அடித்து பேப்பரை கிழித்து சந்தோஷ கூச்சலிடுவார்களோ அதே மனப்பான்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்களும் அமைச்சர்களும் இருந்ததை பார்க்க முடிந்தது. ஒரு காலத்தில் அவர்களும் ரசிகர்மன்ற நிர்வாகியாக இருந்து படம் பார்த்து விசிலடித்தவர்கள் தானே. அப்படி விசிலடித்ததை மறக்கக் கூடாது என்பதால் அதையே கட்சியின் சின்னமாகக் கொண்டு மக்களிடம் சீக்கிரம் கொண்டு சேர்த்ததோடு வெற்றியும் பெற்றவர்கள் அல்லவா.

முதல் தவணை அமைச்சர்களில் கே.ஏ.செங்கோட்டையன் தவிர மற்ற அனைவரும் முதன்முறையாக பதவியேற்றவர்கள் புசி ஆனந்தன், ஆதவ் அர்ஜுனா, வெங்கட்டரமணன், அருண் ராஜ், நிர்மல் குமார், டி.கே.பிரபு, ராஜ்மோகன் மற்றும் கீர்த்தனா ஆகியோராவர். இதில் டி.கே.பிரபு, ராஜ்மோகன், கீர்த்தனா ஆகியோர் இன்ஸ்டா ரீல்ஸ் மூலம் அறியப்பட்டவர்கள். ரீல்ஸ் பிரபலங்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்த நிலையில் எம்.எல்.ஏக்கள் பலருமே ரீல்ஸ் பைத்தியம் என்பதை அவர்களின் பல வீடியோக்களே சாட்சி.

**பொழுது போனா கிடைக்காது, அள்ளு அள்ளு வியாபாரம்:**

ஆட்சியில் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என திமுகவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் கேள்வி கேட்டார் என விசிகவிலிருந்து நீக்கப்பட்டவர் தான் ஆதவ் அர்ஜுனா. அந்த ஆதவின் ஆதரவில் மீண்டும் அதிகாரத்தில் பங்கு பெற்று விடலாம் என நோக்கில் வெளியிலிருந்து அல்ல உள்ளேயே வந்து விடுகிறோம் எனச் சொல்லி விசிகவின் வன்னியரசு அமைச்சராக பதவி ஏற்றார். IUMLன் பாபநாசம் எம்.எல்.ஏ ஷாஜஹான் சிறுபான்மை நலத்துறை அமைச்சராக பதவி ஏற்றார். இவ்விரு அமைச்சர்களும் மூன்றாம் தவணையாக அமைச்சர்களாக பதவி ஏற்றனர். இரண்டாவது தவணையில் 23 பேர் தவெகவைச் சார்ந்தவர்கள் பதவியேற்றது குறிப்பிடத்தக்கது. 9+23+2 இந்த நியூமராலஜிப் படி தான் பதவி ஏற்க வேண்டுமென ஆஸ்தான ஜோசியர் சொன்னாரா என்று தெரியவில்லை.ஆனால் நேரம், கிழமை குறித்து தரும் ஜோசியரின் OSD பதவி தான் நீடிக்கவில்லை என்ற வருத்தமளித்திருக்கும்.

**பதவி ஏற்றதுமே களத்தில் குதித்த அமைச்சர்கள்:**

தவெக அமைச்சர்களாக பதவி ஏற்றதுமே களத்தில் குதித்தார்கள் என்றவுடன் அலுவல் பணிகளில் அசத்தி விட்டார்களா? என கேள்வி கேட்க வேண்டாம். அவர்கள் முன்பு செய்து கொண்டிருந்த பணியை இன்னும் அப்டேட்டாக, HD இன்ஸ்டா ரீல் வீடியோவாக அரசு செலவில் செய்கிறார்கள் அவ்வளவே. கனிமவளத்துறை அமைச்சரான டி.கே.பிரபு “ரீல்ஸ் பிரபு” என தவெகவினரால் பாசத்துடன் அழைக்கப்பட்டவர் என்பதால் அந்த இடத்தை தொடர்ந்து தக்கவைக்க மனு கொடுக்க வரும் நபர்கள் தரும் மனுவை பெறுவதிலிருந்து ஒவ்வொன்றாக வீடியோவாக போடுவது வாடிக்கையாக வைத்திருக்கிறார். கடைசியாக புரோட்டாவுக்கு சால்னா ஊத்துவது, பெண் குழந்தை அழுதுக்கொண்டே அவர் தோளில் சாயும் வீடியோ என ரொம்ப பிஸியாக இருக்கிறார். விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ், பயிற்சிக்கு வரும் வீரர்களுடன் தினமும் காலைச் சிற்றுண்டியாக பன், பட்டர் ஜாம் சாப்பிடுவதும், உற்சாக வார்த்தைகள் சொல்லும் வீடியோவையும் போடுகிறார்.

தொழில்துறை அமைச்சர் கீர்த்தனாவோ தொழில் முதலீடுகளை தனது இன்ஸ்டா ரீல் மூலமே வாரிக் குவித்து விடலாம் என நினைத்து வீடியோ போடுகிறார். அறநிலையத்துறை அமைச்சரோ ஆய்வு என்ற பெயரில் அவர் போடும் வீடியோ வேற லெவல். போதாக்குறைக்கு எம்.எல்.ஏக்கள் ஆய்வு என்ற பெயரில் அடிக்கும் கூத்துக்கள் எல்லை மீறிப் போய்க்கொண்டு இருக்கிறது. அரசு மருத்துவமனையில் கம்பம் தொகுதி எம்.எல்.ஏ ஜெகந்நாத் மிஸ்ரா 100 தவெக தொண்டர்கள் புடைசூழ ஆய்வு மேற்கொண்டதைக் கண்டு மக்கள் தலையில் அடித்துக் கொண்டனர்.

பேரன் சொன்னான், பேத்தி சொன்னாள் என தவெகவுக்கு வாக்கு போட்டவர்கள் பவர் கட், சிறுமி பாலியல் கொடுமைக்கு பதில் எங்கே? கஞ்சா கட்டுப்படுத்துவது எப்போது என கும்மிருட்டில் இருந்து கொண்டு இப்போது அவர்கள் வீடியோ போட தொடங்கி உள்ளனர்.

இன்னும் என்னென்ன கூத்துகளெல்லாம் நடக்குமோ..

# ஜோசப் விஜய் ஆட்சியில் விருட் என்று முளைக்கும் சர்ச்

-ஜீவரத்தினம்



கோவை மாவட்டம் வடக்கு காளம்பட்டி கிராமத்தில் 150 ஆண்டுகள் பழமையான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சுற்றியுள்ள 12 கிராமங்களைச் சார்ந்த அனைத்து இந்து சமுதாய மக்களும் இணைந்து காலம் காலமாய் ஒற்றுமையுடன் அம்மனுக்கு செலுத்த வேண்டிய நேர்த்திக் கடனைத் திருவிழாக்கள் மூலம் செலுத்தி சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்தி வருகின்றனர். இக்கோவில் விசாலமான மடப்பள்ளிகள், பக்தர்கள் தங்கக்கூடிய வசதி அமையப் பெற்ற வழிபாட்டுத்தலமாகும். காளப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் ஹிந்துக்களில் பல்வேறு பிரிவினர்களின் குலதெய்வமாகவும், வழிபடு தெய்வாகவும் இந்த அருள்மிகு மாரியம்மன் கோவில் விளங்கி வருகிறது. மிகவும் சக்தி வாய்ந்த அம்மன் என்று இப்பகுதி மக்களால் போற்றப்பட்டு வருகிறது. கண்களில் ஏற்படும் குறைபாடுகள், அம்மை நோய் போன்றவற்றை தீர்த்து வைப்பவள் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை.

இந்த திருக்கோவிலில் 12 கிராமங்களைச் சார்ந்த இந்து சமுதாய மக்கள் ஒன்று கூடி ஒவ்வொரு வருடமும் கோவில் வளாகத்தில் பொங்கல், திருக்கார்த்திகை போன்ற பண்டிகைகள் கொண்டாடுவது வழக்கம். இதைத் தவிர பால்குடம், விசேஷ தின வழிபாடு, அம்மன் திருவீதி உலா போன்ற நிகழ்ச்சிகள் மிக விமர்சையாக பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2010ம் ஆண்டு வரை எந்த இடர்பாடும் இன்றி இது போன்று திருவிழாக்கள் விமரிசையாகவும் அமைதியாகவும் நடந்து வந்தன.

இந்த சூழ்நிலையில் தான், கிறிஸ்துவ சமுதாய நபர்கள் யாரும் இல்லாத காளப்பட்டி கிராமத்தில், காளப்பட்டி கிராம நிர்வாக அதிகாரியின் உதவியாளராக பணியாற்றிய நபரை கிறிஸ்தவர்கள் திட்டமிட்டு மதம்மாற்றினர். அத்தோடு நில்லாமல் அவர் தங்கியிருந்த ஓட்டு வீட்டை சர்ச்சாக மாற்றியதோடு, கோவிலுக்கு அருகில் இருக்கும் 16 செண்ட் நிலத்தை ஆக்ரமித்தனர். கிறிஸ்தவர்கள் ஆக்ரமித்த இடத்தில் தான் பால் குடம் எடுத்து வரும் போதும், திருவிழா காலங்களிலும் பக்தர்கள் இளைபாறுவார்கள் கோவில் பயன்பாட்டிற்காக இருந்த நிலத்தை ஆக்ரமித்த கிறிஸ்தவர்கள் அதில் சர்ச் கட்டத் தொடங்கினர்.

இது குறித்து ஹிந்துக்கள் கேள்வி எழுப்பியவுடன், இந்த இடம் தென்னிந்திய சபைக்கு சொந்தமானது என்றும், அது ஈரோடு சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று கூறியதோடு நில்லாமல் பத்திர பதிவு எண் 2064/65 என்று ஒரு போலியான பத்திரத்தை, அப்போதிருந்த ஆட்சியர் உமாநாத்திடம் சமர்பித்து 155/2 என்ற க.ச எண்ணில் சர்ச் கட்ட அனுமதி பெற்றனர். ஆனால் அவர்கள் சர்ச் கட்ட தொடங்கியதோ ஹிந்துக்கள் திருவிழா நேரத்தில் உபயோகப்படுத்தும் இடமான 155/1 என்ற பகுதியில். கோவில் மிக அருகில் சர்ச் கட்டப்படுவது சட்ட ஒழுங்கு பிரச்சினை வரும் என்று காவல்துறையினர் கூறிய பின்னரும் ஆட்சியரால் இதற்கு அனுமதி வழங்கப்பட்டது தான் அராஜகத்தின் உச்சம். இந்த அநீதிக்கு எதிராக ஹிந்துக்கள் எதிர்ப்பு தெரிவித்து

**இந்நிலையில், கிறிஸ்தவர்கள் ஜோசப் விஜய் ஆட்சியமைத்த அன்றே மீண்டும் சர்ச்சை கட்டத் தொடங்கினார்கள். ஹிந்துக்கள் மீண்டும் போராட்டம் நடத்தி அதை தடுத்து நிறுத்தினார்கள்.**





போராடி 2011ம் ஆண்டு கட்டிட பணிகளை நிறுத்தி வைத்தனர். இந்த விவகாரம் குறித்து முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் 2013ம் ஆண்டு சர்ச் கட்ட அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்று பொய் கூறி காவல்துறையின் அனுமதியுடன் மீண்டும் சட்ட விரோதமாக கட்டத் தொடங்கினார்கள். அப்போதும் ஹிந்துக்கள் மீண்டும் தங்களின் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துத் தடுத்தனர்.

இந்த சூழ்நிலையில், 2016ல் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் சட்டவிரோதமாக இரவோடு இரவாக சுமார் 50க்கும் மேற்பட்ட பணியாளர்களை வைத்து 80% கட்டுமான பணிகளை முடித்து விட்டனர். அச்சமயத்தில் பொதுமக்கள் சார்பாக கோவில்பாளையம் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. காவல்துறையினர் தேர்தல் பணியில் இருக்கும் நேரமாக பார்த்து இவ்வேலையை செய்தனர். அது மட்டுமில்லாமல், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து வருவாய் கோட்டாசியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் மீண்டும் போலியான ஆவணம் மூலமாக பெற்ற அனுமதி கடிதத்தை வைத்து கட்டிட பணியைத் தொடர்ந்து மீண்டும் ஒரு 5% பணியைச் செய்தனர். இவர்களின் இந்த அயோக்கியத்தனத்தை ஹிந்துக்கள் வெளிக்கொணர்ந்தனர். அதன்பின் மாவட்ட ஆட்சியர், காவல்துறை, வருவாய் கோட்டாச்சியர் முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை கட்டிட பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டு பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில், கிறிஸ்தவர்கள் ஜோசப் விஜய் ஆட்சியமைத்த அன்றே மீண்டும் சர்ச்சை கட்டத் தொடங்கினார்கள். ஹிந்துக்கள் மீண்டும் போராட்டம் நடத்தி அதை தடுத்து நிறுத்தினார்கள். அதற்கு பின் கிறிஸ்தவர்களின் சட்டவிரோதச் செயலை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் 29.06.2026 அன்று சட்டவிரோத சர்ச் கட்டுவதற்கு இடைக்கால தடையுத்தரவு வழங்கி தீர்ப்பு அளித்தனர்.

ஜோசப் விஜய் ஆட்சிக்கு வந்தவுடன் சட்டசபை சுவிஷே சபை ஆகிறது. வாணியம்பாடி பகுதியில் கிராமம்தோறும் சர்ச் கட்டவேண்டும் என்ற கோரிக்கையுடன் தவெக பெயரில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. இந்த போஸ்டர்கள் ஒட்டியவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே போன்று, ஜோசப் விஜய் ஆட்சி அமைத்தவுடனேயே இப்படி சர்ச் கட்ட தொடங்குகிறார்கள் என்பதையெல்லாம் வைத்து பார்க்கும் போது, சட்டவிரோத செயல்களில் ஈடுபட கிறிஸ்தவர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர் என்பது புலனாகிறது. அது மட்டுமல்லாமல் தங்களுக்கான ஆட்சி என்ற மனோபாவமும் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை நம்மால் தெளிவாக உணர முடிகிறது. எல்லாருக்குமான ஆட்சி இது என்று முழங்கி கொண்டு இருக்கும் ஜோசப் விஜய் இந்த அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பாரா?

சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்து ஒரு சட்டவிரோத செயலை செய்வதற்குத் தொடர்ந்து 16 ஆண்டுகளாக உதவி செய்து வரும் கிறிஸ்தவ நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும். ஹிந்துக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் எப்படியாவது சர்ச் கட்ட வேண்டும் என்பதற்காக சட்ட ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் இந்நிறுவனங்கள் பொது அமைதிக்கு ஆபத்தானவை. இந்த சி.எஸ்.ஐ பிரிவு நிறுவனங்கள் தான் கூடங்குளம் அணு உலையை தடுத்து நிறுத்த வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெற்றன என்று அப்போதைய காங்கிரஸ் அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். இதே, மதப்பிரிவின் பின்னணி கொண்ட சர்ச் தான் இந்த சட்டவிரோத செயலில் ஈடுபடுகிறது. இந்த சர்ச்சுகள் மதத்தைக் கடந்து நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் கூடாரங்களாக செயல்படும் என்பதில் சந்தேகமில்லை.

# தென்காசி கோசாலை கொடூரம் தொடரும் EO பொன்னியின் அராஜகம்

வீரவேலுநாச்சியார்

வடநாட்டில் இருக்கும் காசி விஸ்வநாதரைப் போல தென்னகத்தின் காசியாக விளங்கும் தென்காசியில் உள்ள அருள்மிகு உலகம்மன் உடனுறை காசி விஸ்வநாதர் கோயிலில் கடந்த 25 வருடமாக உழவாரப்பணி செய்துவரும் தாயப்பன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய தனது புகார் மனுவை ஸ்ரீடிவிக்கு அனுப்பி அது குறித்து பேசிட வேண்டுமாய் கேட்டுக்கொண்டார். அந்த மனுவை பிரித்து படித்த போது தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. அப்படியென்ன நேர்ந்து விட்டது? என கேட்போருக்கு, தென்னாடுடைய சிவனுக்கு அல்ல அவனது அடியார்களுக்குத் தொண்டு செய்த காரியத்தை பெரியபுராணமாய் கொண்டாடும் பூமியில் நடந்த கொடுமையைப் பாருங்கள்.

கடந்த 25 ஆண்டுகளாக உழவாரப்பணியும், கோயிலில் நந்தவனம் அமைத்து பராமரித்தும் வரும் தாயப்பன் அங்கிருக்கும் கோசாலையை சுத்தம் செய்யும் பணியையும் தொடர்ந்து வந்துள்ளார். “ஆவினுக்கு அருங்கலம் அரண் அஞ்சாடுதல்” என்ற திருநாவுக்கரசரின் கூற்றுக்கு உண்மையாக சிவாலயங்களில் மிகப் புனிதமாக கருதும் பசுவை கோயிலில் நடக்கும் கோபூஜைகளுக்கும், இன்னபிற பூஜைகளுக்கு பசுவையும், கன்றையும் வைத்து பூஜை செய்வது வழக்கம். அவ்வகையில் தென்காசி கோயிலில் உள்ள கோசாலையில் கடந்த (08.05.2026) அன்று துப்புரவு பணி மேற்கொள்ள சென்றபோது தொழுவத்திற்கு வெளியே கடும் மழையில் கட்டப்பட்டு, அந்த பசு மாடு நனைந்து, கடுங்குளிரில் உயிருக்குப் போராடியதைக் கண்டு கலங்கியுள்ளார் தாயப்பன்.

பசு இந்த நிலையில் தொடர்ந்தால் கடுங்குளிரில் இறந்து விடும் என்பதால் கோயில் பணியாளர் மூர்த்தி என்பவரிடம் நிலைமையை எடுத்துக் கூறினார் தாயப்பன். அதற்கு மூர்த்தி, இந்த கோசாலையை பராமரிக்கும் இசக்கி என்ற பணியாளர் வெளியூர் சென்று விட்டதால் கவனிக்க ஆள் இல்லை என்று பதில் கூறியுள்ளார். இதையறிந்து சிவனடியார்கள் சிவபாலன், முத்துராஜ் மற்றும் நம்பிராஜன் ஆகியோர் வேறு அடியவர்களையும் அழைத்து வந்து பசுவை தொழுவத்திற்குள் கட்டி காப்பாற்றியுள்ளனர்.

13.05.2026 அன்று கோயிலில் உழவாரப்பணி செய்து கொண்டிருந்த தாயப்பனிடம் இனி கோயில் கோசாலைக்கு சுத்தம் செய்ய வராதீர்கள், உங்களால் எனது வேலைக்கு ஆபத்து என இசக்கி கூறியதால் அதிர்ச்சியும், மன உளைச்சலுக்கும் ஆளானார் தாயப்பன். இந்நிலையில் அன்றே 10.30 மணிவாக்கில் கோயில் செயல் அலுவலர் பொன்னியிடம் என்னை ஏன் கோசாலை வரக் கூடாது எனச் சொல்லியிருக்கிறீர்கள் என கேட்டவுடன் “கண்ட கண்ட நாயெல்லாம் வளர்த்து விட்டிருக்கிறாய், உன்னை வேலையை விட்டு நீக்கிடுவேன்” என மிரட்டியதோடு, இப்படியே செஞ்சிட்டு இருந்தா உன்னால தான் மாடு செத்துப் போச்சுன்னு போலீசில் புகார் செய்வேன் எனக் கூறியதால் கோயிலுக்குச் செல்வதற்கே அச்சமாக இருப்பதுடன் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாக புகார் தெரிவிக்கிறார் தாயப்பன்.

சிவனடியார்கள், பக்தர்கள், அறச்சிந்தனையாளர்கள் கோசாலைக்குத் தேவையான தீவனம், வைக்கோல் ஆகியவற்றை தங்கள் சொந்த செலவில் வாங்கி தந்தாலும், அதனை சரியான நேரத்திற்கு பசுமாடுகளுக்குத் தருவதில்லை. இதுகுறித்து பக்தர்கள் பலமுறை புகார் தெரிவித்தாலும் அவர்களுக்கும் இதேபோன்ற மிரட்டல் தான் கடைசியில் மிச்சம். உணவு பற்றாக்குறையால் பாவம் அவதிக்குள்ளாவது என்னவோ அந்த வாயில்லா ஜீவராசிகள், அதுவும் பூஜைக்குரிய ஆவினங்கள் தான்.

ஹிந்துக்கள் தெய்வமாக வணங்கும் பசுவை சித்திரவதை செய்த கொடூர செயலுக்கு காரணமான கோயில் செயல் அலுவலர் பொன்னி மீது { prevention of cruelty to animals act 1960 Section 11} படியும், கடமையை செய்யத் தவறியதற்காகவும், கடமையை செய்ய முனைந்தவர்களை மனம்நோகச் செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கியதற்காகவும், அவர்மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாவட்ட கலெக்டருக்கு மனு அளித்துள்ளார் தாயப்பன். தற்போது அந்த பசு இறந்து விட்டதாக செய்தி வருகின்றது.

ஸ்ரீடிவியைத் தொடர்ந்து பார்க்கும் நேயர்களுக்கு EO பொன்னியின் அராஜகம் ஒன்றும் புதிதல்ல என நினைக்கலாம். ஆனால் இப்படிப்பட்டவர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் அவர் எப்படி தொடர்ந்து அதே கோயிலில் பணியாற்றுகிறார் என்பது தான் புரியவில்லை.

ரீல்ஸ்க்காக ஆய்வு செய்யாமல் மனசாட்சியுடன் நடவடிக்கை எடுப்பாரா புதிய HR&CE அமைச்சர் ரமேஷ்...பொறுத்திருந்து பார்ப்போம்!

# அரசியல் உலா

- கரிகாலன்

# அரசியல் பேசாத உலா

***எச்சரிக்கை 1:***

தனக்கான தலைவனைத் தேர்ந்தெடுக்கக் கூடிய உரிமை ஒவ்வொரு ரசிகனுக்கும் உண்டு. இது தனிப்பட்ட வாழ்விலோ, திரைப்படத் துறையிலோ, அரசியலிலோ அவர்களுக்கான தேர்வு அவரவர்களுடைய சுதந்திரம். அதை மட்டமாக நினைப்பதோ, கேவலமாய் விமர்சிப்பதோ, கொச்சைப் படுத்துவதோ மிகவும் தவறு.

ஒரு சாரார் அப்படிச் சொல்ல, நாம் அதைக் கேட்கும் பொழுது நம் மனதில் கூட களங்கம் ஏற்படக் கூடும். வக்கிர கதியில் நாமும் அதையே திருப்பிச் சொல்லக் கூடும். அப்படி தற்குறிகள் என்று அடையாளப் படுத்தப்பட்ட ரசிகக் கூட்டம் ஒன்று சமீபத்தில் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தையே நிகழ்த்திக் காட்டி இருக்கிறது.

தேர்தல் பரபரப்பு வாக்கு எண்ணிக்கையோடு முடிந்துவிடவில்லை. இது சிறுபான்மை அரசு என்பதால் ஆட்சி அமைக்க, பெரும்பான்மை பெற, அதைத் தக்க வைக்க நடக்கும் அரசியல் பரபரப்புகள் சில தொகுதிகளில் மறுதேர்தல் வரை கொண்டு வந்திருக்கின்றது.

வெயில் காலம் என்பதனால் இப்பொழுது எல்லாம் மிதமான வேகத்தில் நடந்தாலே வெகுவாக வேர்க்கிறது. மட்டுப்படுத்தப்பட்ட வேகத்தில் நடக்கும் பொழுது நம்மைக் கடப்போரின் பேச்சுக்'கள்' நம் காதுகளில் நீண்ட நேரம் ஒலிக்கின்றன.

தேர்தல் தோல்விக்கான காரணங்களை அலசும் பலரும், இது தோல்வியே இல்லை வெற்றி என்று நியாயப்படுத்தும் சிலரும் அன்றாடம் வாக்குவாதம் செய்வதை நாம் கேட்க முடிகிறது.

இது ஆட்சி மாற்றம் இல்லை வெறும் காட்சி மாற்றம் தான் என்று பலரும் சொல்கிறார்கள். மந்தை மட்டும்தான் புதிதா? கள்ளும் புதிதா? போகப் போகத் தெரிந்து விடும், எதுவாக இருந்தாலும் ஆறு மாதங்களில் புளித்து விடும். ஆனால் எத்தனை மாதங்கள் ஆனாலும் பரபரப்பு'கள்' ஓயப் போவதில்லை.

***எச்சரிக்கை 2:***

தற்குறி எனச் சொல்வது தவறெனக் கட்டுரையின் தொடக்கத்தில் எழுதி இருக்கிறேன். தற்குறி அல்ல சிலுவைக்குறி என ஏற்கனவே அம்பலமாகி விட்டது. அது உங்களுக்கு இப்பொழுது இல்லா விட்டாலும் போகப் போகப் புரியும்.

ஆட்சி, கூட்டணி, உட்கட்சி விவகாரங்கள் என அரசியல் சூடு தணியாத போது அக்னி நட்சத்திரமும் சுட்டு எரிக்கிறது. உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் வெளிநாட்டு வீரர்களையும் ஏலம் எடுத்து ஆடும் ஐபிஎல் தொடரின் எதிர்பார்ப்பு'கள்' கூடி இப்போது தான் அடங்கி இருக்கிறது.

இத்தனைப் பரபரப்புகளுக்கு நடுவே என்றும் இதமாக இருப்பது காலை வேளையில் காலாற நடக்கும் அந்த ஒரு பொழுது மட்டுமே. கோடையின் உக்கிரத்தில் பல கொடுமைகளைப் பார்த்து விட்ட நாம் இந்த ஒரு வாரமாவது அரசியலுக்கு ஓய்வு கொடுக்கலாம் என எண்ணினேன். பாஜகவைப் பற்றி எழுதுவதாக இருந்ததை நினைவூட்டினார் நண்பர் ஒருவர். அதை விடவும் முக்கியமான ஒரு விஷயத்தை இங்கே எழுத வேண்டியது அவசியமாகிறது.

அங்காடித் தெரு அரட்டையில் அரசியல் இல்லாமலா? அதற்கு வாய்ப்பே இல்லையே! - அடித்துச் சொன்னார் அந்த அண்ணாச்சி. அதையும் தான் முயற்சி செய்து பார்ப்போமே என்று சவால் விட்டேன். அதுவே இந்த வார அரட்டைத் தொகுப்பாக, இந்த இதழின் கட்டுரையில் ஒரு பாகமாக வெளிவருகிறது.

***எச்சரிக்கை 3:***

கட்டுரையில் கட்டாயம் அரசியல் கலக்கவே இல்லை. கிரிக்கெட் பந்தய, மோட்டார் பந்தய "தல" ரசிகர்கள் கோபித்துக் கொள்ள வேண்டாம். கட்டுரையாளரே "தல ரசிகன்" தான் என்பதை மனதில் கொள்ளுங்கள். சமீபத்திய நிகழ்வுகளின் பிரதிபலிப்பே கட்டுரையாக வெளிவந்துள்ளது.

***சிஎஸ்கே அணி எவ்ளோ மோசமா ஆடினாலும் அதை ஆதரிக்க, ஆர்ப்பரிக்க வெறித்தனமான மஞ்ச சட்டைக் கூட்டம். அணிக்காக, குறிப்பா "தல"க்காக பந்துக்குப் பந்து ஓயாத விசில் சத்தம். வெளி மாநிலத்துல இருந்து இங்க வந்த, எங்கிருந்தோ வந்த எவனுக்கெல்லாமோ விசில் அடிக்க தமிழன் எப்பவுமே தயாரா இருக்கான்.***

***ஓரமா உட்கார்ந்து எல்லாத்தயும் வேடிக்கை பாத்துட்டுருந்த ஒரு நடிகன் தன் ரசிகர்கள் கிட்ட இருக்கிற அதே மனோபாவம் தமிழர்கள் மத்தியில பரவலா இருக்கறதா உணர்ந்தான். சில திட்டங்களைச் செயல் படுத்தினான். அந்தக் கூட்டம் அதிகமாகி இப்போ அவனுக்காக விசில் அடிக்குது.***

## *தல போல வருமா!*

***எச்சரிக்கை:***

*நாம் சொல்லப் போகும் செய்தி உங்களில் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம். இப்படி எல்லாம் நடக்குமா என்று நினைக்கலாம், இதெல்லாம் அதிர்ச்சியா என்று கூட கேட்கலாம். ஆனால் ஏதாவது ஒரு கட்டத்தில் அதை நாம் சொல்லியே ஆக வேண்டும்.*

***முன்கதைச் சுருக்கம்:***

*இந்த வருட ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணியின் முன்னாள் தலைவர் "தல" தோனி உடற்தகுதி காரணமாக இந்தத் தொடரின் ஆரம்பக் கட்டத்தில் எந்த ஆட்டத்திலும் விளையாடவில்லை. கடைசி*

***தல எனும் மாயபிம்பம்***

*"தல" மட்டும் ஆடி இருந்தா... அடுத்த ஆட்டம் பாரு, நாமதான் ஜெயிக்கிறோம்..! - ஒவ்வொரு ஆட்டத்துலயும் ஒவ்வொரு கட்டத்துலயும் தோத்ததும் இப்படித்தான் சப்பைக்கட்டு கட்டுறாங்க. "தல" பெரிய தாதாங்கிற மாய பிம்பம் இங்கே இன்னும் கலையவே இல்லை.*

*அந்தக் காலத்துல அவன விட நல்ல ஆடுறது கஷ்டம். ஆனா இன்னிக்கும் அவன் அப்படியே ஆடுவான்னு நினைச்சா நமக்குத் தான் நஷ்டம். இன்னிய தேதியில அவன் நமத்துப் போன பட்டாசு, வெறும் வெத்து வேட்டு. புரியும்படிச் சொன்னா "தல" தொங்கி போச்சு.*

*நிர்வாகம் தல மேல போட்ட முதலீடு அதிகம். அதை சும்மா விட்டுடாம முடிஞ்ச வரைக்கும் நம்மகிட்ட இருந்து கறக்கப் பார்க்கறாங்க. வைக்கோல் கன்னுக்குட்டியக் காட்டி மாடு கறக்குற மாதிரி "தல" பேரச் சொல்லி டிக்கெட் விக்குது ஐபிஎல்.*

*ஆட்டமே முடிஞ்சு போச்சு, இதுவரைக்கும் ஒன்னும் தேறல. என்னன்னு கேட்டா அடுத்த வருஷம் ஆடுவாருன்னு கதை விடுறாங்க. அதையும் சில பேரு நம்புறாங்க. ஆனா இனி அவன் வரப்போறதில்ல. அடுத்த வருஷம் அவன் பங்களிப்பு வேற விதமா இருக்கலாம். ஆனா அது கூட முதலீடு செஞ்சவங்க முடிவு செய்ய வேண்டியது.*




*சிஎஸ்கே ரசிகர்கள் தான் பாவம். தல வருவான்னு ஒவ்வொரு தொடரா தேவுடு காத்துகிட்டு இருக்காங்க. அவங்களையும் குறை சொல்ல முடியாது. தன்னோட அணி ஜெயிக்கனும்னு நினைக்கிறாங்க.*

*நோக்கம் தப்பில்ல. தல வருவான், ஜெயிச்சுக் கொடுப்பான்னு நம்பினாங்க. எதிர்பார்ப்பும் தப்பில்ல. பலமான அணி தான், தல கூட திறமையான வீரன் தான். காலப்போக்குல பலம் குறைஞ்சு போச்சு, திறமை தீஞ்சு போச்சு, மொத்தத்துல எதிர்பார்ப்பு மோசம் போச்சு.*

*நோக்கத்தைத் தாண்டின எதிர்பார்ப்பு தனிநபர் "தல" மேல சுமையைக் கூட்டுது. சமீப காலமாக சரியாக ஆட முடியாத "தல" இனி வர்ற வருஷங்கள்ல யாருமே இல்லாம கூட தனியா ஒரு அணி ஆரம்பிச்சு அவர் மட்டுமே ஆடனும்னு தல ரசிகர் மன்ற போர் தளபதிகள் ஆசைப்படுறாங்க. ஐபிஎல் விதி அதை அனுமதிக்குமான்னு தெரியல!*

# தமிழகம் வந்த சோழர் கால பொக்கிஷம்

லலிதாம்பிகா

**ஆனைமங்கலம் செப்பேடு திரும்பிய காலவரிசை நிகழ்வுகள்**

ஆனைமங்கலம் செப்பேடு சோழர் காலத்து வரலாற்றுப் பொக்கிஷமாகும். இது 21 செப்பேடுகளால் ஆனது, இருமொழியில் எழுதப்பட்டுள்ளது. நெதர்லாந்தில் இருந்த இவை இந்தியாவிற்கு திரும்புகிறது.

செப்பேடுகள் 30 கிலோ எடையுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

முதல் 5 செப்பேடுகள் சமஸ்கிருதம், மீதி 16 தமிழ்.

26 கிராமங்கள் தானமாக வழங்கப்பட்ட தகவல் உள்ளது.

செப்பேடு நெதர்லாந்து அருங்காட்சியகத்தில் இருந்தது.

இப்படி சுருக்கமாக சொல்லி விடலாம். ஆனால் அது திரும்பிய வரலாறு அவ்வளவு எளிதாக நடந்து விடவில்லை.

**ஆனைமங்கலம் செப்பேடு வரலாறு:**

கி.பி. 985 - 1014 காலகட்டத்தில், தஞ்சையில் மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சி செய்து கொண்டிருந்தார். அப்போது இன்றைய இந்தோனேசியப் பகுதியான 'ஸ்ரீவிஜய' நாட்டின் சைலேந்திரகுல மன்னரான மாற விஜயதுங்க வர்மன், தன் தந்தையின் நினைவாக நாகப்பட்டினத்தில் 'சூடாமணி விகாரம்' என்ற பிரம்மாண்ட பௌத்த வழிபாட்டுத் தலத்தைக் கட்டுகிறார்.மத நல்லிணக்கத்திற்குப் பெயர்பெற்ற இராஜராஜ சே ாழன், அந்த பௌத்த விகாரத்திற்கான பராமரிப்புச் செலவுகளுக்காக 'ஆனைமங்கலம்' கிராமத்தின் மொத்த நில வருவாயையும் தானமாக வழங்க வாய்மொழியாக ஆணையிடுகிறார். தந்தையின் அந்த வரலாற்று ஆணையை, அவரது வீரம் செறிந்த மகன் முதலாம் இராஜேந்திர சோழன் செப்புத் தகடுகளில் நிரந்தர சாசனமாகப் பொறித்து வைக்கிறார். இதுவே 'ஆனைமங்கலம் செப்பேடு'.

**தானமாய் தந்த ஊர்:**

இராஜேந்திர சோழன் காலத்து கல்வி, கலாச்சாரம், அரசியல், கட்டடக்கலை, பொருளாதாரம் மற்றும் ஆட்சியமைப்பு பற்றிய குறிப்புகள் இதில் நுணுக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

தானமாய் தரப்பட்ட கிராமங்கள்: ஆமூர், நாணலூர், புத்தாகுடி, மூஞ்சிகுடி, சந்திரபாடி, உதய மார்த்தாண்ட நல்லூர் உள்ளிட்ட ஊர்கள் இதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இராஜராஜ சோழனின் சாதனைகளுடன் 26 கிராமங்கள் தானமாக வழங்கப்பட்ட செய்தியை இதன் மூலம் அறியலாம்.

ஒருவேளை இந்தச் செப்பேடுகள் மட்டும் நமக்குக் கிடைக்காமல் போயிருந்தால், உலகப் புகழ்பெற்ற சோழப் பேரரசின் முழுமையான வரலாற்றை நாம் காலவரிசையில் அறிய முடியாமலே போயிருக்கும்."கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகளை விட செப்பேடுகள் என்பவை மன்னர்களின் நேரடி ஆணைக்கான சாசனங்கள். ஓலைச்சுவடிகள் போல இவை இயற்கையாக அழிவதில்லை. ஆனால், செம்பின் உபயோகத்திற்காகப் பல செப்பேடுகள் பிற்காலத்தில் உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக உருவாக்கப்பட்டன. அத்தகைய இழப்புகளையும் தாண்டி நமக்குக் கிடைத்திருக்கும் இந்த ஆனைமங்கலம் செப்பேடு ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் என்கிறார் முனைவர் ஹரி கிருஷ்ணன் (ஜூனியர் விகடன்)இந்தச் செப்பேடு உருவான வரலாற்றுப் பின்னணிக்கு இணையாக, அது நெதர்லாந்து சென்ற கதையும் முக்கியமானது. அன்றைய நாகப்பட்டினம் இன்றைய சென்னை துறைமுகத்தைப் போல சீனா, ஜாவா, ஸ்ரீவிஜயம் போன்ற நாடுகளின் வணிகர்கள் வந்து இறங்கும் பரபரப்பான சர்வதேச துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. 1660-ல் வந்த டச்சு பயணி வௌட்டர் ஸ்கௌட்டன் (Wouter Schouten) மற்றும் 1724-ல் வந்த டச்சு போதகர் ஆகியோர் இந்த சூடாமணி விகாரையைப் பார்த்து, "இது சீனக் கோபுரம் போல பிரம்மாண்டமாக உள்ளது" என்று வியந்து எழுதியுள்ளனர்.

ஆனால், சோழர்களின் இந்த கலைப் பொக்கிஷம் 1867 ஆகஸ்ட் 28 அன்று, உள்ளூர் மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, பிரெஞ்சுக்காரர் ஒருவர் கல்லூரி கட்டுவதற்காக அன்றைய கவர்னர் உத்தரவின் பேரில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதிலிருந்து, பாரத பண்பாட்டை அழிப்பதில் கிறிஸ்தவர்கள் எப்படி முனைப்புடன் செயல்பட்டார்கள் என்பதை உணரமுடியும்.

**செப்பேடுகள் நெதர்லாந்துக்குக் கடத்தப்பட்டது எப்படி?**

கி.பி. 1700-களில் தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகள் டச்சு கிழக்கு இந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டில் இருந்தன. அப்போது இங்கு வந்த ஃப்ளோரன்சியஸ் கேம்பர் (Florencius Camper) என்ற டச்சு பாதிரி இந்த மதிப்புமிக்க சோழர் காலத்துச் செப்பேடுகளை தன் சொந்த நாடான நெதர்லாந்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார். அவரின் வழிவந்தவர்களிடமிருந்து, திருமண உறவுகள் மூலம் ஹமேக்கர் குடும்பத்திற்கு இந்தச் செப்பேடுகள்

கைமாறின. இறுதியில் 1862-ல் பேராசிரியர் எச்.ஏ. ஹமேக்கர் குடும்பத்தினரால் நெதர்லாந்தின் புகழ்பெற்ற ‘லெய்டன் அருங்காட்சியகத்திற்கு’ இந்தச் செப்பேடுகள் வழங்கப்பட்டன. அங்குள்ள பல்கலைக்கழகத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாக்கப்பட்டதால், உலக வரலாற்றில் இது “லீடன் பட்டயங்கள்” என்று அழைக்கப்படலாயிற்று.

**சு.வெங்கடேசனின் வரலாற்று திரிபுகள்:**

பௌத்த விகாரம் கிறிஸ்தவர்களால் இடிக்கப்பட்டதையும், செப்பேடுகள் நெதர்லாந்திற்கு பாதிரி கொண்டு சென்றதையும் அவர்களே ஒத்துக்கொண்ட நிலையில், சோழர்களின் பொக்கிஷத்தை கிறிஸ்தவர்கள் பேணி காத்தனர் என உருட்டுவது ஒரு பக்கம் என்றால், சோழர்கள் ஆட்சிகால பொக்கிஷம் இன்று இந்தியா திரும்பும் செப்புப்பட்டயங்கள் தமிழகத்திற்கு கொண்டு வந்து காட்சிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை கொஞ்சமும் கூச்சமின்றி மத்திய அரசிடம் வைக்கிறார். அது தமிழர்களின் பாரம்பரிய பொக்கிஷம் என இப்போது விதந்தோதும் சு.வெங்கடேசன் தமிழின் உன்னத சின்னமான “செங்கோல்” ஐ பாராளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் நிறுவப்பட்ட போது சோழர்களின் “அந்தப்புரத்து” கதைகளை பாராளுமன்ற விவாதத்தில் பதிவு செய்தவர் தான் இந்த மனவக்கிர கம்யூனிஸ எம்.பி என்பதை மறந்து விடக்கூடாது. இவரின் வரலாற்று திரிபுகளை வரிக்கு வரி “Politalks” யூடியூப் தளம் தக்க பதிலடியாக பதிவேற்றிய வீடியோ இணைய பயன்பாட்டாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

**அட்வகெட் ஜெகந்நாத் பங்களிப்பு:**

நெதர்லாந்தில் உள்ள லெய்டன் மியூஸித்தில் வைக்கப்பட்டிருந்த ஆனைமங்கலம் செப்பேடுகளை இந்தியா மீட்ட வரலாற்றை நமது ஸ்ரீ டிவிக்கு தந்த தனது பேட்டியில் விரிவாக விவரித்துள்ளார். அந்த வீடியோவுக்கான க்யூஆர் கோடு கீழே கொடுத்துள்ளோம். தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்களாக இருக்கும் கோயில்களின் தெய்வத் திருமேனிகள், செப்புப் பட்டயங்கள் உலகில் எங்கெல்லாம் இருக்கிறதோ அதை மீட்பதற்கான முனைப்பு தமிழர்களிடம் உள்ளது என்பதை பதிவு செய்ய ஒரு மனுவை தாக்கல் செய்திருக்கிறார் ஜெகந்நாத். சிலை கடத்தல் தொடர்பாக தனது ப்ளாகில் எழுதி வரும் விஜய் அவர்களின் பங்களிப்பை நினைவு கூர்ந்த ஜெகந்நாத், 2018ல் மத்திய அரசுக்கு மனு அளித்துள்ளார்.

அப்போது வெளிவுறவுத்துறை அமைச்சராக இருந்த சுஷ்மா ஸ்வராஜ் சம்மந்தப்பட்ட தொல்லியல் துறை, கலாச்சாரத் துறைகளுக்கு பரிந்துரைத்தார். இந்திய வெளிவுறவுத் துறையின் செயலாளராக இருந்த டாக்டர் ஜெய்சங்கர், அமைச்சரான பின்பும் இந்திய பொக்கிஷங்களை மீட்க முழு முயற்சி கொண்டார். தமிழர்களின் பண்பாட்டு கருவூலம் மீட்கப்பட்டதில் MEA அதிகாரிகளின் ராஜதந்திர ரீதியான செயல்பாடுகள் தான் முழுமுதற்காரணம் என கூறுகிறார் ஜெகந்நாத்.

**மீட்கத் தொடுத்த வழக்கு:**

வெளிநாடுகளில் உள்ள இந்திய கலை பொக்கிஷங்கள் சிலை, பட்டயங்கள் என அனைத்தையும் மீட்க ஏப்ரல் 2019ல் அட்வகெட் ஜெகந்நாத் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கு நீதியரசர் மகாதேவன், ஆதிகேசவலு அமர்வில் விசாரிக்கப்பட்டது. தமிழர்களின் தன்னிகரில்லா இல்லாத பொக்கிஷத்தை மீட்பதோடு, அதை பேணிக் காப்பது நம் கடமை என்பதை வலியுறுத்தி மத்திய அரசுக்கு உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டனர். இது மத்திய அரசு மீதான எதிர்வழக்காக இல்லாமல் அரசுடன் இணைந்து பட்டயங்களை மீட்கும் நடவடிக்கையில் துணையாக இருக்கிறோம் என்றே தாக்கல் செய்யப்பட்டது. இந்த மீட்பு நடவடிக்கையில் மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரல் ராஜேஷ் விவேகானந்தனின் பங்களிப்பும் மிக முக்கியமானது என தனது பேட்டியில் தெரிவிக்கிறார் ஜெகந்நாத்.

**தடுக்கும் சர்வதேசச் சட்டங்கள்; வெற்றி தந்த ‘நல்லெண்ணம்’:**

இந்தியாவில் 1878-ல் கொண்டுவரப்பட்ட ‘Indian Treasure Trove’ சட்டத்திற்கு முன்பே இந்தச் செப்பேடுகள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டன. அதேபோல், 1970-ன் யுனெஸ்கோ விதிமுறைகளும் இதற்குப் பொருந்தாது என்பதால் சட்டப்படி இதை இந்தியா கோர முடியாத நிலையில் தமிழர்களின் கலாச்சார முக்கியத்துவத்தை உணர்ந்த நெதர்லாந்து அரசு, நல்லெண்ண அடிப்படையில் (Goodwill gesture) இந்தச் செப்பேடுகளை இந்திய அரசிடம் ஒப்படைக்க முன்வந்தது. யுனெஸ்கோவின் சர்வதேச விதிகளின்படி, கடந்த பல ஆண்டுகளாக இந்திய அரசு நடத்திய தீவிர தூதரக செயல்பாட்டிற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

தமிழ் பண்பாடு, கலாச்சாரத்தின் மீது தூய்மையான பற்றுதலும், அக்கறையும் கொண்ட பிரதமர் நரேந்திர மோடியால் ஆனைமங்கலம் செப்பேடு மீட்கப் பட்டிருப்பதை நாம் தமிழர்கள் மத்தியில் வலிமையான பிரச்சாரம் மூலம் கொண்டு சேர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இன்னும் பல முக்கியமான, சுவாரஸ்யமான தகவல்களை அட்வகெட் ஜெகந்நாத் பகிர்ந்து கொண்டதை

# உறங்காத ஊர்வம்பு

-ராயன்




அந்த ஏ.சி.ய போடுப்பா! என்ன வெயிலு என ராயன் நியூஸ் டெஸ்கில் வந்து உட்கார்ந்த உடனே கல்யாணிடம் சொன்னார். நான் உட்கார்ந்து இருக்கும் இடத்துல ஏசி ஜில்லுனு பொரனில அடிக்குது என பதில் சொல்லிவிட்டு ஆன் செய்தார்.

சரி, தமிழக அரசியல் ஒரே பரபரப்பா போய்ட்டு இருக்கு. ஒவ்வொரு கட்சியிலும் நடக்கும் விஷயங்களை அப்டேட் சொல்லுங்க என்றார் கரண்ஜி.

தலைமைச் செயலகம் போனா எந்த அமைச்சரையும் காணல, கேட்டா எல்லாரும் ஆய்வுக்கு போயிருக்காங்கன்னு துறை செயலர்கள் சொன்னாங்க, துறையை கவனிக்கும் நீங்களும் அமைச்சரோடு ஆய்வுக்கு போயிருக்கணும் தானே எனக் கேட்டதற்கு, நீங்க வர வேண்டாம் சார், ஒரு கேமராமேன், லைட்மேன் மட்டும் போதும்னு சொல்லிட்டாங்க என பதில் சொன்னார் அதிகாரி. நான் விழிப்பதைப் பார்த்து அதான் சார், ரீல்ஸ் எடுக்கத் தான் என பளீர்னு சொன்னாரு.

நான் ஷார்ட்ஸ் ஸ்க்ரோல் பண்ணும் போது அவ்வளவும் ஆய்வு செஞ்ச வீடியோ என வருதுண்ணா என்றார் எடிட்டர் போத்தன். எப்படி மனு கொடுப்பதும், அதன் மீது நடவடிக்கை எடுப்பதும் மனு கொடுக்குறவங்க ஒரே ட்ரஸ், ப்ராப்பர்டியில இருப்பதையெல்லாம் பார்க்கும் போது டைரக்ஷன், எடிட்டிங் வேற லெவலில் இருக்குன்னு தன்னோட சப்ஜெட் ஒட்டி சொன்னார்.

அமைச்சர் அர்ச்சனா, ச்சீ சாரி கீர்த்தனா தமிழகத்துக்கு தொழில் முதலீடு வர வைக்க போட்ட இங்க்லீஷ் வீடியோ செம்ம ரீச், அதைப் பார்த்து ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு மகன் நாரா லோகேஷ் லைக் போட்டு சப்போர்ட் செஞ்சிருக்காரு என தனது க்ரஷை மறைத்துக் கொண்டு வெட்கப்பட்டுக் கொண்டே ராம் சொன்னதும் எல்லோரும் ஒரே கோஷத்தில் இனி மேயரை விட்டுட்டு அமைச்சரா என கிண்டலடித்தனர்.

திமுககாரங்க கல்யாண வீட்லயே கருமாதி செய்யுறத பார்த்தீங்களா எனக் கேட்ட குமார், அவரே தொடர்ந்து உதய்ணா, திருவாரூர் பூண்டி கலைவாணன் வீட்டு கல்யாணத்துல தான் இந்த ஒப்பாரி கூத்து நடந்தது. மணமக்களை வாழ்த்தினாங்களோ இல்லையோ தவெக நாசமா போகணும் என வந்தவங்க பொருமிக் கொண்டே இருந்தாங்க. அடப்பாவமே அந்த புதுமணதம்பதி பாவம்யா என்றார் ராயன்.

அதிமுக கோட்டையின் செங்கல் ஒவ்வொன்றாக உலுத்து போய் விழுதே அந்தக் கதை தெரியுமா? என்றார் AK அங்கே நடக்கும் உள்ளே, வெளியே விளையாட்டையா சொல்றீங்க என அப்பாவியாக கேட்ட ராயனிடம், அந்தக் கட்சிக்கு பொம்பள சாபம் ஏதோ இருக்கு போல என்றார் உள்குத்தாக. அட ஆமாம் ப்ரோ, ஜெயலலிதா, சசிகலா வரிசையில் இப்ப லீமா ரோஸ் தான் பவர் சென்டர்.

அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆதவ் அர்ஜுனா தவெகவின் மிக முக்கிய பவர் சென்டரா இருக்காரு, இன்னொருத்தர் புதுச்சேரியில் புது சரக்கோடு வலம் வருகிறார். இப்படி அந்த ஒரே குடும்பத்துக்கு அதிர்ஷ்ட லாட்டரி அடிச்சு தூக்குது என பூடகமாக பேசி முடித்தார்.

65 வருஷத்துக்கு அப்புறமா அமைச்சராக சட்டமன்றதுக்குள்ளே கதர் சட்டை உள்ளே போறோம் என மாணிக்தாக்கூர் பேசுனத கேட்டீங்களா என அடுத்த சப்ஜெக்ட்டுக்கு தாவினார் கரண்ஜி.

ஆமாம், ஜி! சத்தியமூர்த்தி பவனின் சண்டை போட்டு வேட்டி, சட்டை கிழிஞ்சு அண்டர்வேரோட அலையுற கட்சிக்காரங்க இப்ப முழு வேட்டி, சட்டையோட சட்டமன்றத்துக்குள்ளே போவது என்னவோ ஜாக்பாட் தானே. கூட்டணி கட்சிக்கு நன்றி கூட சொல்லாம நயவஞ்சகமாக அரசியல் செய்வதை உதய்ணா பொங்கியதும், இளைஞரணி கூட்டத்திலே காங்கிரஸை கண்டிச்சு தீர்மானமே போட்டாங்களே என்றார் ராயன்.

திமுக மீது ஆயிரம் சொல்லுங்க, ஆனா அவங்க




அப்டேட் ஆகுற ஸ்பீடு இருக்கே, அதைப் பாராட்டியே ஆகனும் சார் என்றார் ஆபிஸ் AI பிஸ்தா மௌலி. அதுவும் GenZDMK கூட்டம் போட்டு அலப்பறை கொடுத்தது வேறலெவல் என தன் பங்குக்கு முரட்டு முட்டு கொடுத்தார். ஓஹ் அதனால தான் உங்க உதய்ணா தமிங்க்லிஷில் அறிக்கை வெளியிடுறாரா?. அதுசரி திமுகவை எந்த கொம்பனாலும் அசைக்க முடியாதுன்னு திரும்ப திரும்ப டி.ஆர்.பி.ராஜா பேசிய வீடியோவை நானும் பார்த்தேன். அப்ப என் கண்ணுல கொளத்தூர்ல ஸ்டாலினை ஜெயிச்சதும் ஆல் ஃபினிஷ்டு ரெண்டு கையையும் ஆட்டுனாரே தவெக எம்.எல்.ஏ வி.சு.பாபு அது தான் தெரிஞ்சது. பேசிய ராஜாவும் தோத்து, முதல்வரும் தோல்வியடைஞ்ச பிறகும் திமுகவை எந்த கொம்பனாலும் ஆட்ட முடியாதுன்னு சொல்றார்னா அவங்க கம்பெனி சரக்குல போதையில்லைன்னு தான் அர்த்தம்.

அதைவிடு, அது என்ன திமுக கொத்தூஸ்? என ராயன் கேட்டது தான் தாமதம், அதுவந்து முரட்டு உ.பி, பரம்பரை கொத்தடிமை, அறிவாலய டாபர், 200 உ.பிஸ் என பலதும் இருப்பது போல கொத்தடிமையின் 2.0 வெர்ஷன் தான் கொத்தூஸ் என பகிர்ந்தார் மௌலி.

ஒரு டவுட் அந்த கொத்தூஸாக யாருக்கு இருப்பீங்க உதயண்ணாவுக்கா? இன்பாவுகா? என ராயன் கேட்க உதய்க்கு ஆர்மியாகவும் இன்பாவுக்கு கொத்தூஸாகவும் இருப்பதாக முடிவெடுத்திருக்கோம் என்றார் மௌலி.

சமீபத்தில் உங்களைக் கவர்ந்த ப்ரஸ்மீட் எது என ராயன் பொதுவாக கேட்க..

திருவெறும்பூர் எம்.எல்.ஏ நவல்பட்டு விஜி குப்பைகளை அகற்ற சொன்ன ஐடியா தான் ஆட்டம் காண வைத்தது. 1500 அடிக்கு குழிதோண்டி குப்பைகளை டன் கணக்கில் போட்டு புதைச்சிட்டா ப்ராப்ளம் சால்வுடு எனச் சொன்னது தெர்மகோல் டெக்னிக்கிற்கே பெரிய சவாலாக இருந்துச்சு.

தவெக எம்.எல்.ஏக்கள் பல பேரு பிரசவத்துக்கு போறது போல அந்தந்த ஏரியாவில் இருக்கும் ஆஸ்பிட்டலுக்கா போய் ஆய்வு செய்யுறாங்க. அதிலயேயும் ஒரு நர்ஸ் டாக்டர் வேஷத்துல செஞ்ச ஆய்வு தான் பெரிய ட்ரோலிங்கா ஆயிடுச்சு என கரண்ஜி மூச்சுவிடாமல் பேசி முடித்தார்.

அமைச்சரிலேயே அந்த அறநிலையத்துறை அடிச்ச சிக்ஸர் செம்மல என்றார் கல்யாண். அது ஒன்னுமில்ல, திக கோஷ்டிகள், கம்யூனிஸ கும்பல்கள் ஹிந்து சமய அறநிலையத்துறைக்கு ஒரு பிராமணரா? என கேள்வி கேட்டாங்கல்ல, அவங்களே, இவரையா நாம சொன்னோம் என வெட்கப்படுமளவிற்கு சீன் போடுறாருன்னு, இவங்க கட்சிக்கு மொத்தமாக ஓட்டுப் போட்ட, விஜய் கூட செல்ஃபி எடுத்துக் கொண்ட அர்ச்சகர்கள் புலம்புவதாக கடற்கரை கோயில் வட்டாரம் குமுறுவதாக பேச்சு என ராயன் சொல்லி முடிப்பதற்குள்

அடுத்தவங்க கதைய விடுங்க ராயன் ஜி, மத்தியில் ஆட்சியில் இருக்கும் கட்சி ஒன்னுமே பேசாம கம்முன்னு இருக்குதே அதைப் பத்தி பேசுங்க என்றார் குமார்.

ஏது பேசாம இருக்காங்களா! அப்படி அவங்களால இருக்கத் தான் முடியுமா? டெல்லிக்கு சென்று 10 நிமிடத்தில் சட்டுபுட்டுன்னு சந்திச்சாரே முதல்வர் விஜய் குறித்து, அந்தக் கட்சியின் ஆளுநர் அக்கா பேசிய "இந்த விஜய் இன்னொரு விஜயை சந்திக்கிறார்" எனச் சொன்னது சோஷியல் மீடியா சர்வரே ஜாமாகும் அளவுக்கு வைரலானதே. அந்தக் கட்சியின் மீட்டிங்கில் எது ரகசியமாக பேசினாலும் பத்திரிகைக்கு லீக் ஆயிடுது. அதனால இனி உஷாரா இருக்கனும் என தலைவர்கள் முடிவு செஞ்சிட்டாங்க என்றார் ராயன்.

லீக் ஆவதை தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்காங்க என கல்மிஷமாக கேள்வி எழுப்பிய குமாருக்கு, நம்ம செய்தி எக்காரணம் கொண்டும் வெளியில போய்டக் கூடாதுன்னு அவங்க கட்சி தலைவர்கள் தொகுதிக்கு போவதற்கு ஃபுல் ஸ்டாப் வெச்சிட்டதாக பேசிக்கிறாங்க. பரவாயில்லை அவங்க மெய்யாலுமே வித்தியாசமான கட்சி தான் என்றனர் ஆபீஸ் டீம் கோரசாக.

ஸ்ரீ தமிழ் ஃபைனலா ப்ரூஃப் பார்த்து பிரிண்டருக்கு போயிடுச்சா என CEO அம்மணியிடமிருந்து சத்தமான குரல் கேட்க, வேலுபாய்க்கு போன் அடிக்கிறேன் என்றார் கரண்ஜி..

ஊர்வம்பு பேசுறத விட்டுட்டு நம்ம கதைய பார்ப்போம் என அதே CEOவின் குரல்.




- நா.பாஸ்கரன்

| | |
|---|---|
| விஜய் வீடு தேடி வந்து எனக்கு துணை முதல்வர் பதவி கொடுத்திருப்பார் - தேமுதிக தலைவர் பிரேமலதா பேச்சு | கிடைக்காத விரக்தியிலே என்ன வேணும்னாலும் பேசலாம். பரிதாபபட்டு கிடைக்காதானு ஒரு ஏக்கம் பேச்சில தெரியுதே. |
| வள்ளுவருக்கு காவி உடையிட்டவன் அயோக்கியன் - வைகோ | தமிழர் திருமணமும், இன மானமும் என்ற புத்தகத்தில் காவித் திருவள்ளுவர் போட்டோ போட்ட பேராசிரியர் அன்பழகனையும், அதற்கு முன்னுரை எழுதிய கலைஞரையும் சொல்லறாரோ? |
| எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம்; பதவிக்காக அரசியலுக்கு வரவில்லைனு ஜோஸ் சார்லஸ் மார்டின் ரொம்ப பெருந்தன்மையா சொல்லிருக்காரே? | தொண்டர்கள் எனக்காக பொதுச்சொத்தை சேதம் செய்வதை தவிர்க்கவேண்டும்னு ஒரு அரசியல்வாதி சொன்னால், அதற்கு பொருள் சேதம் செய், நாசப்படுத்து. ஆக, ஆக, அமைச்சர் ஜோஸ் சார்ல்ஸ் மார்ட்டின் என செய்திகள் வருவதை விரைவில் பார்க்கலாம். |
| உலமாக்கள் மானிய விலையில் இருசக்கரம் வேண்டி விண்ணப்பிக்க தமிழக அரசு உத்தரவு | அடுத்து என்ன? பாதிரிமார்கள், Nunனுக்கு இரு சக்கர வாகனத்தோட நான்கு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் டிசம்பர் 25ல் வெளிவரும் என்று எதிர்பார்ப்போம்.... |
| திருப்பதி ஏழுமலையானை பவ்யமாகச் சென்று தரிசித்த எழுச்சித் தமிழர் திருமாவளவன் - செய்தி | அசிங்கமான பொம்மைகள் இருக்கும் இடம் கோவில் என்று சொன்னவரு அதை பார்க்கதான் இவ்வளவு பவ்யமா போனாரோ.. பேசின பாவத்தை தொலைக்க படியேறி போயிருக்காரு. |
| தவெகவில் இணைய 90% அதிமுகவினர் விருப்பம்னு நெடு நெடுனு வளர்ந்த அமைச்சர் ஆதவ் சொல்லிருக்காரே? | அதிமுக மட்டுமா! திமுக கூடாரத்தையும் கலைக்கிற வேலையை நீங்க லாவகமா செய்றீங்க.... திமுக கூட்டணி கட்சிகளையும் உங்க பக்கம் இழுத்துட்டீங்க .. ஆரம்பமே அசத்தல் தான் போங்க... |
| தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருக்கா? இல்லையா? என சட்ட மன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி எல்லாம் கேட்ருக்காரே? | திமுகவின் நீட்சிதான் தவெகனு பொதுமக்களும், அரசியல் ஆய்வாளர்களும் சொல்றத அவரு முன்மொழியிறாரு போல..... |

# திருவள்ளுவர் திருநாள் விழா

-வித்யாசங்கர்

வைகாசி மாதத்தில் வரும் அனுஷ நட்சத்திரம் திருவள்ளுவர் அவதரித்த நன்னாள். ஒவ்வொரு வருடமும் வைகாசி அனுஷ நட்சத்திரத்தன்று, திருவள்ளுவர் திருநாட்கழகத்தின் சார்பாக திருவள்ளுவர் பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, சென்னை கிண்டியில் உள்ள தமிழக ஆளுநர் மாளிகையில் உள்ள பாரதியார் அரங்கத்தில் 30-05-2026 சனிக்கிழமை மாலை அன்று திருவள்ளுவர் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**சிறப்பு விருந்தினர்கள்**

விழாவிற்கு தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவர்கள் தலைமை தாங்கினார். பாரதீய இதிகாச சங்கலன சமிதியின் அகில பாரதத் தலைவர்களில் ஒருவரும், மூத்த கல்வியாளர் மற்றும் தமிழாசிரியருமான திரு.T.V.ரெங்கராஜன் அவர்களும், தேனி ஸ்வாமி சித்பவானந்தா ஆசிரம தலைவரான ஸ்வாமி சமானந்தா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். நந்தனம் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பலராமன் அவர்களுக்கு சாமி.தியாகராசன் நினைவு விருது வழங்கப்பட்டது. வந்தேமாதரம், தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சிறப்பு விருந்தினர்கள் குத்து விளக்கேற்றி, பாரத அன்னைக்கும், திருவள்ளுவருக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**வில்லுப்பாட்டு**

வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம் சென்னையில் நடத்தி வரும் இலவச மாலை நேர வகுப்பு மாணவிகளின் வில்லுப்பாட்டுடன் நிகழ்ச்சி அமர்க்களமாகத் தொடங்கியது. "கடந்த 600 ஆண்டுகளாக மயிலாப்பூர் திருவள்ளுவர் கோவிலில் வைகாசி அனுஷ நன்னாளில் திருவள்ளுவர் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. 1935 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் தேதி அன்று வைகாசி அனுட நட்சத்திரத்தில் மறைமலை அடிகள் தலைமையில் பல தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் திருவள்ளுவர் தினம் கொண்டாடி இருக்கிறார்கள். திருக்குறளிலே வரும் பகவன் என்ற சொல் ஸ்ரீருத்ர மந்திரத்தில் சிவனைக் குறிக்கிறது. சங்க இலக்கியங்களில் முக்கண் பகவன் என்று சிவன் அழைக்கப்படுகிறார். அந்தமில் ஆதியம் பகவன் என்று நம்மாழ்வார் பெருமாளைக் குறிப்பிடுகிறார். எல்லா இறைவன் நாமங்களையும் பகவன் என்றுதான் அழைக்கிறோம். பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி நான்கு வேதங்கள் கூறும் மெய்ப்பொருளை, பிரம்மா தன்னை மறைத்துக் கொண்டு திருவள்ளுவர் உருவில் உரைத்ததுதான் திருக்குறள் என்று கூறியுள்ளார். இப்படியாக நமது சனாதன தர்மத்தில் உள்ள அத்தனை நூல்களின் சாராம்சமாக உள்ளது திருக்குறள். சனாதன தர்மமே திருக்குறள்." என்ற கருத்துக்களை வலியுறுத்தி இன்னிசையுடன் கூடிய வில்லுப் பாட்டு நிகழ்ச்சியினை நடத்தினர் வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையத்தின் இலவச மாலை நேர வகுப்பு மாணவிகள்.

**நூற்றாண்டு விழா**

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் நிறைவில் மேடையை அலங்கரித்த சிறப்பு விருந்தினர்களையும், அவையோரையும் திருவள்ளுவர் திருநாள் கழகத்தின் டாக்டர் ஜெகன்னாதன் வரவேற்றுப் பேசினார். அவர் தனது வரவேற்புரையில், இந்தத் திருவள்ளுவர் திருநாள் விழா இன்று புதிதாகத் தொடங்கிய விழா அல்ல. கடந்த 100 ஆண்டுகளாகச் சென்னையின் பல பகுதிகளிலும், திருநெல்வேலியிலும், தென்காசியிலும், ஆழ்வார்க்குறிச்சியிலும், இந்தியா முழுவதும், உலகின் பல பகுதிகளிலும் வைகாசி அனுடம் கொண்டாடப்பட்டதை ஆதாரத்துடன் எடுத்துரைத்தார்.

**சிறப்புரை**

அடுத்ததாக திரு.T.V.ரெங்கராஜன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நமது நாட்டின் ஆன்மா நமது தர்மம். மனிதப் பண்பு இல்லாதவன் மனிதனே அல்ல. மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர் என்று வள்ளுவர் கூறுகிறார். மனிதர்களுக்குள் அந்த மனிதப் பண்பினை உருவாக்கக் கூடிய வாழ்க்கை நெறிகளே, (code of duty) தர்மம். மேலை நாடுகளில் மனிதன் ஒரு சமுதாய விலங்கு (Man is a social animal) என்றும், அறிவுள்ள விலங்கு (Man is a rational animal) என்றும் கருதுகிறார்கள். அதனால் மனிதனை மிருக நிலைக்குக் கீழிறக்குகிறார்கள். நமது நாட்டுத் தத்துவங்கள் ஒவ்வொரு மனிதனையும் இறைவனின்

சிறு வடிவமாகப் (Man is a piece of divine) பார்க்கிறது.

மனிதனை இப்படி தெய்வ நிலைக்கு உயர்த்திட எண்ணற்ற மகான்கள் இந்த நாட்டில் அவதரித்து மக்களை மேல் நிலைக்கு உயர்த்தினர். அப்படிப்பட்ட ஞான மரபில் வந்த மகான் திருவள்ளுவர். நமது ஞான மரபு என்று தோன்றியது என்பது யாருக்கும் தெரியாது. இந்த ஞான மரபிற்கு பிறந்த தேதி (ஆதி) இல்லை. எதற்கு பிறந்த தேதி இல்லையோ அதற்கு மறையும் தேதியும் (அந்தம்) இல்லை. ஆதி அந்தம் அற்றதாக இருப்பதால் இந்த தர்மம் சனாதனம் என்று அழைக்கப்படுகிறது. நான்கு வேதங்களின் வாழ்வியல் முறைகளின் சாராம்சத்தை திருக்குறளாகத் தந்து வேதம் தமிழ் செய்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவர் மற்றும் திருக்குறளின் சிறப்புகளை திருவள்ளுவ மாலை என்ற நூலில் பல்வேறு தமிழ்ப்புலவர்கள் சிறப்புறப் பாடி உள்ளனர். அதில் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர்,

**“எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்**
**செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும் - முப்பாற்குப்**
**பாரதஞ் சீராம கதைமனுப் பண்டைமறை**
**நேர்வனமற் றில்லை நிகர்.”**

என்று பாடியுள்ளார். இந்தப் பாடலின் பொருள்: எந்தவொரு அரிய பொருளையும், எளியவர்களும் இயல்பாகப் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக எடுத்துரைத்தவர் திருவள்ளுவர். அவர் இயற்றிய முப்பாலாகிய திருக்குறளுக்கு நிகரானது வேறு எந்த நூலிலும் இல்லை. இதற்கு இணையாக வேதங்கள், மகாபாரதம், இராமாயணம், மனுதரும சாத்திரம் ஆகிய நூல்களை மட்டுமே ஒப்பிட்டுக் கூறமுடியும். இப்படி சனாதன தர்ம சாத்திரங்களின் சாரத்தைத் தமிழிலே குறுகத் தரித்ததுதான் திருக்குறள். தமிழ்ப் பண்பாடு என்பது வேதப் பண்பாடுதான். தமிழ்ப்பண்பாடு சனாதன தர்மம்தான் என்று கூறினார்.

**வேதப் பொருளே திருக்குறள்**

அடுத்ததாக அருளுரை வழங்கிய சுவாமி சமானந்தா அவர்கள்,

**ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி**
**வேதப் பொருளாய் மிக விளங்கித்**
**தீதற்றோர் உள்ளுதொறு உள்ளுத்தொறும் உள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு** என்ற பாடலைப் பாடி அதன் பொருளைக் கூறினார். திருக்குறள் படிப்பதற்கு மிகவும் எளிமையாக இருந்தாலும், அதன் ஆழமான கருத்துக்களைப் புரிந்துகொள்வது அறிஞர்களுக்கும் அரிதானது. வேதங்களின் சாரமாகி, குற்றமற்ற நல்லோர்கள் நினைக்க நினைக்க உள்ளத்தை உருக வைப்பதே திருவள்ளுவரின் திருக்குறளின் மாண்பாகும் என்று பேசி அருளாசி வழங்கினார்.

**சாமி தியாகராசன் நினைவு விருது**

திருவள்ளுவர் திருநாட் கழகத்தை மீண்டும் உயிர்ப்பித்த பெருமகனார் தமிழாகரர் சாமி தியாகராசன் அவர்கள். சென்ற ஆண்டு மறைந்த அத்தமிழ் அறிஞரின் நினைவாக கடந்த ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் தொண்டாற்றும் பேரறிஞர்களுக்கு “தமிழாகரர் சாமி தியாகராஜன் நினைவு விருது” வழங்கப்படுகிறது. இந்தாண்டு சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் க.பலராமனுக்கு, ‘தமிழாகரர் சாமி தியாகராஜன் நினைவு விருது - 2026’ மேதகு ஆளுநரால் வழங்கப்பட்டது.



**கண்ணனின் அவதாரமே திருவள்ளுவர்**

அடுத்து தலைமை உரை நிகழ்த்திய தமிழக கவர்னர் விஸ்வநாத் அர்லேக்கர் அவர்கள் கூறியதாவது திருவள்ளுவர் ஒரு மாநிலத்தின் எல்லைகளுக்குள் மட்டும் சுருங்கிவிடுபவர் அல்ல. சனாதனத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் கூட, திருவள்ளுவரின் முன்னால் வந்து தலைவணங்கித்தான் ஆக வேண்டும். அதுதான் திருவள்ளுவரின் சக்தி. ஆபத்து வரும்போதெல்லாம் அவதரிப்பேன் என, கிருஷ்ணர் கூறினார். அந்த கண்ணன் தான் ஆதி சங்கராச்சாரியராகவும், ஞானேஸ்வராகவும், துளசிதாசராகவும், திருவள்ளுவராகவும் அவதரித்திருக்கிறார். திருவள்ளுவர் போன்ற ஞானிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ, யுகத்திற்கோ மட்டும் உரியவர்கள் அல்லர். அவர்கள் எக்காலத்திற்கும் பொருத்தமானவர்கள். அதனால்தான் திருவள்ளுவருடைய சிந்தனைகளும், வாழ்வியல் முறைகளும் ‘சனாதனம்’ ஆகும். சனாதனம் என்பதற்கு ‘நித்தியமானது, என்றும் புதியது’ என்றும் பொருள். அதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. அதேபோல்தான், திருவள்ளுவரின் போதனைகளும். எனவே, அவர் சனாதனி தான். அப்படியிருக்கும் போது, அவரை சனாதனப் பாரம்பரியத்தின் சீடர் என அழைப்பதில் என்ன தவறு. அதுதான் உண்மை.” இவ்வாறு அவர் பேசினார். மகாபாரதத்தில் தருமனின் கதையை மேற்கோள் காட்டிய மேதகு ஆளுநர், நமது வாழ்வில் திருக்குறளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை இறுதியாக வலியுறுத்தினார்.

திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் துணைத் தலைவர் டாக்டர்.பத்மா நன்றி கூற வந்தேமாதரம், தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆளுநர் மாளிகை சார்பில் சிறப்பு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வேதம் தமிழ் செய்த வள்ளுவரின் விழா வெகு விமரிசையாக

# இந்திய இலங்கை எல்லையை குறிவைக்கும் பாகிஸ்தான் - ஆதரிக்கும் ஜோசப் விஜய் அரசு

**இராமகிருஷ்ணன்**

தமிழகத்தில் தவெக அரசமைத்த பின் பயங்கரவாத சக்திகளும், பிரிவினைவாத சக்திகளும் அவர்களது செயல்பாட்டை விரிவுபடுத்த தொடங்கி விட்டனர். ஜோசப் விஜயின் நிர்வாகத்திறனின்மையோ, பாராமுகமோ இதற்கு காரணமில்லை. இந்த செயல்பாட்டிற்காகவே தவெக ஆட்சியை இந்த சதிகார சக்திகள் கொண்டு வந்துள்ளன என்று தெரிகிறது. மே மாதம் 4ம்தேதி தேர்தல் முடிவுகள் வந்த நேரத்திலேயே இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்கும் வெளியே ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக உருப்பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் திராவிட கட்சிகளுக்குப் பதிலாக நாம் தமிழர், தவெக போன்ற கட்சிகளுக்கு நிதியுதவி செய்வதும் தேர்தல் வெற்றி பெற வேறு உதவிகள் செய்வதிலும் முனைப்பாக உள்ளன என்று IBC தமிழ் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தது. தேர்தல் பிரச்சாரத்தின்போதே இலங்கையைச்சேர்ந்த எம்பியான அர்சுனன் ராமநாதன் ஜோசப் விஜய்க்கு ஆதரவாக பேசத் தொடங்கினார். ஜோசப் விஜய் வெற்றி பெற்றவுடன் தமிழகம் மட்டுமல்லாமல் கச்சதீவுடன் சேர்த்து தமிழர்கள் வாழும் வடக்கு இலங்கைப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று இலங்கையில் பேசினார். இந்தப் பேச்சு பெரும் சர்ச்சையை கிளப்பியது. தமிழகத்தில் செயல்பட்டு பின் தடை செய்யப்பட்ட பல அமைப்புகள் தனித் தமிழ்நாடு என்ற பெயரில் தமிழர் வாழும் இலங்கைப்பகுதிகளையும், தமிழகத்தையும் சேர்த்து வரைபடம் வெளியிட்டது நினைவிருக்கலாம். இந்த பிரிவினைவாத ஆதரவு அமைப்புகளின் கோரிக்கையைத் தான் இந்த அர்சுனன் ராமநாதன் எதிரொலித்திருக்கிறார். ஜோசப் விஜய் பொறுப்பெடுத்தபின் தமிழகத்தில் சில நிகழ்ச்சி களில் கலந்து கொள்ள அர்சுனன் ராமநாதனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. இந்த அழைப்பை ஏற்று இலங்கையிலிருந்து சென்னை வந்த அர்சுனன் ராமநாதன் விடுதலை சிறுத்தைகள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இலங்கை விடுதலை புலிகள் மீது இன்றும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு பயம் இருக்கிறது இதற்கு காரணம் தமிழகத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் விடுதலை சிறுத்தைகள் தான் என்று அவர் பேசினார்.

இலங்கையிலிருந்து தமிழகம் வந்த அர்சுனன் ராமநாதன் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மற்றும் இராஜ் மோகனை சந்தித்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்திய பிரபாகரன் நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அர்சுனன் ராமநாதன் சீமானை ஏமாற்றுகாரர் என்று சொல்லி, விடுதலை சிறுத்தை கட்சி தான் இலங்கை போராளிகளுக்கு உதவியதாக பேசினார். தமிழக தேர்தலுக்கு சற்று முன் பேட்டியளித்த வன்னியரசு சீமான் ஏமாற்றுகாரர் என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி போலி பாஸ்போர்ட், ஆயுதக் கடத்தல் போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளுக்கு உதவிய வரலாற்றை ஒரு பேட்டியில் தெரிவித்தார். இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலை புலிகள் அமைப்பிற்காக சட்டவிரோதமாக பாஸ்போர்ட் பெற்று கொடுப்பது, கடத்தலில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளை பகிரங்கமாக பேசிய பின்னும் அப்போதைய திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜோசப் விஜய் ஆட்சியில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தை கட்சியின் அமைச்சர் வன்னியரசு தமிழ் ஈழத்தின் பிரதிநிதி என்றார் வைகோ. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பிற்கு ஆதரவாகவும், பிரிவினையை பகிரங்கமாக விஜய் செய்வார் என்று முழங்கிய இலங்கை எம்.பி. அர்ஜுனன் ராமநாதனை தவெக ஆட்சி வந்ததும், தமிழகத்திற்கு அழைத்திருப்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. டிப்ளமேடிக் பாஸ்போர்டில் பயணம் செய்பவர் அரசியல் பேசக்கூடாது என்பது விதி. இதையும் மீறி, அர்சுனன் இராமநாதன் அரசியல் மட்டுமின்றி, இந்திய அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பிற்கு ஆதரவாக பேசியதற்கும் அவர் மீது நடவடிக்கை இல்லை.

இந்நிலையில், மே 18 அன்று முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களுக்காக முதல்வர் ஜோசப் விஜய் இரங்கல் பதிவு வெளியிட்டிருந்தார். இதுவரை எந்த முதல்வரும் செய்யாத செயல் இது. ஜோசப் விஜயின் இந்த பதிவும் தவெக அரசு பொறுப்பெடுத்த பின் நடந்த நிகழ்வுகளும், இலங்கை தமிழர்கள் பகிரங்கமாக தவெகவிற்கு உதவி, அவர்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறோம் என்ற பதிவையும், தவெகவின் கூட்டணி கட்சியின் செயல்பாட்டையும் வைத்து பார்த்தால் LTTE பயங்கரவாதத்திற்கு ஜோசப் விஜய் தனது ஆதரவை இந்த பதிவின் வாயிலாகத் தெரிவித்து இருப்பதாக தோன்றுகிறது.



இன்று விஜயின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொன்று குவித்த போர், முள்ளிவாய்க்காலில் பிரபாகரனை சுட்டுக் கொன்றதுடன் மே 18 அன்று முடிவடைந்தது. இந்தப் போரில் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அதிபர் ராஜபக்சேவை சந்தித்து உறவாடிய இந்திய குழுவில் டி.ஆர். பாலு, கனிமொழியுடன் இடம்பெற்றிருந்தவர் வன்னியரசின் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன். ஆகவே இவர்களுக்கு இலங்கை தமிழர்கள் மீது கரிசனம் கிடையாது. இலங்கைத் தமிழர்களின் பணத்திற்கும், பிரிவினைவாதத்தை வளர்க்கும் சதிகாரர்களின் பணத்திற்கும் துணைபோகும் கூலிப் படைகள் இவர்கள்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் வட்டியில்லா வங்கி சேவைகள் (Interest-free Banking) அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு அரசின் புதிய நிதித்துறைச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள திரு. சித்திக் IAS அவர்களையும், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரான திரு. ஷாஜஹான் அவர்களையும் சந்தித்ததாக முஸ்லீம் லீக் கட்சியின் மகளிர் அணி தேசியத் தலைவி ஃபாதிமா முசாபிர் தெரிவித்திருந்தார். இந்த சந்திப்பின்போது, வட்டியில்லா பங்கேற்பு பரஸ்பர நிதிகள் மற்றும் சுகூக் போன்ற ஷரியா சட்டத்தின்படி இயங்கும் இஸ்லாமிய பத்திர முதலீட்டு நிதிகளை மாநிலத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்துவது குறித்து முதல்வர் வழியாக மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டனர். இந்த இஸ்லாமிய அடிப்படைவாதக் கோரிக்கையை இவர்கள் முன்வைக்கக் காரணமான அமைச்சர் ஷாஜஹானுக்கும், இலங்கை ஈஸ்டர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனுக்கும் தொடர்புண்டு. ரிஷாத் பதியுதீனின் அகில சிலோன் மக்கள் காங்கிரசுக்கு எதிராக அரசியல் நடத்துவது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி. இதன் தலைவர் ராஃப் ஹக்கிமும், ரிஷாத் பதியுதீனும், முனைவர் M.L.A.M ஹிஸ்புல்லா என்ற இலங்கையைச் சார்ந்த ஐ.எஸ்.ஐ ஏஜெண்ட் முன்னிலையில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது, தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி திரு.அக்பர் அலி அவர்களும் உடனிருந்தார்.

**தமிழகத்தில் இருக்கும் சிறப்பு முகாம்களிலும், பிற அகதிகள் முகாம்களிலும் இருந்து செயல்பட்டுவரும் போதைக் கடத்தல் மன்னர்கள், இலங்கையிலும், பிற நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.**

தற்போது, இலங்கையிலுள்ள சிங்களர்கள், முஸ்லீம்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்ற செய்தி சமூகவலைத்தளங்களில் பரப்பப்படுகிறது. எனவே, தமிழர்களும் சேர்ந்து, சிங்களர்களை எதிர்கொள்ள வேண்டும் என்ற பரப்புரை வலுப்பெற்று வருகிறது. இந்தச் சூழலை பயன்படுத்தி, இஸ்லாமிய பயங்கரவாதத்தையும், தமிழ் பிரிவினைவாதத்தையும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ தூண்டும் சூழல் நிலவுகிறது. பாரதத்திற்குள் ஊடுருவ பாகிஸ்தான் பயன்படுத்திவந்த காஷ்மீர் எல்லையை 370 நீக்கத்தின் வாயிலாக, இந்தியா பெருமளவு தடுத்துள்ளது. மேற்கு வங்க, அசாம் தேர்தல் வெற்றிக்குப்பின், எல்லைப்பகுதிகளில் வேலி அமைக்கும் பணியும், அன்னியரை வெளியேற்றும் பணியும் வேகமெடுத்துள்ளது. பஞ்சாபைத் தவிர பிற மாநில வடக்கு எல்லைகள் பாதுகாக்கப்பட்ட நிலையில், பாகிஸ்தானும், சீனாவும் தமிழகத்தை குறிவைக்கின்றன.

தமிழகத்தில் இருக்கும் சிறப்பு முகாம்களிலும், பிற அகதிகள் முகாம்களிலும் இருந்து செயல்பட்டுவரும் போதைக் கடத்தல் மன்னர்கள், இலங்கையிலும், பிற நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தமிழகத்தில் பதிவாகும் பல கொலைகள், கற்பழிப்புகள், தாக்குதல்கள் போதையினால் ஏற்படுகிறது என்கிறது காவல்துறை. பள்ளி முதல் பட்டிக்காடுவரை பரவியுள்ள போதைக் கலாச்சாரத்தை பயன்படுத்தி, பஞ்சாபைப் போல் தமிழகத்திலும் உள்நாட்டுக் கலகங்களை ஏற்படுத்த நம் நாட்டிற்கு எதிரான சக்திகள் முற்படுகின்றன.

இந்தச் சூழலில், முதல்வர் ஜோசப் விஜயின் முள்ளிவாய்க்கால் பதிவு, இலங்கை எம்.பியின் பேச்சு, அமைச்சர்களின் தொடர்புகள், இலங்கையில் நிலவும் சூழல் ஆகியவற்றை பயன்படுத்தி தமிழகத்தில் தேச விரோத நடவடிக்கையுடன், உள் நாட்டுக் கலகம் ஏற்பட வாய்ப்புள்ளது. பஞ்சாப், காஷ்மீர், மேற்குவங்கம் போல் தமிழகம் மாறிவிடாமல் தடுக்க

# ஃபால்டா தேர்தல் முடிவு தெரிவிக்கும் சேதி

வெள்ளய்யன்

ஃபால்டா சட்டமன்றத் தொகுதியில் பா.ஜ.க. 1 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் என்ற மிகப்பெரிய வித்தியாசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இது வெறும் தேர்தல் முடிவு மட்டுமல்ல; மம்தா பானர்ஜியின் மருமகனும், திரிணாமூல் கட்சியின் வாரிசுமானவரால் பல ஆண்டுகளாகப் பரப்பப்பட்ட "டயமண்ட் ஹார்பர் மாடல்" என்று அழைக்கப்படும் திட்டத்தின் வீழ்ச்சியை இது அதிகாரப் பூர்வமாகக் குறிக்கிறது.

பல ஆண்டுகளாக ஃபால்டாவில் ஜனநாயக உரிமைகளுக்கும் மக்கள் எதிர்பார்ப்புக்கும் எந்த மதிப்பும் இருந்ததில்லை என்றும் திரிணாமூல் காங்கிரஸின் கட்சியினரே ஒப்புக் கொண்டனர். ஹிந்துக்கள், தொடர்ந்து அச்சத்திலும் மிரட்டலிலும் வாழ்ந்து வந்தனர். பா.ஜ.க. கொடியை வெளிப்படையாக ஏற்றத் துணிந்த ஒரே காரணத்திற்காக, எண்ணற்ற பா.ஜ.க. தொண்டர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.பெண்களுக்குப் பாதுகாப்பு என்பது இருந்ததே இல்லை.

ஃபால்டா தனது தீர்ப்பை இன்று வழங்கியுள்ளது. மக்கள் அச்சம் மற்றும் வன்முறை அரசியலை நிராகரித்துள்ளனர். அரசியல் ஆணவத்தை நிராகரித்துள்ளனர். 2024 மக்களவைத் தேர்தலின் போது ஃபால்டாவில் மக்கள் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கவே முடியாதபடி, பல வாக்குச் சாவடிகளில் உள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பா.ஜ.க.வின் சின்னத்தின் மீது டேப் ஒட்டப்பட்டது. இந்த ஒரே சட்டமன்றத் தொகுதியில் இருந்து மட்டும், அபிஷேக் பானர்ஜி 1 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்றார்.

இன்று, அதே ஃபால்டா சட்டமன்றத் தொகுதி உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. இறுதியாக, மேற்கு வங்க சட்டமன்றத்தில் உள்ள 294 இடங்களில் 208 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்று, சட்டமன்றத்தின் மொத்த இடங்களில் ஏறக்குறைய 70.75% இடங்களைப் பெற்றுள்ளது. மமதா பேகத்தின் டைமண்ட் ஹார்பர் கோட்டை சரிந்து 4 வது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

நாடாளுமன்றத்தில் டைமண்ட் ஹார்பரைப் பிரதிநிதித்துவப்படுத்த அபிஷேக் பானர்ஜிக்கு இனி எந்த தார்மீக அதிகாரமும் இல்லை. தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பலர் இறந்து விடுவார்கள் என்பதால், பல சுடுகாடுகள் தேவைப்படும் என்று அவர் பா.ஜ.க. தொண்டர்களை வெளிப்படையாக மிரட்டிய அதே ஃபால்டா இதுதான். ஒட்டுமொத்த பாரதத்திற்கும் இங்கு வந்து போட்டியிட்டுப் பாருங்கள் என்று அவர் சவால் விடுத்த அதே ஃபால்டா இதுதான். ஆனால் இன்று, நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. திரிணாமுல் காங்கிரஸுக்கும் அபிஷேக் பானர்ஜிக்கும் இங்கு தீவிரமாகப் போட்டியிடவோ அல்லது ஆக்ரோஷமாகப் பிரச்சாரம் செய்யவோ கூட தைரியம் இல்லை.

தேர்தல் விதிமுறைகளையும் நடைமுறைகளையும் மீண்டும் மீண்டும் மீறிய, ஜஹாங்கீர் கூட, வாக்குப்பதிவுக்கு வெறும் 48 மணி இருக்கையில் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இந்தத் தேர்தல் திரிணாமுல் காங்கிரஸுக்குள்ளேயே இருக்கும் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஃபால்டாவின் மக்கள்தொகையில் ஹிந்துக்களின் மக்கள்தொகை சுமார் 66-68% என மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், பாஜகவின் வெற்றியின் அளவு, சமூக மற்றும் அரசியல் எல்லைகளைக் கடந்து ஹிந்துக்களின் ஆதரவு பெருமளவில் ஒன்றிணைந்திருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மிக முக்கியமாக, பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஃபால்டாவில் எதிர்க்கட்சிகளால் சுதந்திரமாகப் பிரச்சாரம் செய்ய முடிந்தது என்று சி.பி.ஐ.(எம்) வேட்பாளர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். அதுவே ஜனநாயகத்தின் மிகப்பெரிய வெற்றி.

இன்று ஃபால்டா, மேற்கு வங்கத்தில் ஒரு புதிய அரசியல் சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது; இந்த வெற்றி, வங்காளத்தில் ஜனநாயகத்திற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த ஒவ்வொரு பா.ஜ.க. தொண்டருக்கும் உரியது. இந்த வெற்றி, அச்சத்தில் வாழ்ந்து வந்த ஒவ்வொருதாய்மார்களுக்கும் உரியது. இந்த வெற்றி, மாற்றத்திற்காக மௌனமாகக் காத்திருந்த ஒவ்வொரு வாக்காளருக்கும் உரியது எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த வெற்றி ஜனநாயகத்திற்கே உரியது.

இழந்த பெருமைகளை மேற்கு வங்கம் மீட்டெடுத்திடும் என்ற நம்பிக்கை தேசபக்தர்கள் மனதில் எழுந்துள்ளது. அதற்கான வழியை ஃபால்டா காட்டியுள்ளது.

**செய்தி:**

**உத்தரப் பிரதேசம் காஜியாபாத்தில் நண்பரை பக்ரீத் பண்டிகைக்கு அழைத்து கொன்றவர் என்கவுன்ட்டரில் உயிரிழப்பு**

**சிந்தனை**

இந்தக் கொடூர கொலையை மறைக்க முயற்சித்த இந்த பகுதி முஸ்லீம்கள் மற்றும் காவலர் மீது குற்றவாளி துப்பாக்கிச்சூடு நடத்தியது, இஸ்லாமிய பயங்கரவாதம் வேரூன்றி இருப்பதைக் காட்டுகிறது. அடிப்படைவாத போதனைகளைத் தடுக்காமல், இதுபோன்ற குற்றங்களை ஒழிக்க முடியாது.

**செய்தி:**

**பாதுகாப்பு மையங்களில் உள்ள கோவில் சிலைகளுக்கு தினசரி பூஜை; அறநிலையத்துறை பதிலளிக்க கோர்ட் உத்தரவு**

**சிந்தனை**

4 அங்குலத்திற்கு மேலுள்ள, பிராணப்பிரதிஷ்டை செய்த மூர்த்தங்களுக்கு நைவேத்யம் கட்டாயம். கோயில் சிலைகளை வழிபாட்டிற்காக நிறுவி, சொத்துக்களை கொடுத்த பக்தர்களுக்குச் செய்யும் துரோகமே இந்த பாதுகாப்பு மையங்களில் சிலையை வைப்பது.

**செய்தி:**

**கோவை குண்டுவெடிப்பு குற்றவாளிகளை முன்விடுதலை செய்ய முயற்சியா? நிர்மல் குமாரை சந்திக்கும் குற்றவாளி குடும்பத்தினர்**

**சிந்தனை**

ஓட்டு அரசியலுக்காக பயங்கரவாதிகளை விடுதலை செய்வது நாட்டிற்கு ஆபத்து. தி.மு.க அரசின் வழியில் த.வெ.க அரசு. அப்பாவி மனிதர்களைக் கொன்றவர்களுக்கு மனிதாபிமானம் என்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. முன்விடுதலை கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும்

# செய்
# சிந்த

**செய்தி:**

**சென்னை மதுபான பாரில் நட**
**விபரீதம்; இலங்கை இளம்பெ**

**சிந்தனை**

ஆன்மீகத்தையும் பண்பாட்
வினை இது. இந்த பாரை
வயதாகாதவர்களுக்கு மது
நடந்துள்ளது. ஹேப்பி ஸ்ட்ரீட்
களை அனுமதிப்பது இத்தகைய
உள்ளது.

**செய்தி:**

**முழு மதுவிலக்கை**
**சாராயமும் கஞ்சாவ**
**அமைச்சர் விக்னேஷ**

**சிந்தனை**

மதுக்கடைகளைத்
காரணமும் இதுதா
நியாயப்படுத்தியா
இடம் மாறும்.
பயணிக்கும். காட்

# திகள்
# னைகள்

**செய்தி:**

**ராமேஸ்வரம் அருகே பாம்பனில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் அனுமதியின்றி கிறிஸ்தவ ஜெபக் கூட்டம் - அதிகாரிகள் அலட்சியம்**

**சிந்தனை**

தடுப்பது காவல்துறையினர் வேலை என்று நழுவும் நெடுஞ்சாலைத்துறையின் பதில் அயோக்கியத்தனமானது. சொத்தின் உரிமையாளரின் கடமைதான் என்ன? இராமேஸ்வரத்தைக் குறிவைத்து நடத்தப்படும் மதமாற்றம் ஜோசப் விஜய் ஆட்சியில் வேகம் எடுக்கிறது.

**னமாடுவதில் ஏற்பட்ட தகராறால் ண் கார் ஏற்றிக் கொலை**

டையும் விட்டதனால் ஏற்பட்ட நடத்துபவர் தவெக கட்சிகாரர். 18 வை விற்கும் சட்டவிரோதமும் போன்ற சமுதாய சீரழிப்பு நிகழ்ச்சி ப பிரச்சினைகளின் ஊற்றுக்கண்ணாக

**செய்தி:**

**சர்ச்சைக்குள்ளாக்கிய போஜசாலா வளாகம், சரஸ்வதி கோயிலுக்கே சொந்தம் - நீதிமன்றம் அதிரடி**

**சிந்தனை**

ஹிந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டில், ஹிந்துக் கோயில்களை, ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க நீண்ட சட்டப் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இருப்பினும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பில்லை என்று பரப்புரை செய்யப்படுகிறது. இழந்த மானம் மரியாதையை மீட்கப் போராடும் ஹிந்துக்களை ஆதரிப்போம்.

**அமல்படுத்தினால் யும் பெருகி விடும் - ஷ் விளக்கம்**

திறக்க, கருணாநிதி சொன்ன ன். பாட்டிலுக்குப் 10 ரூபாயையும் கிவிட்டது. பெட்டிகள் கைமாறும் பிணப்பெட்டிகள் தொடர்ந்து சி மாற்றம் இருக்காது.

**செய்தி:**

**விசிக, IUML கட்சிகள் தவெக அமைச்சரவையில் இணைந்ததையொட்டி தலைமை செயலகத்தில் நடத்தப்பட்ட தொழுகை**

**சிந்தனை**

பொது இடங்களில் தொழுகை நடத்துவது சட்ட விரோதம். இதை மதச்சார்பின்மைக் கொள்கை கொண்ட முதல்வர் கண்டிக்கவில்லை. சனாதனத்தை ஒழிப்போம் என்று பேசிய உதயநிதியை ஆதரித்து த.வெ.க அமைச்சர்கள் பேசினார்கள். இது போலிமதச்சார்பின்மை என்பதைவிட ஜிகாதி-மிஷனரி ஆட்சி

# படம் சொல்லும் பாடம்

- சி.பாண்டிக்குமார்






# மேற்கு வங்கத்தின் மாற்றங்கள் - இங்கே வரும் பொன்னாள் என்னாளோ?

தமிழ்நேசன்

மேற்கு வங்கத்தில் மமதை துடைத்தெறியப்பட்டு தேசியம் பொங்கியெழுந்து தாமரை மலர்ந்து குலுங்குகிறது. மக்கள் நிஜமான மாற்றம் என்று குதூகலிக்கின்றனர். அப்படி என்னதான் மாற்றினார் சுவெந்து அதிகாரி? அவர் மட்டுமல்ல அரசு அதிகாரிகளும் இப்போது அரசு அதிகாரிகளாகப் பணி செய்கிறார்கள். மமதையின் கைத்தடிகள் முறிக்கப்படுகின்றன.

வங்கதேசத்துடனான எல்லையில் வேலி அமைக்கும் பணிக்கு நிலம் வழங்காமல் ஊடுருவலுக்கு ஏதுவாக போக்குவரத்துக்கு ஏதுவாக அப்படியே விட்டு வைத்திருந்தார் மமதை பானர்ஜி. உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பின்னும் ஊர்ப்பட்ட சாக்குகள் சொல்லிப் போக்குக் காட்டினார். SIR வந்ததில் அவரது ஓட்டுவங்கி வங்கதேசத்துக்குப் பெயர்ந்து போனது. கட்சி திவாலானது. மீண்டும் வருவார்கள் என்று மமதை காத்திருக்க, லட்சக்கணக்கில் எல்லைப்பாதுகாப்பு, ரிசர்வ் போலீஸ் என்று தேர்தல் பாதுகாப்புக்கு என்று வந்த மத்தியப்படைகள் எல்லையில் போய் அமர்ந்து கொண்டார்கள். வங்கதேசத்தில் இருந்து உள்ளே வர முடியவில்லை. 45 நாட்களில் தேவையான அத்தனை நிலப்பகுதிகளும் (தோராயமாக 600 ஏக்கர்கள்) எல்லைப் பாதுகாப்புப் படை வசம் ஒப்படைக்கப்படும் என்று சொன்ன சுவெந்து அதிகாரி கையோடு அரசாணையும் வெளியிட்டுவிட்டார்.

கல்கத்தா ரயில் நிலையத்தின் அருகே ஒரு சிறுபாலம் இருந்தது. அது போக்குவரத்துக்கு லாயக்குப்படாது என்று 15 ஆண்டுகளாக மக்கள் சுற்றிக்கொண்டு போய்வந்தனர். புதிய அரசு பதவியேற்ற அன்று இரவே அந்தப் பாலத்தை ஆக்கிரமித்திருந்த மர்ம ஆசாமிகள் விரட்டப்பட்டு பாலம் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது.

ரயில் நிலையத்தில் திருட்டும், கொள்ளையும் செய்துவந்த கும்பலைக் காணவில்லை. ரயில் நிலையத்தில் மமதை கட்சி ஆட்களின் துணையோடு பெண்களைச் சீண்டித்திரிந்த அரம்பன்கள் காணாதுபோயினர். நோக்குக்கூலி போல பழக்கடையைத் தாண்டிப் போனாலே குறைந்தது ஓரிரு கிலோக்களுக்கான காசைப் பிடுங்கும் போக்கிரிகள் போன இடம் தெரியவில்லை. சுவெந்து அதிகாரியைக் கேட்டால் இவர்களை எல்லாம் பிடித்து வெளிவரமுடியாத வழக்குகளில் போடச் சொல்லி உத்தரவிட்டுள்ளேன் என்று எரிகிற வயிறுகளில் அமிலச் சுரப்பை அதிகரித்துள்ளார்.

பசுக்களைத் திருடிச் சென்று வங்கதேசத்தில் விற்று அங்கே மாட்டுக்கறி விலை மலிவு என்று பீற்றிக்கொண்ட மர்ம நபர்களின் கட்டமைப்பு உடைத்தெறியப்பட்டு உரிய நடவடிக்கைக்கான அறிக்கை வந்து சேரவேண்டும் என்று ஒவ்வொரு மாவட்டப் போலீசுக்கும் முதல்வர் சுவெந்து அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

11 மாதங்கள் தாமதத்துக்குப் பிறகு மக்கள் தொகைக்கணக்கெடுப்பை நடத்த முதல்வர் சுவெந்து அதிகாரி உத்தரவிட்டுள்ளார். மமதை பானர்ஜி ஓட்டுவங்கி திவாலாகும் என்ற காரணத்தால் கணக்காவது எடுப்பாவது என்று கிடப்பில் போட்டிருந்தார்.

பாரதிய நியாய சம்ஹிதை என்ற புதிய சட்டங்கள் மேற்கு வங்கத்தில் அமலுக்கு வந்தன. மமதை பழைய வெள்ளையர் காலத்துச் சட்டங்களைத் தான் பின்பற்றுவேன் என்று திமிர் காட்டிவந்தார்.

ஐஏஎஸ் ஐபிஎஸ் அதிகாரிகளை மத்தியப் பணிக்கும், மத்திய அரசு பயிற்சிகளுக்கும் அனுப்ப மறுத்துவந்தது மமதை அரசு. இவர்கள் அங்கே போனால் பேச்சினூடே தங்கள் நிர்வாகம் பற்றிய விவரங்கள் கசியும் அதனால் சிக்கல் வரும் என்ற அச்சம் காரணம். இப்போது அதை மாற்றி மத்தியப்பணிகளுக்கும் பயிற்சிக்கும் அதிகாரிகள் செல்லத் தடையில்லை என்று முதல்வர் சுவெந்து அதிகாரி அறிவித்துள்ளார்.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் மேற்கு வங்கம் இணைந்தது.

பிரதமர் உஜ்வலா திட்டத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் ஏழைப் பெண்களுக்கு சமையல் எரிவாயு கிடைக்கும். இதுவரை மமதை விறகடுப்பில் சமைத்தால் தொண்டைக்குக் கீழே இறங்காதோ என்று எகத்தாளம் பேசிவந்தார்.

பிரதமர் விஸ்வகர்மா திட்டத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் இளைஞர்கள் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி கிடைத்துச் சுய தொழிலோ வேலைவாய்ப்போ பெற ஏதுவாகும்.

மேற்கு வங்கத்தின் சிலிகுரி பகுதியில் கோழிக்கழுத்து என்று அழைக்கப்படும் பகுதியை வங்கதேசமும் சீனாவும் வெகு காலமாகக் குறிவைத்து வருகின்றன. அவற்றை முறியடித்து வடகிழக்கு

மாநிலங்களைப் பாதுகாக்கவும் சிக்கிம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சாலை அமைக்கவும் ராணுவத் தளங்கள் அமைக்கவும் மத்திய அரசு முன்னெடுப்புகளைச் செய்த போது மமதை அரசு அதற்கான நிலங்கள், சாலைகளை தன் கட்டுப்பாட்டிலிருந்து மாற்ற மறுத்துவிட்டது. இப்போது முதல்வர் சுவெந்து அதிகாரி 120 ஏக்கர் நிலம், 7 மாநில நெடுஞ்சாலைகள் இவற்றை மத்திய அரசின் துறைகளுக்கு மாற்றித்தர உத்தரவிட்டுள்ளார். இது தவிர 27 கிலோமீட்டர் சாலைகள் எல்லைப் பாதுகாப்புப் படை வசம் வேலி அமைக்கத் தரப்பட்டுள்ளது.

22 கிமீ அகல தாழ்வாரம் போன்ற சாலைப் போக்குவரத்து வசதிகள் இங்கே அமைக்கப்பட்டு வடகிழக்கு மாநிலங்களுடனான சாலைப் போக்குவரத்து எளிமைப்படுத்தப்படும். கவனிக்க வேண்டிய விஷயம், விடுதலை பெற்று 75 ஆண்டுகளில் இப்போது தான் வடகிழக்கு மாநிலங்களுக்கு முறையான சாலை, ரயில் அடிப்படைகள் வருகின்றன.

இது தவிர போக்கிரிகள், பொறுக்கிகள் மமதை கட்சி ஆள் என்ற பெயரில் அநியாயம் செய்து வந்ததெல்லாம் நின்று போயிருக்கிறது. காவல்துறை 2021ல் போலீஸை அடித்த ஒரு பொறுக்கியை இன்று பட்டாபட்டியோடு தெருவில் இழுத்துப் போய் வழக்குப் போட்டுள்ளது. பலர் எல்லைதாண்டி ஓடிவிட்டதாகத் தகவல். முதல்வர் சுவெந்து அதிகாரி எந்த ஒரு பொறுக்கியையும் அரம்பனையும் தண்டனையின்றி விடக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளார்.

இவை தவிர ஹிந்து எழுச்சி என்ற கோணத்தில் பார்த்தால் வங்கம் இப்போது தங்கமாக ஜொலிக்கிறது.

அசன்சோல் பகுதியில் உள்ள பஸ்டின் பஜார் துர்கா கோவில் 15 ஆண்டுகளாக மர்ம மதத்தினரின் ஆக்கிரமிப்பு, தகராறு, வன்முறை என்று பல காரணங்களாலும் அரசு அவர்கள் பக்கம் சாய்ந்துவிட்டதாலும் நிர்வாகக் காரணங்களுக்காகப் பூட்டப்பட்டு துர்கா பூஜை, லக்ஷ்மி பூஜை உள்ளிட்ட சமயங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் திறக்க அனுமதி, பூசாரிகள் மட்டுமே போகலாம், ஓசை வரும்படி பூசை செய்யக்கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளோடு இருந்தது. கிருஷ்ணேந்து முகர்ஜி என்ற பாஜக வேட்பாளர் வென்றால் கோவில் முறைப்படி தினமும் திறக்கப்படும் என்று பிரச்சாரத்தின் போது அறிவித்தார். வெற்றி அறிவிக்கப்பட்டவுடன் மாலையே வந்து கோவிலைத் திறக்கச் சொல்லி போலீசாரைப் பாதுகாப்புக்கு நிறுத்தி பக்தர்கள் வேண்டிய மட்டும் வழிபட ஏதுவாக ஆக்கிவிட்டார்.

ISKCON அமைப்பின் மாயாபூர் கோவிலில் கோ பூஜை நடத்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு அனுமதி கிடைத்து, முதல்வர் சுவெந்து அதிகாரி



கலந்துகொண்டார். மர்ம நபர்கள் எதிர்ப்பால் கோபூஜை செய்யக்கூடாது, பஜனை பாடக்கூடாது, மணியடிக்கக் கூடாது என்று மமதை அரசு கொடுங்கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

கனகாளிதலம் என்ற சக்தி பீடத்தில் இதே போல பல மர்ம மனிதர்களுக்கு ஆதரவான அரசு உத்தரவுகளால் கடுப்பான அவ்வூர் இளைஞர்கள் கோவிலில் “ஹிந்துக்கள் மட்டுமே வர அனுமதி” என்று எழுதிப் போட்டனர். நிர்வாகம் தாங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை என்று சொன்னாலும் எழுதிய போர்டை இன்றுவரை அகற்றவில்லை. நம்பிக்கை இல்லாதவர்கள் ஏன் வரவேண்டும் என்பது நியாயமான கேள்வி.

இதுதவிர ராமகிருஷ்ண மடத்தின் துறவிகள் பயங்கரவாதிகள் என்று பொருள்படப் பேசிவிட்டுப் பிறகு அவர்கள் பாஜகவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று தான் சொன்னேன் என்று சமாளித்தார். பாரதிய சேவாஸ்ரம சங்கம் என்ற அமைப்பின் கார்த்திக் மஹாராஜ் என்ற துறவியை பாஜக ஏஜண்ட் என்று மமதை பேசிவிட்டுப் போக அவர் நிரூபி அல்லது மன்னிப்புக் கேள் என்று வக்கீல் நோட்டீஸ்விட்டார். பிறகு கார்த்திக் மஹாராஜின் பணிகள் குறித்துப் பல பத்திரிகைகள் செய்தி வெளியிட அவர் மருத்துவ உதவிகளும் உணவும் வழங்கி மக்களுக்குப் பணியாற்றும் திறம் அறிந்து தேசம் அவரைக் கொண்டாடியது. அவருக்கு மத்திய அரசு பத்ம ஸ்ரீ பட்டம் வழங்கியது.

சுவெந்து அதிகாரி பதவியேற்ற பிறகு ராமகிருஷ்ணா மடத்தின் பேலூர் நிலையத்துக்குச் சென்று விழுந்து வணங்கி தான் ஹிந்து என்பதைப் பறை சாற்றினார். மேலும் துறவி பெருமக்களின் வழிகாட்டுதலில் வங்கத்தின் இழந்த பெருமைகளை மீட்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

நல்லமாற்றங்கள்நிகழத்தொடங்கியிருக்கின்றன. நல்லதே தொடரட்டும். நாடெங்கும் பரவட்டும்.

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**கேண்டில் ஸ்டிக் சார்ட் வகைகள்**

மெழுகுவர்த்தி குச்சி (கேண்டில் ஸ்டிக்) சார்ட் அமைப்பின் அறுபதுக்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன என ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். முக்கியமான வகைகள் பற்றிய விவரம் வருமாறு:

**கருப்பு மெழுகுவர்த்தி குச்சி :**

பங்கின் முடிவு விலை, தொடக்க விலையை விட குறைவாக இருந்தால் அது கருப்பு மெழுகுவர்த்தி குச்சி (The Black Candlestick ) எனப்படும்.

**கருப்பு மெழுகுவர்த்தி குச்சி உடன் சிறிய 'பாடி'**

பங்கின் முடிவு விலை, தொடக்க விலைகளுக்கு இடையே சிறிய அளவில் விலை வித்தியாசம் இருந்தால் அது பிளாக் கேண்டில் ஸ்டிக் வித் ஸ்மால் பாடி எனப்படும். அதாவது முதலீட்டாளர்களிடையே ஆர்வம் குறைவாக இருந்து, விலை குறையும் போக்கில் இந்த மெழுகுவர்த்தி குச்சி அமைப்பு உருவாகும்.

**பிளாக் கேண்டில் ஸ்டிக் வித் லாங் பாடி:**

நீண்ட பகுதியைக் கொண்ட இது, விலை இறங்கு முகத்தில் உள்ளதைத் தெரிவிக்கிறது. பங்கின் தொடக்க விலை மற்றும் முடிவு விலைக்கும் இடையே நிறைய இடைவெளி உள்ளது. இது அதிக அளவில் முதலீட்டாளர்கள் பங்குகளை விற்க முயற்சி செய்வதை காட்டுகிறது.

**வெள்ளை மெழுகுவர்த்தி குச்சி :**

பங்கின் முடிவு விலை, தொடக்க விலையை விட அதிகமாக இருந்தால் அது வெள்ளை மெழுகுவர்த்தி குச்சி (The White Candle Stick)

**ஒயிட் கேண்டில் ஸ்டிக் வித் ஸ்மால் பாடி:**

இது சிறிய பகுதியைக் கொண்டது. அதாவது ஆரம்ப விலை மற்றும் முடிவு விலை மிகக் குறைந்த வித்தியாசத்தில் உள்ளவை. இதனால் சிறிய அளவிலே விலை உயர்ந்திருக்கிறது.

**ஒயிட் கேண்டில் ஸ்டிக் வித் லாங் பாடி:**

இது நீண்ட பகுதியைக் கொண்டது. தொடக்க விலை மற்றும் முடிவு விலைக்கு இடையே அதிக இடைவெளி கொண்டதாக இருக்கும். இது அதிக அளவில் முதலீட்டாளர்களிடையே வாங்கும் ஆர்வம் இருந்திருப்பதைக் காட்டுகிறது. இது ஏறுமுகத்தில் உள்ளதைக் குறிப்பிடுகிறது.

**ஷாவன் ஹெட்**

மெழுகுவர்த்தி குச்சி அமைப்பில் மேல் நிழல் (அப்பர் ஷேடோ) இல்லை என்றால் அது ஷாவன் ஹெட் (The Shaven Head)

**ஷாவன் பாட்டம்**

மெழுகுவர்த்தி குச்சி அமைப்பில் கீழ் நிழல் (லோயர் ஷேடோ) இல்லை என்றால் அது ஷாவன் பாட்டம் (The Shaven Bottom)

**ஸ்பின்னிங் டாப்ஸ் அமைப்பு**

சந்தை அல்லது பங்கின் விலை அதிக ஏற்ற இறக்கம் இல்லாமல் பக்கவாட்டு என்ற சைடு வேஸ் இயக்கத்தில் இருக்கும் போது, மெழுகுவர்த்தி குச்சி சார்ட், சிறிய ரியல் பாடிகளை கொண்டிருக்கும். அது காளை மற்றும் கரடி சந்தைக்கு இடைப்பட்ட சமநிலையில் இருக்கும். அப்போது மெழுகுவர்த்தி குச்சி வெள்ளை அல்லது கறுப்பாக இருக்கும். இந்நிலையை தொழில்நுட்ப ஆய்வு முறையில், ஸ்பின்னிங் டாப்ஸ் (Spinning Tops) என்பார்கள்.

**புல்லிஷ் என்கல்ஃபிங் அமைப்பு**

ஒரு நாள், கருப்பு (பேரிஷ்) மெழுகுவர்த்தி குச்சி சார்ட் உருவாகி இருந்தால், அடுத்த நாளும் அதுவே உருவாக வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒரு நாள் கருப்பு மெழுகுவர்த்தி குச்சி சார்ட் உருவாகி அடுத்த நாள், வெள்ளை மெழுகுவர்த்தி குச்சி சார்ட் உருவாகி இருந்தால், அது பாசிடிவ் அல்லது புல்லிஷ் என்கல்ஃபிங் (Positive or Bullish Engulf-ing) பேட்டர்ன் என்கிறார்கள். அதாவது சந்தை ஏறுமுகத்தை நோக்கிச் செல்கிறது என்று அர்த்தம். சந்தை அல்லது பங்கின் விலை மேலே செல்ல முயற்சி செய்யும் இந்த அமைப்பு உருவாகும்.

இது பங்குகளை வாங்குவதற்கான அறிகுறி (சிக்னல்). அப்போது வழக்கம் போல் ஆதரவு (சப்போர்ட்) நிலை, தடுப்பு (ரெசிஸ்டென்ட்) நிலை எது என்று கவனித்து வாங்குவது அவசியம்.

**பேரிஷ் என்கல்ஃபிங் அமைப்பு :**

இது ஒரு ரிவர்ஸல் அமைப்பு அதாவது, குறிப்பிட்ட அளவுக்கு பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள் ஏறியிருக்கிறது என்கிற நிலையில் அதற்கு மாறாக இறங்கப் போகிறது என்பதை சுட்டிக் காட்டும் அமைப்பு.

வெள்ளை மெழுகுவர்த்திக்கு அடுத்ததாக அதனை மறைக்கும் அளவுக்கு கருப்பு மெழுகுவர்த்தி இருந்தால் சந்தையின் போக்கு கீழ் இறங்கிச் செல்கிறது என்று அர்த்தம். இதனை பேரிஷ் அல்லது நெகடிவ் என்கல்ஃபிங் (Bearish or Negative Engulfing) என்கிறார்கள்.

சந்தை உச்சத்தில் இருக்கும்போதுதான் இந்த பேரிஷ் என்கல்ஃபிங் அமைப்பு உருவாகும். அது பங்குகளை விற்பதற்கான அறிகுறி. இங்கும் சந்தையின் அல்லது பங்கின் ஆதரவு மற்றும் தடுப்பு நிலையை வைத்து முடிவெடுப்பது அவசியம்.

இந்த அமைப்பு வலிமையான கரடி பேரிஷ்

நிலையைக் குறிக்கும். குறிப்பிட்ட அளவுக்கு பங்கின் விலை அல்லது குறியீட்டின் புள்ளிகள் மேலேறிய நிலையில், அதற்கு மாறாக அதாவது இறங்குமுகம் இருக்கும். இது சிறிய புல்லிஷ் கேண்டில் லைன் (வெற்றிடம்) உருவாகிய பிறகு, பெரிய அளவிலான பேரிஷ் கேண்டில் லைன் (நிரப்பட்டது) உருவாகிய நிலையில் காணப்படும்.

பொதுவாக, முதல் தினத்தின் காளை மெழுகுவர்த்தியின் ரியல் பாடியானது, இரண்டாம் தினத்தில் உருவாகும் கரடி மெழுகுவர்த்திக்குள் அடங்குவதாக இருக்கும். எளிமையாக புரிந்துக் கொள்ள சார்ட்டை பாருங்கள். முதல் தினத்தின் காளை மெழுகுவர்த்தியின் அளவு, இரண்டாம் தினத்தின் கரடி மெழுகுவர்த்திக்குள் அடங்கி இருப்பதைப் படத்தில் காணலாம்.

இரண்டாம் தினத்தில், விலை வித்தியாசம் அதிகரித்திருக்கும். அதே நேரத்தில், அந்த அதிகரிப்பு மிகவும் அதிகமாக இருக்காது. அதன் பிறகு கரடி நிலை ஏற்பட்டு, பங்கின் விலை மேலும் இறங்கத் தொடங்கும். காலையின் ஆரம்பத்திற்கு இடைப்பட்ட விலை வித்தியாசத்தை நிறைவு செய்வதோடு, முன் தினத்தின் ஆரம்ப விலைக்கு கீழே சென்று விடும். அன்றைய தினம், காளையை பின்னுக்குத் தள்ளி விட்டு கரடி முன்னுக்கு வந்து விடும். இந்த நிலை அடுத்து சிறிது காலத்துக்கு நீடிக்க வாய்ப்பு இருக்கிறது.

**டோஜி அமைப்பு :**

மேலே குறிப்பிட்ட காளை என்கல்ஃபிங் அமைப்பு, கரடி என்கல்ஃபிங் அமைப்பு இல்லாமல் கூட்டல் குறி போல் உருவானால் அதை டோஜி அமைப்பு என்கிறார்கள். இந்த அமைப்பு உருவாகி இருந்தால் சந்தை அல்லது பங்கின் விலை ஏற்கெனவே இருந்து வந்த பழைய நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு மாறப்போகிறது என்று அர்த்தம். எனவே, அடுத்தநாள் ஆரம்பிக்கும் போது ஏறுமுகமாகவோ அல்லது இறங்குமுகமாகவோ இருக்கலாம் (ரிவர்ஸல் அமைப்பு). அது போன்ற நேரங்களில், பொறுத்திருந்து சந்தை அல்லது பங்கின் போக்கு தெரிந்த பிறகு வர்த்தகம் செய்ய வேண்டும்.

பங்குச் சந்தை உச்சத்திற்கு சென்று கொண்டிருக்கும்போது இந்த டோஜி அமைப்பு உருவாகி இருந்தால் விற்பதற்கான அறிகுறியாக (சிக்னல்) எடுத்துக் கொண்டு பங்குகளை விற்று லாபம் பார்க்கலாம்.

**சுத்தியல் மெழுகுவர்த்தி குச்சி அமைப்பு :**

பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள் இறங்கிக் கொண்டிருக்கும் போது கீழ் நிலையில் இந்த சுத்தியல் (Hammer) மெழுகுவர்த்தி குச்சி அமைப்பு உருவாகும். அதாவது, இது காளை ரிவர்ஸல் அமைப்பு ஆகும். இந்த அமைப்பை ரியல் பாடி சிறியதாக இருப்பதை வைத்து (தொடக்கம் மற்றும் முடிவு விலைக்கு இடையே குறைவான வித்தியாசமே இருக்கும்) அல்லது நீண்ட கீழ் நிழல் (தொடக்கம், அதிகபட்சவிலை, மற்றும் முடிவு விலையை விட குறைந்தபட்சவிலை குறைவாக இருக்கும்) மூலம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இங்கே ரியல் பாடி, வெள்ளை அல்லது கறுப்பாக இருக்கலாம்.

**பியர்சிங் பேட்டர்ன் :**

ஒரு பங்கில் இந்த பியர்சிங் பேட்டர்ன்(Piercing Pattern) உருவாக, முதல் நாள் கரடி சந்தை மெழுகுவர்த்தி உருவாகி இருக்க வேண்டும். இரண்டாவது நாளில் அது காளை சந்தை மெழுகுவர்த்தி அமைப்பாக இருந்து முதல் நாளின் மத்தியில் காணப்பட்ட விலையை விட அதிகமாக முடிவு பெற வேண்டும். சார்ட்டை கவனித்தால் எளிதாக புரியும். மேலும், இரண்டாம் நாளில் விலை வித்தியாசம் குறைந்து, முன் தினத்தின் கரடி சந்தை மெழுகுவர்த்தை கேண்டில் குச்சி அமைப்பின் முடிவு விலையைக்கு நெருக்கமாக இருக்கும். விலை வித்தியாசம் இல்லாதபட்சத்தில், சந்தை மேலே ஏறுவதற்கான பிரதான குறியீடாக எடுத்துக் கொள்ளலாம். அப்போது பங்குகளுக்கான தேவை அதிகரித்து ஏற்கெனவே அதிகரித்திருந்த அளிப்பு பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**மார்னிங் ஸ்டார் அமைப்பு :**

இந்த மார்னிங் ஸ்டார் (Morning Star) அமைப்பு என்பது பெரிய அளவிலான கரடி சந்தை மெழுகுவர்த்தி அமைப்பு. அதாவது, சந்தை அல்லது பங்கு தற்போது ஏறுமுகத்தில் இருக்கிறது என்றால் அதற்கு மாறாக இறங்க போகிறது என்பதை சுட்டிக் காட்டும் அமைப்பாக இருக்கிறது. இந்த அமைப்பின் முதல் பகுதியில் கரடி சந்தை மெழுகுவர்த்தி உருவாகி இருப்பதோடு, வழக்கமாக புதிய குறைந்தபட்ச விலை உருவாகி இருக்கும்.

இரண்டாம் நாளில், முந்தைய தினத்தின் பேரிஷ் வித்தியாசத்தை விட குறைவான விலையில் ஆரம்பமாகும். இது இரண்டாவது நாளின் ஆரம்பத்தில் பேரிஷ் நிலை கட்டுக்குள் இருப்பது மூலம் தெளிவாகும். அதே நேரத்தில், இந்த பேரிஷ் நிலை விலையை மேலும் கீழே கொண்டு செல்லாது. அதவாது, இரண்டாவது நாளில் மெழுகுவர்த்தி குச்சி சிறியதாக, புல்லிஷ் அல்லது பேரிஷ் அல்லது இரண்டுக்கும் இடைப்பட்டதாக (அதாவது டோஜ்) இருக்கும்.

பொதுவாக சொல்வது என்றால், இரண்டாம் நாளில் புல்லிஷ் மெழுகுவர்த்தி அமைப்பு, விலை இறங்கப்போகிறது என்பதை வலிமையாக குறிப்பிடுவதாக இருக்கும். ஆனால், மூன்றால் நாளில் அது அப்படியே பெரும்பாலும் தொடரவே வாய்ப்பு. மூன்றாம் நாள் புல்லிஷ் மெழுகுவர்த்தி அமைப்பில் விலை அதிகரிக்க தொடங்கி, அது மேலேறத் தொடங்கும். அடிக்கடி முதல் தினத்தின் இழப்பை அது ஈடுகட்டுவதாக இருக்கும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**தடைகளை வென்ற வேகம்:**

ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த குரிந்தர்வீர் சிங் 10.09 வினாடிகளில் 100m கடந்து தேசிய சாதனை படைத்து, அதிவேக இந்தியன் என்ற பெயரினை பெற்றுள்ளார். ஒரே நாளில் இருமுறை அவர் தேசிய சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



29-வது தேசிய சீனியர் தடகள கூட்டமைப்பு போட்டிகள் ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்றது. ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை அரை இறுதி ஒன்றில் 10.19 வினாடிகளில் முடித்து புதிய தேசிய சாதனையைப் படைத்தார். ஆனால் அதற்கு முந்தைய சாதனையைப் படைத்திருந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த தடகள வீரர் அனிமேஷ் குஜுர், அடுத்த அரை இறுதிப்போட்டியிலேயே 10.15 வினாடிகளில் 100 மீட்டர் கடந்து மீண்டும் ஒரு சாதனை படைத்து, தன் பெயரை சாதனை பட்டியலில் தக்கவைத்துக் கொண்டார்.

இறுதி ஓட்டப்பந்தயத்தில் இரண்டு சாதனையாளர்களும் கலந்து கொண்ட போது 10.09 வினாடிகளில் முதல் வீரராக வந்து வெற்றி பெற்ற குரிந்தர்வீர் சிங் ஒரே நாளில் இருமுறை சாதனை செய்து விளையாடு பிரியர்களை வியக்கவைத்தார். ஒரே நாளில் 0.10 வினாடிகள் தன் வேகத்தை முன்னேற்ற முடிந்தால், இன்னும் தொடர்ந்து கடுமையான தரம் மிக்க பயிற்சிகளை எடுத்துக் கொண்டால், இவர் மானசீக குருவாக கொண்டுள்ள உலக தடகள ஜாம்பவான் உசைன் போல்ட் இன் சாதனையான 9.58 வினாடிகளை நெருங்க முயற்சிக்கலாம் என்று வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இவர் 2021ல் கடும் பயிற்சி மற்றும் உணவு கட்டுப்பாட்டின் பின் விளைவால், அஜீரண கோளாறு ஏற்பட்டு, எடை குறைந்து, பல போட்டிகளில் இருந்து விலக வேண்டிய நிலை வந்தும், 2025 இல் மீண்டு வந்த அவர் இந்த சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐபிஎல் 2026:**

**ப்ளே ஆஃப் சுற்றுகள்:**

நாம் பிளே ஆஃப்க்கு தகுதி பெறும் அணிகள் என்று ஆரம்பத்தில் கணித்தது போல ஆர் சி பி, குஜராத் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன. ஆனால் அனைத்து கிரிக்கெட் ரசிகர்களும் வருந்தும் அளவிற்கு, மக்கள் கேப்டன் என்று பெயர் பெற்ற ஷ்ரேயஸ் ஐயரின் பஞ்சாப் அணி வெளியேறி, ஹைதராபாத் அணி ப்ளே ஆஃப்க்கு தகுதி பெற்று ஆச்சரியம் அளித்துள்ளது

கிரிக்கெட் உலகக் கோப்பைகள் இருப்பது போல் முதல் அரை இறுதி முதல் ஆட்டத்தில், முதல் இடத்தை பிடித்த அணியுடன் நான்காவது இடத்தை பிடித்த அணியை மோதவிட்டு. அந்த ஒரு நாள் சரியாக அமையாவிட்டால் அத்துணை லீக் ஆட்டங்களில் முதல் நிலைபெற்ற அணி வெளியேற நேரிடும் விபரீதம் இல்லாமல், ஐபிஎல் தொடரில் பிளே ஆப் விதிமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஐபிஎல் தொடரில் இரண்டாம் இடத்தில் இருந்த குஜராத் டைட்டன்ஸ் அணி குவாலிபையர் 1 இல் தோல்வி அடைந்த நிலையிலும், குவாலிபையர் 2 இல் வென்றால், இறுதி போட்டியில் விளையாட வாய்ப்புள்ளது.

**கணிப்பு:**

இறுதி ஆட்டம் சுவாரசியமிக்க போட்டியாக இருந்து ஜி.டி மற்றும் ஆர் சி பி ஆகிய இருவரில் ஒருவர் ஐபிஎல் சாம்பியன் ஆக மாறுவார்கள் என்பதே நமது கணிப்பு.

இதில் சுப்பன் கில் கேப்டனாக தனது முதல் கோப்பையை வெல்லப் போகிறாரா, இல்லை ஆர்சிபி அணி தலைவர் ரஜத் பட்டிதர் கோப்பையை தக்க வைத்துக் கொள்ளப் போகிறாரா என்பதை பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

2011 இல் சிஎஸ்கே அணியும், 2020 இல் மும்பை இந்தியன்ஸ் அணியும், வென்ற கோப்பையை தக்க வைத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 12 : சேரன் வாழியாதன் வேள்விகள்

சேர அரசர் குலத்தில் உதித்த பெருஞ்சேரல் இரும்பொறை, பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகியோரைப் போன்றே செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற மன்னனும் சிறந்த பல வேள்விகளைப் புரிந்துள்ளான். இதற்கு இந்த அரசனைப் புகழ்ந்து பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் பழம்பெரும் புலவர் கபிலர் பாடியுள்ள பாடல்களே சான்று. இந்த ஏழாம்பத்து, வாழியாதனின் வேள்விச் சிறப்புகளை உரைக்கின்ற காரணத்தால் இதன் தலைப்பே உரைசால் வேள்வி என்று பெயர் பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

இந்தப் பத்துப்பாடல்கள் யாரைக் குறித்துப் பாடபடுகின்றன, பாடப்படுபவரின் சிறப்புகள் என்னென்ன ஆகியவை குறித்து முன்னுரை போல, முதலாவதாகப் பாடப்படுகின்ற பதிகச் செய்யுளிலேயே, சேரன் வாழியாதனின் வேள்விச் சிறப்புகளை புலவர் கபிலர் இவ்விதம் விளக்குகிறார்:

ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
**ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி,**
**மாய வண்ணனை மனன்உறப் பெற்று, அவற்கு**
**ஓத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்து,**
**புரோசு மயக்கி,**
**மல்லல் உள்ளமோடு மாசுஅற விளங்கிய**
**செல்வக் கடுங்கோ வாழியாதனைக்**
**கபிலர் பாடினார் பத்துப் பாட்டு.**
**(பதி. 7. பதிகம் 6-13)**

“போற்றுவதற்கு உரிய பெரிய வேள்விகள் பலவற்றைப் புரிந்தவன். அந்த வேள்விகளைச் செய்தபோதிலேயே, அறத்துறையோடு தொடர்புடைய பல்வேறு தானதருமங்களையும் செய்தவன். இந்த வேள்விகளை நடத்திக் கொடுப்பதற்கு மாயவண்ணன் என்ற பெயர் கொண்ட ஆசிரியனை அதாவது ஆசார்யனை, மனம் பொருந்தத் தனது குருவாகக் கொண்டு, அந்த குருவுக்கு உயர்ந்த தரத்தில் நெல் விளையக்கூடிய ஒகந்தூர் என்ற ஊரை இறையிலி எனப்படும் வரியில்லா நிலமாகத் தானம் வழங்கியவன். தனக்குக் குருவாக இருந்த அந்தப் புரோகிதனைக் காட்டிலும் தான் அறவொழுக்கங்களிலும், சாத்திர ஞானங்களிலும் மேம்பட்டவனாகி, அந்தப் புரோகிதனையே பிரமிக்கச் செய்தவன். ஞானம் செறிந்த உள்ளத்தை உடையவனாக, எவ்வித குற்றமும் அற்றவனாக விளங்கிய செல்வக் கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்து, கபிலர் பாடிய பத்துப்பாட்டுகள் இவை” என்பது இந்தப் பதிகச் செய்யுளின் பொருள்.

செல்வக் கடுங்கோ வாழியாதனின் வேள்வி எந்த வகையில் சிறப்புடையதாகப் போற்றப்படுகிறது என்பதை உரைசால் வேள்வி என்ற இந்த ஏழாம்பத்தின் 4-ஆவது பாடலில் கபிலர் எடுத்துரைத்துள்ளார்:

அறம்கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய
**உரைசால் வேள்வி முடித்த கேள்வி,**
**அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு,**
**இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றத்து,**
**களிறுநிலை முணைஇய தார்அருந் தகைப்பின்,**
**(பதி. 7.4. 3-7)**

“அறநூல்களை ஓதிப் பயின்று அறத்திலேயே ஊறித் திளைத்து விளங்குகின்ற நாவினையும், உயர்ந்த புகழ் வாய்ந்த வேள்விகளைச் செய்வதற்கு ஏற்ற முழுமையான வேத அறிவையும் கொண்டுள்ள அந்தணர்கள், அரிய பொருட்களை சேர அரசன் வாழியாதன் நீர்வார்த்துக் கொடுக்க ஏற்றுக்கொள்கிறார்கள். அவ்வாறு நீர்வார்க்கும்போது வடிந்த நீரால் மிகுந்த சேறாகிய மணல் நிறைந்த முற்றமாக செல்வக் கடுங்கோ வாழியாதனின் அரண்மனை முற்றம் காட்சி தருகிறது. இந்தச் சேறு கால்களில் ஒட்டிக்கொள்வதால் அதில் நிற்கப் பிடிக்காததைப் போன்று, அரண்மனை யானைகள் அசைந்தாடியபடி இருக்கின்றன” என்று இந்தப் பாடல் வரிகளுக்குப் பொருள்.

யாகங்களை நடத்திய வேத அறிஞர்களுக்கு, தனது முற்றமே சேறாக மாறும் அளவுக்கு நீரை வார்த்து அரிய பொருட்களைத் தானமாக வழங்கியிருக்கிறார் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்கிறார் கபிலர். அக்காலத்தில் வேதம் ஓதி, வேள்விகளை நடத்திய அந்தணர்கள், அறத்தை ஓதுவதை அன்றி வேறு எதுவும் அறியாமலும், கடுமையான ஒழுக்கத்தைப் பேணியும் வாழ்ந்தவர்கள் என்பதால் அவர்களது வாழ்வியல் வசதிக்கான பொருள்களை அரசர்கள் தானமாக அளித்துள்ளனர் என்பதை இந்தப் பாடல் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இதே ஏழாம் பத்தின் பத்தாம் பாடலில், தமது மனைவியோடும் சுற்றத்தாரோடும் சேர்ந்து சிறந்த வேள்விகளைச் செய்ததன் மூலம் இறைவனையும், வேதத்தில் சிறந்த முனிவர்களையும் வாழியாதன் இன்புறச்

செய்ததாகக் கபிலர் தெரிவிக்கிறார்:

**நகையினும் பொய்யா வாய்மை, பகைவர்**
**புறஞ்சொல் கேளாப் புரைதீர் ஒண்மை,**
**பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்,**
**கற்புஇறை கொண்ட கமழும் சுடர்நுதற்**
**புரையோள் கணவ! பூண்கிளர் மார்ப!**
**தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற,**
**வேள்வியில் கடவுள் அருத்தினை; கேள்வி**
**உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை**

**(பதி. 7.10. 12-19)**

"விளையாட்டாகக்கூட பொய் கூறாத வாய்மையையும், பகைவர்கள் வெளியே எவ்வளவு பழிச்சொல் கூறினாலும் அதற்குச் செவிமடுக்காத குற்றமற்ற சிறந்த அறிவையும் உடையவனே! பெண்மைப் பண்புகள் நிறைந்தவளும், பெரிய மடமென்னும் அடக்கம் நிலைத்திருக்கப் பெற்றவளும், கற்பாகிய இறைத்தன்மை தங்கியிருக்கப் பெற்றவளும், மணங்கமழும் ஒளிவிடுகின்ற நெற்றியை உடையவளும் ஆகிய உயர்ந்தோளின் கணவனே! பூண் பதித்த ஆரத்தை (தங்கச்சங்கிலியை) அணிந்து ஒளிவீசும் மார்பினைக் கொண்ட வாழியாதனே! கொள்கையில் பிறழாதவர்களான அமைச்சர்கள் உள்ளிட்ட சுற்றத்தார் சுற்றியிருக்க, வேள்வி மூலமாக கடவுளை நீ போற்றினாய், இதனால் வேதத்தில் சிறந்தவர்களும் உலகிலேயே உயர்ந்த நிலையை அடைந்தவர்களுமான முனிவர்களை (வேதம் ஒலிக்கும் மேலுலகில் வாழும் முனிவர்கள், தேவர்கள் ஆகிய உயர்ந்தோரை என்றும் எடுத்துக்கொள்ளலாம்) இன்புறுத்தினாய்" என்று இதற்குப் பொருள்.

தொண்டை மண்டலத்தில் வேள்வித் தூண்கள்: தற்காலத்து காஞ்சி, செங்கல்பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய பகுதியை பல்லவ மன்னர்கள் ஆள்வதற்கு முன்பாகவே, தொண்டைமான் எனப்படும் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். ஆகையால் இந்தப் பகுதிகளுக்குத் தொண்டை நாடு, தொண்டை மண்டலம் என்று பெயர். இந்தத் தொண்டைமான்களுக்குத் திரையர் என்ற பெயரும் உண்டு. திரை என்றால் கடல் அலை என்று பொருள். கடலலையில் மிதந்து வந்து பிற்காலத்தில் அரசுக் கட்டிலில் ஏறிய அரசரின் வழிவந்தவர்கள் என்பதால் திரையர் என்ற பெயர் உருவானது.

இந்தத் திரையர்களில் தொண்டைமான் இளந்திரையன் மிகவும் புகழ்பெற்ற அரசன். அந்த அரசனைப் புகழ்ந்து புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ள பெரும்பாணாற்றுப்படை என்ற இலக்கியத்தில், தொண்டை நாட்டுக்கு உட்பட்ட நீர்ப்பெயற்று என்ற இடத்தில் வேள்வித் தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் மகாபலிபுரம் என்று மருவி அழைக்கப்படும் மாமல்லபுரத்தின் பண்டைப் பெயர்தான் நீர்ப்பெயற்று. இனி பெரும்பாணாற்றுப்படை தரும் ஆதாரத்தைப் பார்ப்போம்:

**வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ,**
**புனல்ஆடு மகளிர் இட்ட பொலங்குழை**
**இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தென,**
**புள்ஆர் பெண்ணைப் புலம்பு மடல் செல்லாது,**
**கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த**
**வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்**
**ஓதிம விளக்கின், உயர்மிசைக் கொண்ட,**
**வைகுறு மீனின், பைபயத் தோன்றும்**
**நீர்ப்பெயற்று எல்லைப் போகி**

**(பெரு. 311-319)**

"(நீர்ப்பெயற்று என்னும் ஊரில் அமைந்துள்ள) துறையில் தண்ணீருக்குள் தமது தோழிகளோடு மகளிர் வண்டல் விளையாட்டை விளையாடி மகிழ்வர். அவ்வாறு தண்ணீருக்குள் விளையாடும்போது தங்களது நகைகளைக் கடற்கரையிலே கழற்றிவைத்துவிட்டு அவர்கள் விளையாடுவர். அந்தத் தங்க நகைகளைப் பார்த்ததும், இரைதேடி அலையும் மணிச்சிரல் எனப்படும் மீன்கொத்திப் பறவை, கரையிலே தங்களது இரையாகிய தங்கமீன்கள்தான் ஒதுங்கியுள்ளன என்று கருதி அவற்றின் மீது பாயும். அவை இரை அல்ல என்று அறிய நேர்ந்ததும் அரண்டுபோய், அருகே பல பறவைகள் அமர்ந்திருக்கும் புன்னை மர மடலில்கூட அமராமல், நெடுந்தூரம் பறந்து செல்லும். அங்கே ஊர்ப்பகுதியில், எழுதப்படாமல் செவி வழியாகவே கேட்டு ஓதிப் பழகி வேதத்தைக் கற்றுத் தேர்ந்த அந்தணர்கள், அரிய கடன்களான வேள்விச் சடங்குகளைச் செய்து நட்டு வைத்திருக்கும் வேள்வித் தூணின் மீது அந்த மீன்கொத்திப் பறவை உட்காரும். அது அவ்விதம் அமர்ந்திருப்பது, (அந்தக் காலத்தில்) யவனர்கள் (கிரேக்கர்கள், ரோமானியர்கள்) இங்கே வந்து விற்பனை செய்கின்ற அன்ன விளக்கைப்போல் காட்சி தரும். அவ்விதம் அந்தணர்கள் மிகுதியாக வாழும் நீர்ப்பெயற்று என்ற ஊரின் எல்லையைத் தாண்டிச் செல்ல வேண்டும்" என்று இதற்குப் பொருள்.

இளந்திரையனிடம் பரிசில் பெற்று வந்த பெரிய பாணன் ஒருவன், மற்றொரு பாணனுக்கு தொண்டை நாட்டின் பல்வேறு பகுதிகள் வழியாக இளந்திரையன் வாழும் காஞ்சிபுரத்துக்குச் செல்கின்ற வழியை எடுத்துரைக்கும்போது இவ்விதம் கூறுவதாக அந்தப் பாடல் வரிகள் அமைந்துள்ளன. இதிலே கடற்கரை நகரமான மாமல்லபுரத்தில் அந்தணர்கள் மிகுதியாக வாழ்ந்ததும், அவர்கள் சிறப்பான வேள்விகளைச் செய்து வேள்வித் தூண்களை நட்டிருப்பதும் கூறப்பட்டுள்ளது.

இவ்விதம் வேதமும் வேள்வியும் தங்களுக்கு உரியதாகக் கொண்டிருந்த பழந்தமிழர்கள், "இமயம் முதல் குமரி வரையான எங்கள் நாடு பாரதம்" என்ற நினைவோடு வாழ்ந்த விவரத்தை இனி காண்போம்....

(தொடரும்)

# நமக்கான USER MANUAL



இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## அறிவே தேரோட்டி, மனமே கடிவாளம். மனசாட்சியே இறைவன்

தினமும் செய்திகள் மற்றும் மீடியாக்கள் மூலமாக சமூகத்தில் நடக்கின்ற இவ்வளவு சீரழிவுகளை பார்த்தும் தெரிந்தும் கூட நமது சமுதாயம், ஒன்றுமே நடவாதது போல புலன்களைப் பின்பற்றி மனம் போன போக்கில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு தனிமனித சுதந்திரம் என்று பெயரிட்டு தன்னைத்தானே தினம் தினம் அழித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. செய்தி நிறுவனங்களும் மீடியாக்களும் சினிமாக்களும் தங்களது வியாபாரத்திற்காக, இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கொட்டமடித்து ஆட்டம் போடுவதை மட்டுமே வாழ்வில் ஜெயித்துவிட்டதைப் போல வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. ஆனால் ஆடாத ஆட்டம் ஆடிய பின் அடங்கிப் போய் நடைபிணங்களாக அவர்கள் இளம் வயதிலேயே இயந்திரங்களாக வாழ்க்கையைத் தொலைத்து ஆனாதைகளாக நிற்பதை வெளியே சொல்வதில்லை.



கட்டுக்கடங்காத குதிரைகளைப் போன்ற இயல்புகளை உடைய நமது ஐந்து புலன்களையும் அடக்கி நமக்கு தேவையான வகையில் அவற்றை இயக்கி வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ வழிநடத்துவதுதான் அறிவின் செயல். இந்த வகையில் அறிவின் இயக்கம் மிகவும் முக்கியமானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லையற்ற சக்திகள் நிறைந்த இறைவனே நம்முள் மனசாட்சியாக இருந்துகொண்டு நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பதை நாம் உணரவேண்டும். அவ்வாறு அனைத்தும் அறிந்த மனசாட்சியின் வசம் நமது அறிவை ஒப்படைத்துவிட வேண்டும். அப்போது இறைவனே நம்முடைய அறிவுக்கு தெளிவு காட்டி, நம்மை வழிநடத்த தொடங்குகிறான் என்பதை நாம் அனுபவிக்கத் தொடங்குவோம். அவ்வாறு மனசாட்சி நமக்கு நேரடியாக உண்மைகளை உள்ளபடி உணர்த்தும் செயலுக்கு ஆங்கிலத்தில் Intuition என்று சொல்வார்கள். அவ்வாறு உள்ளுணர்வைச் சார்ந்து இயங்கும் அறிவு முழுமையான சுயக்கட்டுப்பாட்டுடனும், எப்போதும் விழிப்புடனும், வரவிருக்கின்ற ஆபத்துக்களை முன்னரே உணர்ந்ததாகவும், சீரிய தொலைநோக்கு உள்ளதாகவும், எப்படிப்பட்ட சவால்களையும் சந்தித்து முறியடிக்கக் கூடிய ஆற்றல் படைத்ததாகவும், எல்லைகளே இல்லாத சக்தி படைத்தாகவும் இருக்கும். இப்படிப்பட்ட அறிவை உடையவர்களே மேதைகளாகவும், தலைவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், சாதனையாளர்களாகவும் உருவெடுக்கின்றார்கள்.

இவ்வாறு இறைவனிடம் ஒப்படைக்கப்பட்ட அறிவு ஒருபோதும் மனம் என்ற கடிவாளத்தை தன் கையிலிருந்து நழுவவிட்டுவிடாது. அவ்வாறு பக்குவப்பட்ட அறிவினிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது நமது மனம். இதிலிருந்து நமது மனதின் நிலை என்ன, அதன் முக்கியத்துவம் என்ன, நாம் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் தரவேண்டும், தரக்கூடாது என்பதை உணர்ந்து புரிந்துகொள்ள வேண்டும். ஐந்து கடிவாளங்களில் ஒரு கடிவாளம் அறுந்துவிட்டால் அதை வீசி எறிந்துவிட்டு வேறு கடிவாளத்தைத் தயார் செய்து பொறுத்திக் கொள்வதுபோல், ஏதேனும் ஒரு விஷயத்தில் நமது மனம் நமது கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால், அறிவின் பலத்தால் மனதை மாற்றிக்கொள்ளத் தயங்கக்கூடாது. ஐம்புலன்களால் ஏற்படுகின்ற உணர்ச்சிகள் நமது கட்டுப்பாட்டை மீறி நம்மை ஆட்டிப்படைக்க விடாமல் அவற்றை முறைப்படுத்தி, எது சரி எது தவறு என்று பகுத்தாராய்ந்து முடிவெடுக்கும் அறிவின் கையில் ஒருசேர இழுத்து ஒப்படைப்பது மட்டுமே மனம் என்னும் கடிவாளத்தின் வேலை. ஆக, மனம் என்கின்ற கடிவாளம் 24 மணிநேரமும் அறிவின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை மனம் ஏற்றுக்கொள்ளுமா, அந்த மனதின் இயல்பு எப்படிப்பட்டது என்பதை அடுத்த தொடரில் பார்ப்போம்.

(தொடரும்)



# சிறந்த மனிதனாக வாழ சீரிய வழிகள்

**வ ரங்கநாதன்,**
**ஆளுமைத் திறன் பயிற்றுநர்**

காசு உள்ளவனையும் மூளை உள்ளவனையும் மட்டுமே சிறந்த மனிதனாகப் பார்க்கும் வழக்கம் பாரத நாட்டு மரபில் கிடையாது. அதனால்தான் கோவணம் கட்டிய காசில்லாத துறவியின் காலடியில் நாட்டு மன்னனும் வீழ்ந்து வணங்கினான்.

சிறந்த மனிதனாக வாழ துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ ஐந்து வழிகள் உள்ளன. அதன்படி வாழ்ந்தால் சுற்றம் போற்றும் நல்லவராக வழலாம்.

**1.சுய ஒழுக்கம்**

ஒழுக்கம் என்பது தனிப்பட்ட சக்தியின் அடித்தளமாகும். இது உங்களை கவனம் செலுத்தவும், கவனச்சிதறல்களைக் கடக்கவும், உங்கள் இலக்குகளைத் தடையின்றி அடையவும் உதவுகிறது. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்கிறார் திருவள்ளுவர்

**அதை எப்படி உருவாக்குவது?**

**சிறியதாகத் தொடங்குங்கள்:** தினமும் சிறிய இலக்குகளை அமைத்து தோல்வியின்றி அவற்றை அடையுங்கள்.

வழக்கங்களை உருவாக்குங்கள் :உங்கள் இலக்குகளுடன் ஒத்துப்போகும் காலை மற்றும் மாலை வழக்கங்களை உருவாக்குங்கள்

**சபலங்களைத் தாமதப்படுத்துங்கள்:** அற்ப சந்தோஷங்களை விட நீண்ட கால வெகுமதிகளுக்கு முன்னுரிமை அளிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

**2.உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துங்கள்:**

உங்கள் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதும் ஒழுங்குபடுத்துவதும் உங்கள் முடிவெடுக்கும் திறனையும், பிறரோடும் கொள்ளும் உறவினையும் மேம்படுத்துகிறது. இது உங்களை மேலும் கவர்ச்சி கரமானவராக்குகிறது. பிறரால் உங்களை எளிதில் அணுகக் கூடியவராகவும் ஆக்குகிறது.

**உணர்ச்சிவசப்படாத மனநிலையை எப்படி உருவாக்குவது?**

உங்கள் உணர்வுகள் மற்றும் தூண்டுதல்களைப் பற்றி சிந்தியுங்கள்.

தூண்டுதல்கள் எவை என அறிய வந்தால் அதை விலக்குங்கள்.

அல்லது மாற்று வழி கண்டுபிடியுங்கள். மனப் பயிற்சி மேற்கொள்ளுங்கள். சுயவிழிப்புணர்வை கடைபிடியுங்கள்.

**பரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.**

பிறர் பேசும்போது கவனமாகக் கேளுங்கள், மற்றவர்களின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அவர்களை எடைபோடாமல் மதிப்பு கொடுத்து பழகுங்கள்.

**மன அழுத்தத்தை சரி செய்யுங்கள்:**

நிகழ்பொழுது கவனத்தை அதிகரிக்க பயிற்சி செய்யவும். இந்த நொடியில் கவனத்தை வைக்கவும். சுவாசத்தை கவனிப்பதும் நிகழ்பொழுது கவனத்தைத் தரும். இவை மன அழுத்தத்தைப் போக்கும்.

**3.நம்பிக்கையுடன் பேசுங்கள்**

சக்திவாய்ந்த ஆளுமைகள் திறமையான தொடர்பாளர்கள் ஆகிறார்கள்.. அவர்கள் தங்கள் கருத்துகளை தெளிவாக எடுத்துச் சொல்கிறார்கள், உற்சாகமாக பிறர் சொல்வதைக் கேட்கிறார்கள், தங்கள் வார்த்தைகள் மூலம் மற்றவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

**அதை எப்படி உருவாக்குவது?**

“கீழோர் ஆயினும் தாழ உரை” என்பது ஔவையாரின் கொன்றை வேந்தன். ஒருவர் கல்வியிலோ, செல்வத்திலோ, பதவியிலோ உன்னைவிடக் குறைந்தவராக (கீழோர்) இருந்தாலும், அவர்களிடமும் பணிவாகவும், தாழ்மையாகவும், மரியாதையுடனும் பேச வேண்டும் (தாழ உரை) என்பது இதன் பொருளாகும்சுயமதிப்பும் பணிவும் இயல்பான குணமாகிட வேண்டும்.

**4.புலம்புவதை விட்டு விடுங்கள்**

உங்கள் வாழ்க்கையின் சிக்கல்களைக் கண்டு அஞ்சி புலம்புவராக இருக்காதீர்கள். புலம்புவதால் பயன் ஒன்றுமில்லை. பரிதாபம் கிடைக்கலாம். பலன் கிடைக்காது. போகப் போக மக்கள் உங்கள் புலம்பலைக் கேட்டு சலித்துப் போய் விலகி விடுவார்கள்

**5.சிக்கல்களை சந்தித்து சரி செய்பவராகிடுங்கள்**

தப்பித்தல் தீர்வாகாது, என் பிரச்சனைக்கு நானே தீர்வு கண்டு பிடிக்க வேண்டும் என்ற உறுதி உடையவராக இருந்து தீர்வும் கண்டுபிடித்து சரி செய்தால் பிறர் உங்களைப் பாராட்டி மதிப்பார்கள்.

இந்த 5 குணங்களும் உங்களை மனிதருள் மாணிக்கமாக்கும்.

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 15)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.-ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம். இந்த நாடு ஹிந்து நாடு என்பதன் பொருள் இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் பன்னெடுங்காலமாக ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதே.

**சிலப்பதிகாரத்திற்குள் ஒரு வந்தே மாதரம்**

வந்தேமாதரம் இந்த நாட்டின் தேசிய கீதம்; இந்த நாட்டின் தேசியத் தன்மையின் அடையாளம். பாரத நாட்டை லக்ஷ்மி, சரஸ்வதி மற்றும் துர்கையின் வடிவமாகப் போற்றித் துதிக்கிறது வந்தேமாதரம். சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டம் அழற்படு காதையில்

**மாமகளும், நாமகளும், மா மயிடன் செற்று உகந்த**
**கோமகளும், தாம் படைத்த கொற்றத்தாள்; நாம**
**முதிரா முலை குறைத்தாள்; முன்னரே வந்தாள்-**
**மதுராபதி என்னும் மாது.**

என்னும் பாடலில் திருமகள், கலைமகள், மயிடன் தலையில் நடனமாடும் கொற்றவை இவர்களைப் போல, கண்ணகி காணப்பட்டாள் என்று கூறி கண்ணகியைப் போற்றுகிறார் இளங்கோவடிகள். தெய்வ வடிவினளாக விளங்கிய கண்ணகியை இளங்கோவடிகள் எப்படி முப்பெரும் தேவியரின் வடிவமாகத் துதித்தாரோ அதே போல பக்கிம் சந்திரரும் தெய்வ வடிவினளாக விளங்கிய பாரதத் தாயை முப்பெருந் தேவியரின் வடிவமாக "வந்தே மாதரம்" என்று துதித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் இந்த மரபுதான் நமது தேசியத் தன்மை.

**தமிழகத்தை இணைக்கும் மகாபாரதம்**

சென்ற பகுதிகளில் பாரத நாடு முழுவதும் எப்படி ராமாயணம் இணைத்து வந்திருக்கிறது என்று பார்த்தோம். ராமாயணத்தைப் போலவே மகாபாரதமும் இந்த நாட்டு மக்களின் வாழ்வியல் முறைகளோடு கலந்து இந்நாட்டை ஒருங்கிணைத்து வருகிறது. குறிப்பாக தனித் தமிழ் தேசியம் பேசும் திராவிட சிந்தனாவாதிகள் ஏற்படுத்தி வரும் குழப்பங்களுக்காகவே இந்தப் பகுதி பேசப்படுகிறது.

மாபாரதக் கதைகள் பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் பரவியிருந்தன என்பது சங்க நூற்களால் அறிய முடிகின்றது. தமிழ் மக்கள் அக்கதைகளில் பெரிதும் ஈடுபட்டு அவற்றை அறிந்துகொள்வதற்கு ஆர்வமுடையவர்களாக இருந்ததை உணர்ந்த பாண்டிய வேந்தன் அதை தமிழில் மொழிபெயர்க்க விரும்பினான். கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய 'பெருந்தேவனார்' என்பார். அவ்வேந்தன் வேண்டுகோளுக்கிணங்கி அப்பெரு நூலைப் பன்னீராயிரம் வெண்பாக்களில் பாடி முடித்தார் என்பதைக் கீழ் வரும் பாடல் குறிப்பிடுகிறது.

**சீருறும் பாடல்பன் னீராயிரமுஞ் செழுந்தமிழ்க்கு**
**வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்**
**பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்**
**மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே.**

அப்புலவர்பெருமான் 'பாரதம்' பாடிய பெருந்தேவனார் என்று சங்கப் புலவர்களாலும், பாண்டிய வேந்தனாலும் பாராட்டி வழங்கப்பெற்றனர்.

கி.பி. 900 முதல் 920 வரையில் பாண்டிநாட்டில் ஆட்சி புரிந்த 'மூன்றாம் இராஜசிம்ம பாண்டியன்' என்பான் தனது சின்னமனூர்ச் செப்பேடுகளில், கடல்கோளுக்குமுன் தன் முன்னோர் காலத்தில் நிகழ்ந்த மூன்று அரிய பெரிய செயல்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: (1) 'மாபாரதந் தமிழ்ப்படுத்தியது', (2) 'மதுராபுரிச் சங்கம் வைத்தது' (3) 'தலையாலங்கானத்துக் கிடைத்த வெற்றி' என்றும் குறிப்பிட்டிருப்பதன் மூலம் மகாபாரதத்திற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் பாண்டிய மன்னர்களால் கொடுக்கப்பட்டது என்பதை அறியலாம்.


தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலங்களில் ஊர்தோறும் மன்றங்களில் இரவில் மாபாரதம் படித்துப் பொருள் கூறப்பட்டு வந்தது என்பது, அவ்வேந்தர்களின் செப்பேடுகளாலும், கல்வெட்டுக்களாலும் அறியப்படுகிறது. (South Indian Inscriptions Vol.III NO 206). அரசர்களும், பிற செல்வர்களும், ஊர்களில் பாரதம் படித்தற்கு 'நிவந்தங்கள்' அளித்துள்ளனர்; அன்றியும், அவர் இறையிலியாக வழங்கியுள்ள ஊர்களில் பாரதம் படிப்போர்களுக்குப் 'பங்குகளும்' அளித்திருந்ததை பல்லவ வேந்தனாகிய 'முதல் பரமேச்சுரவர்மன்' (கி.பி 670-685) என்பான் கூரத்து செப்பேடுகளால்' புலப்படுகின்றது. (South Indian Inscriptions Vol. I)

மஹாபாரதப்படைகளுக்கு உணவிட்ட சேரன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன், ராஜசூய

யாகம் நடந்த போது தெற்கே சகாதேவனின் தென் திசை விஜயம், காவிரியை கங்கையோடு ஒப்பிட்டு வர்ணனை, திரமிட நாட்டவர்கள் சகதேவனை காண கூட்டம் கூட்டமாக வந்து பல உயர்ந்த பரிசுகளை வழங்கியது, சோழ தேசத்து அரசன் சகதேவனின் தூதுவனுக்கு மரியாதை செய்து உபசரித்தது ராஜசூய யாகத்தை ஏற்றது, பாண்டியனுடன் நடைபெற்ற ஒரு நாள் யுத்தம், அதன் பிறகு பாண்டியனும் ராஜசூய யாகத்தை ஏற்றது, பாண்டிய இளவரசி சித்ராங்கதை சகதேவனுக்கு மரியாதையின் காரணமாக உயர்ந்த பரிசுகளை அனுப்பி வைத்தது, பிறகு தாமிரபரணி தீரத்துக்குச் சென்று தென் தேசம் முழுவதும் ராஜசூயத்தை அங்கீகரிக்க வைத்தது, அங்கிருந்து இலங்கை அரசன் விபீஷணனுக்கும் செய்தி அனுப்பியது, அவனும் யாகத்தை ஏற்ற வைத்தது, தமிழகம் முழுவதும் எல்லா கிராமங்களிலும் இன்றளவும் உள்ள திரௌபதி அம்மன் கோவில் வழிபாடு என இவை அனைத்தும் மஹாபாரதம் எப்படி தமிழகத்தை இந்த நாட்டின் பண்பாட்டோடு இணைத்து வந்திருக்கிறது என்பதற்கான சில சான்றுகள்.

**பாரதத்தின் பிற பகுதிகளில் மகாபாரதம்**

தமிழகம் எப்படி மகாபாரதத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டதோ அதைப் போலவே நாட்டின் மற்ற பகுதிகளும் மகாபாரதத்துடன் பிணைந்து உள்ளதைப் பார்க்கலாம். மகாபாரதம், இமயமலை முதல் தெற்கு முனை வரையிலான பண்டைய புவியியல் இடங்கள், வர்த்தகப் பாதைகள் மற்றும் கலாச்சார சிறப்பு மிக்க இடங்கள் அனைத்தையும் ஒரு பரந்த வலைப்பின்னல் மூலம் ஒன்றிணைக்கிறது. மகாபாரதத்தில் குறிப்பிட்டுள்ள இடங்களைக் குறித்தாலே அன்றைய பாரதத்தின் கலாச்சார வரைபடம் (Culturual Map of ancient India of Mahabharat



time) நமக்குக் கிடைக்கும்.

மகாபாரதம் நாடு தழுவிய பிரம்மாண்டமான பயணங்களையும் புனித யாத்திரைகளையும் விவரிக்கிறது. ஹஸ்தினாபுரம் (மீரட், உத்தரப்பிரதேசம்) மற்றும் இந்திரப்பிரஸ்தம் (டெல்லி) போன்ற இடங்கள் மகாபாரத காவியத்தின் மையப்புள்ளிகளாகத் திகழ்கின்றன. பாண்டவர்களின் வனவாசமும், அவர்களின் இறுதிப் பயணமும் (மகாபிரஸ்தானம்), உத்தரகாண்டில் அமைந்துள்ள உயரமான மலைப்பகுதிகளில் உள்ள பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் ஆகிய புனிதத் தலங்களை ஒன்றிணைக்கின்றன. அர்ஜுனனின் பயணங்களாலும், பாண்டவ சகோதரர்களின் போர்ப் பயணங்களாலும் (திக்விஜயம்) பாரத நாட்டின் தெற்குப் பகுதி வரை எல்லைகள் விரிவடைந்தன. இதில் பாண்டியர்கள், சோழர்கள் மற்றும் கேரள அரசுகள் இடம்பெற்றிருந்தன. சித்ராங்கதையை அர்ஜுனன் மணந்ததன் மூலம், வடகிழக்குப் பகுதியிலுள்ள மணிப்பூருடனும் அர்ஜுனனைப் பற்றிய செவிவழிச் செய்திகள் இணைக்கின்றன. புனித நகரமான வாரணாசி (காசி), துவைதவனம் காடுகள் மற்றும் துவாரகை (இன்றைய குஜராத்) போன்ற பகுதிகள், இக்கதையின் புவியியல் ரீதியான முக்கிய மையங்களாகச் செயல்படுகின்றன. மைய நிகழ்வான குருக்ஷேத்திரப் போர் (இன்றைய ஹரியானா பகுதியில் நடைபெற்றது). குருக்ஷேத்திரப் போர், பாரத நாடு முழுவதிலும் அக்காலத்தில் இருந்த அத்தனை அரசுகளையும் ஒன்றிணைத்தது. பாண்டவர் மற்றும் கௌரவர் படைகள், பஞ்சாப், அசாம் (பிரக்ஜோதிஷம்), வங்காளம் (வங்கம்) மற்றும் இந்தியாவின் தெற்குப் பகுதிகள் எனப் பல இடங்களிலிருந்தும் வந்த வீரர்களைக் கொண்ட ஒரு பரந்த கூட்டணியாகத் திகழ்ந்தன. பாரதவர்ஷம்' எனும் பரந்துபட்ட பகுதியில் உள்ள அனைத்து அரசர்களும் ஈடுபட்டதாலேய இது மகாபாரதம் எனப் பெயர் பெற்றது.

வழிபாட்டுத் தலங்கள் மற்றும் உள்ளூர் நாட்டுப்புறக் கதைகளின் வாயிலாக, நமது நாட்டு மக்களின் வாழ்வியலோடு மகாபாரதம் ஆழமாகப் பிணைந்துள்ளது. உத்தரகாண்டின் கார்வால் இமயமலைப் பகுதிகளில், உள்ளூர் சமூகத்தினர் மகாபாரதக் கதைகளை 'பாண்டவ லீலை' எனும் வருடாந்திர கலை நிகழ்ச்சிகள் மூலம் இன்றும் நடத்தி வருகின்றனர். இதன் வாயிலாக, மகாபாரதம் அவர்களின் அன்றாட கலாச்சார வாழ்வில் உயிர்ப்புடன் திகழ்கிறது. இமயமலையில் அமைந்துள்ள ஐந்து புனிதமான சிவ ஆலயங்கள் பாண்டவர்களுடன் தொடர்புடையவை. இவை பஞ்ச கேதார் என்று அழைக்கப்படுகின்றன.

மகாபாரதம் தனது தத்துவ மற்றும் அறநெறிக் கோட்பாடுகள் வாயிலாக பாரத நாட்டை ஒன்றிணைக்கிறது. பாரத மொழிகள் அனைத்திலும் 'பகவத் கீதை' க்கான விளக்கவுரைகள், பாஷ்யங்கள் எழுதப்பட்டுள்ளன. நாடு முழுவதும் எல்லா மாநிலங்களிலும், எல்லா மொழிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கதைகளிலும், தெருக்கூத்துக்களிலும் மகாபாரதக் கதைகள் இன்றளவும் இடம் பெற்று வருகின்றன.

ராமாயணமும், மகாபாரதமும் இன்றளவும் உயிர்ப்புடன் இந்த நாட்டைக் கட்டிப் பிணைத்து வரும் மாபெரும் காவியங்கள்.

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் – பகுதி 14



- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**வில்லினை எடு வீரா**

அவர் எழுதிய பாடல்களிலே நரபலி கொடுத்த வீரவங்கமும் என்ற பாடல் வரிகளைப் பற்றி இங்கு காண்போம். 1947ல் மதத்தின் அடிப்படையில் நாடு பிளவுபடுத்தியத்தை நினைவுறுத்தி வீர சபதம் எடுக்க வலியுத்தும் பாடல் இது. இந்தப் பாடல் 1947களில் நாடு பிரிவினை ஆன உடன் வெளிவந்த பாடல்.

இந்த பாடலின் தலைப்பு வில்லினை எடு வீரா என்று தரப்பட்டுள்ளது. வில்லினை எடுப்பவன் மனநிலை வேண்டும். "Prepare Yourself" என்று மனத்தயாரிப்பினை ஏற்படுத்தும் பாடல் இது. வில்லினை எடு வீரா என்பது இனி பொறுக்காதே, வில்லினை எடுத்து கணையினை இலக்கை நோக்கித் தொடு, பொறுத்தது போதும் என்று கிருஷ்ணன் அர்ஜுனனிடம் சொல்வது போல் அமைந்துள்ளது.

1947ல் தேச பிரிவினை காலத்தில் படுகொலைகள் நடந்தன. ஹிந்துக்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். இதனால் வேதனையடைந்த பாடலாசிரியர் இராமகோபாலன்ஜி தனது மனக்குமுறலை இந்தபாடலில் விவரித்துள்ளார்.

பாஞ்சாலம் என்பது இன்றைய பாகிஸ்தானையும், வங்கம் என்பது அன்றைய கிழக்கு பாகிஸ்தானை (இன்றைய பங்களாதேஷ்) யும் குறிப்பிடுகின்றது.

லட்சக்கணக்கில் நரபலி தந்து பிளவுபட்ட இந்த நாடு பிணைந்து எழுவது எப்போது என்பது தான் உலகை அசைத்து கேட்கும் கேள்வியுடன் பாடல் ஆரம்பிக்கிறது.

அடக்க வேண்டியது யார் யாரை? - மதவெறியோரை, விஷ நெஞ்சோரை, கொடுமையாளரை; எப்படி அடக்க வேண்டும்? - வில்லினை எடுத்து அடக்க வேண்டும். பச்சைக் கொடி அகன்று நமது பண்பாட்டின் சின்னமான பகவா கொடி என்னும் காவிக்கொடி வானில் பறக்க வேண்டும்.

ஸ்ரீ.கோபால்ஜி அவர்கள் இந்தப் பாடலில் வரும் அனைத்து வரலாற்றுச் சம்பவங்களையும் உணர்வுபூர்வமாகக் கூறி, இறுதியில் அவரே இந்தப் பாடலைப் பாடி எல்லோரையும் திரும்பப் பாடச் சொல்லுவார். அவரது இந்த ஒரு பாடல் மூலமாக உத்வேகம் பெற்று முழு நேரத் தொண்டர்களாகி தனது வாழ்க்கை முழுவதையும் ஹிந்து சமுதாயப் பணிக்கே அர்ப்பணித்தவர் பலர். அந்த அளவு மந்திர சக்தி உள்ள பாடல் இது.

**கூவி அழைக்கும் வரலாறு**

இந்தப் பாடலின் முதல் சரணத்தில் சித்தூர் கோட்டையில் இருமுறை தீக்குளித்த 38,000 பெண்களின் தியாக வரலாறு, 1576ல் ஹல்திகாடி என்ற இடத்தில் முகலாயப் படைகளுடன் மோதி மகா ராணா பிரதாப் சிம்மனுடன் உயிர் துறந்த வீரர்களின் வரலாறு, சீக்கிய வீரன் பந்தா பைராகி, மதம் மாற மறுத்ததால் சொல்லொணா சித்ரவதைகளை அனுபவித்த சிவாஜியின் மகன் சாம்பாஜி, முஸ்லிம் மதவெறியின் நேரடி நடவடிக்கை நாளில் நவகாளி என்ற இடத்தில் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் ஆகிய வரலாற்றுச் சம்பவங்கள் பேசப்படுகின்றன. இஸ்லாமிய மதமாற்றத்தை எதிர்த்தும், ஜிஹாதி பயங்கரவாதத்தை எதிர்த்தும் ஹிந்து சமுதாயத்தைக் காக்கவும் தங்களைத் தியாகம் செய்த வீர வரலாறு இந்தப் பத்தியில் நினைவு கூறப்படுகிறது.

**சித்தூர்க் கோட்டையின் ஜவ்ஹர்**

அக்காலத்தில் டெல்லி சுல்தானாக இருந்த அலாவுதீன் கில்ஜி, மேவார் நாட்டின் தலைநகரான சித்தோர்கார் கோட்டையை முற்றுகையிட்டு, அந்நாட்டிற்கு எதிராக ஒரு போர்ப் பயணத்தைத் தொடங்கினான். 1303-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அலாவுதின் கில்ஜியின் வெறி கொண்ட படைகளை மேவாரின் இந்து மன்னரான ராவல் ரத்தன் சிங், மிகுந்த வீரத்துடன் எதிர்த்து நின்று, ஏழு மாதங்களுக்குத் தளராமல் போரிட்டார்; இறுதியில், போரில் வெற்றி பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டதை உணர்ந்த ராஜபுதனப் பெண்கள் தங்களது தன்மானத்தைக் காத்திட ராணி பத்மினியுடன் தீக்குளிப்பது என்று முடிவு செய்தனர். 1303-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26-ஆம் தேதி ராஜபுதனப் பெண்கள் தங்களைத் தீயில் மாய்த்துக் கொண்ட இந்த நிகழ்வு 'ஜவ்ஹர்' (Jauhar) என்று அழைக்கப்படுகிறது.

காமவெறி கொண்ட கில்ஜிப் படையினருக்கு எதிராக வேறு எந்த மாற்று வழியும் இல்லை. இறப்புக்குப் பின்னர்கூட ஆப்கானியர்களால் தங்கள் உடல்களைத் தீண்டிக் களங்கப்படுத்த இயலக்கூடாது

என்று அம்மகளிர் உறுதிகொண்டனர்; அதனாலேயே அவர்கள் தீக்குளித்து உயிர்துறக்கும் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். சித்தூரின் மகாராணி பத்மினியுடன் சுமார் 25,000 பெண்கள் தீக்குளித்து அந்த ஈவிரக்கமற்ற படையெடுப்பாளர்களின் முகத்தில் தன்மானத்துடன் கூடிய ஓர் அறையினைப் பதித்தனர்.

கோட்டையின் மையப்பகுதியில் அமைந்திருந்த ஒரு பிரம்மாண்டமான தீக்குண்டத்தில் நெருப்பு மூட்டப்பட்டது. பின்னர், மணப்பெண்களைப் போல தங்களை அலங்கரித்துக்கொண்டு நகைகளை அணிந்த அந்தப் பெண்கள், அரசியின் தலைமையில் அந்தப் புனிதத் தீயை நோக்கி அணிவகுத்துச் சென்று, ஒருவர்பின்ஒருவராக அந்தத்தீச்சுவாலைகளில் குதித்துத் தங்கள் உயிரைத் துறந்தனர். யாருடைய முகத்திலும் மரண பயமோ, தயக்கமோ, வருத்தமோ, கண்களில் கண்ணீரோ இல்லை. ஒரு பெருமிதமும், நிம்மதியும் அவர்களின் முகத்தில் காணப்பட்டது. கைக்குழந்தைகளாக இருந்த பெண் குழந்தைகள் முதற்கொண்டு எல்லா வயதுப் பெண்களும், எல்லா சாதிப் பெண்களும் தீக்குளித்தனர். பச்சைக் குழந்தைகளை மார்போடு அணைத்துத் தாய்மார்கள் தீக்குண்டத்தில் குதித்தபோது அந்தக் குழந்தைகளின் மரண அலறல் எதிரொலித்தது. இதயத்தை உருக்கும் இந்தக் காட்சியை நேரில் கண்ட அந்தப் பெண்களின் மகன்களாகவும், கணவர்களாகவும், அப்பாக்களாகவும் இருந்த ஆண்கள், மறுநாள் காலையில் எதிரிகள் மீது தொடுக்கவிருக்கும் இறுதித் தாக்குதலுக்காக அந்தத் தியாகத் தீக்குண்டத்தின் முன் வீர சபதம் எடுத்தனர். மறுநாள் விடியற்காலைப் பொழுதில், காவி நிறத் தலைப்பாகை (ஸஃபா) அணிந்த ஆண்கள், தங்கள் இறுதி இலக்கான போர்க்களத்தில் வீரமரணம் அடைதல் எனும் நோக்கத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். கோட்டையின் வாயிலைத் திறந்து, கில்ஜி படையினருடன் மோதினர்.

ஒரு பயங்கரமான போருக்குப் பிறகு, கில்ஜி படையினர் சித்தோர்க் கோட்டையைக் கைப்பற்றினர். மன்னர் ரத்தன் சிங் தனது அனைத்து வீரர்களுடனும் வீரமரணம் அடைந்தார். அலாவுதீன் கோட்டைக்குள் நுழைந்தபோது, பத்மினி மற்ற பெண்களுடன் சேர்ந்து தீயில் கருகிச் சாம்பலாகியிருந்த நிலையில் வெறி கொண்ட கில்ஜி, கோட்டையில் மீதம் இருந்த 30,000 ஆண்களை (குழந்தைகள், வயதானவர்கள் உட்பட) ஒருவர் பாக்கி இல்லாமல் கொன்று குவித்தான். பிறகு சித்தோர்க் கோட்டையை 'கிஜ்ராபாத்' என்று பெயர் மாற்றினான் கில்ஜி. கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமீர் குஸ்ரூ, கில்ஜியின் படையெடுப்பில் அவருடன் சென்றிருந்தார். குஸ்ரோ தனது 'தாரிக்-இ-அலாய்' நூலில் இந்தப் போரை பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1535-ஆம் ஆண்டில் குஜராத்தின் பகதூர் ஷாவின் தாக்குதலால் ஜவ்ஹரின் இரண்டாம் கட்டம் நிகழ்ந்தது. இதில் மகாராணா சங்காவின் மனைவி மகாராணி கர்ணாவதி, சுமார் 13,000 பிற பெண்களுடன் இதே சித்தூர் கோட்டையில் இரண்டாவது முறை ஜவ்ஹர் செய்தார். ஜவ்ஹரில் எல்லாவற்றையும் இழந்த ராஜபுத்திர வீரர்கள், பசித்த சிங்கங்களைப் போல மிலேச்சர்களை வேட்டையாடி, இந்திய மண்ணைப் பாதுகாப்பதற்காகப் போராடி வீரமரணம் அடைந்து, மாவீரர்களாக தங்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டனர்.

நெஞ்சை உலுக்கும் இந்த ஜவ்ஹர் சுயமரியாதையை உறுதியாக நிலைநாட்ட ஹிந்துப் பெண்கள் செய்த ஒரு உச்சகட்ட தியாகமாகும். ஜவ்ஹர் சம்பவம், தேசத்தின் ஹிந்து மக்களை ஒருபோதும் சரணடையாமலும், ஒருபோதும் அடிமைத்தனத்தை ஏற்காமலும் இருக்கத் தூண்டியது.

பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும், இன்றும் மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்து, உத்வேகமாகத் திகழ்கிறது, சித்தூரின் தியாகக் காவியம்;

**இன்று சிந்திக்க இருக்கும் பாடல் வரிகள்**

***நரபலி கொடுத்த வீரவங்கமும் பாஞ்சாலமும் இன்று***
***நானிலமசைக்க வினவிடும் கேள்வி நெஞ்சை***
***உருக்கிடுதே!***

***பிளந்த இந்நாடு மீண்டும் பிணைந்தெழுவ தெப்போ?***
***வெற்றி முழங்கிடவே பகவா வானில்***
***பறப்பதெப்போ?***
***மதவெறியோரை, விஷநெஞ்சோரை,***
***கொடுமையாளரை***
***அடக்கிடுவாருண்டோ? வில்லினை எடு வீரா***
**(நரபலி)**

***சித்தூர் கோட்டையில் தீக்குளித்த நல்மாதரின்***
***ஆவிகளும்***
***ஹல்திகாட்டிலே போரில் மடிந்த வீரரின் ஆவிகளும்***
***பந்தா பைராகி, சம்பூ சத்ரபதி***
***நவகாளியும் நம்மைக் கூவியழைத்திடுதே***
***அமைதியிழந்தே, தாகம் கொண்டே ஆவிதுடிக்குது***
***எங்கே உன் வீரம்? வில்லினை எடு வீரா***
**(நரபலி)**

*(தொடரும்)*

**இசை வடிவம்**
**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE ஐ SCAN செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

## அசாத்தியப் பெண்களின் கூட்டமைப்பு

**யா.சு. கண்ணன்**

தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்திய விடுதலைப் போராட்டக் களத்தில், தங்களின் இன்னுயிரையும், குடும்பத்தையும், சமூக அந்தஸ்தையும் பொருட்படுத்தாது களம் கண்ட வீராங்கனைகளின் வரலாறு ஈடு இணையற்றது. இவர்களின் அசாத்தியமான துணிச்சலையும் தியாகத்தையும் போற்றும் விதமாகவே, தி ஹிந்து (The Hindu) நாளிதழ் இவர்களை "The League of Extraordinary Women" (அசாத்தியப் பெண்களின் கூட்டமைப்பு) என்று பெருமையுடன் வர்ணித்தது.

வெளிச்சம் படாத வேர்கள் தொடரில் ஏற்கனவே வீரமங்கை ராணி வேலுநாச்சியார் குறித்துப் பார்த்தோம். நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி அதிகளவில் வெளியே தெரியாத பெண் வீராங்கனைங்கள் பற்றி இப்பதிவில் காண்போம்.

**தென்னாட்டின் ஜான்சி ராணி: கடலூர் அஞ்சலை அம்மாள்**

மகாத்மா காந்தியால் "தென்னாட்டின் ஜான்சி ராணி" என்று அன்போடு அழைக்கப்பட்டவர் அஞ்சலை அம்மாள் (1890-1961). கடலூரில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த இவர், 1921-ல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் பொது வாழ்க்கைக்கு வந்தார். ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்ட நீலன் சிலை அகற்றும் போராட்டம், உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என அனைத்து முக்கியப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்றார். இவரது போராட்டக் குணம் ஆங்கிலேயர்களை மிரள வைத்தது. பலமுறை சிறை சென்ற அஞ்சலை அம்மாள், ஒருமுறை கர்ப்பிணியாக இருந்தபோதும் சிறையிலடைக்கப்பட்டார். பிரசவ காலம் நெருங்கியதால் ஆங்கிலேய அரசு இவரை தற்காலிகமாகப் பிணையில் விடுவித்தது. சிறைக்கு வெளியேயும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடியபடியே குழந்தையைப் பெற்றெடுத்த அவர், குழந்தை பிறந்த சில நாட்களிலேயே மீண்டும் சிறைக்குத் திரும்பினார். காந்தியடிகள் கடலூருக்கு வந்தபோது, அஞ்சலை அம்மாளைச் சந்திக்க ஆங்கிலேய அரசு தடை விதித்தது. ஆனால், அஞ்சலை அம்மாள் பர்தா அணிந்து குதிரை வண்டியில் சென்று காந்தியைச் சந்தித்துத் தன் துணிச்சலை நிரூபித்தார்.

**ருக்மிணி லட்சுமிபதி**

சென்னை மாகாணத்தின் மிக முக்கியமான அரசியல் ஆளுமைகளில் ஒருவர் ருக்மிணி லட்சுமிபதி (1892-1951). சமூகத்தில் செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்த இவர், மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். 1930-ல் வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் மிக ஆவேசமாகப் பங்கேற்றார். இப்போராட்டத்திற்காகக் கைது செய்யப்பட்ட இவர், தமிழ்நாட்டில் உப்புச் சத்தியாகிரக இயக்கத்தில் சிறை சென்ற முதல் பெண் கைதி என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றார். சிறைவாசத்திற்குப் பிறகும் இவரது அரசியல் பணி தொய்வடையவில்லை. 1934-ல் மெட்ராஸ் மாகாண சட்டமன்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். பின்னர், 1946-ல் சென்னை மாகாணத்தின் அமைச்சரவையில் முதல் பெண் அமைச்சராகப் பொறுப்பேற்று, பொதுசுகாதாரத் துறையைக் கவனித்துக் கொண்டார். பெண்களின் கல்வி மற்றும் அரசியல் உரிமைக்காகச் சட்டமன்றத்திற்குள்ளும் வெளியேயும் குரல் கொடுத்த மாபெரும் தலைவர் இவர்.

**எஸ். அம்புஜம்மாள்**

புகழ்பெற்ற வழக்கறிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஸ்ரீனிவாச ஐயங்காரின் மகளான எஸ்.அம்புஜம்மாள் (1899-1983), பிறப்பால் மிகப்பெரிய கோடீஸ்வரர். வைதீகக் கட்டுப்பாடுகள் நிறைந்த குடும்பத்தில் வளர்ந்த போதிலும், அன்னை கஸ்தூரிபாய் மற்றும் காந்தியடிகளின் எளிமையான வாழ்க்கை இவரைக் கவர்ந்தது. அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட இவர், சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் அந்நியத் துணிக்கடைகளுக்கு எதிராகத் தொடர் மறியல் போராட்டங்களை நடத்தினார். இதன் காரணமாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சுதந்திரப் போராட்டத்திற்காகத் தனது சொந்த நகைகள், சொத்துக்கள் அனைத்தையும் காந்தியடிகளிடம் அம்புஜம்மாள் தானமாக வழங்கினார். மேலும், ஏழை மற்றும் ஆதரவற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, காந்தியக் கொள்கைகளின் அடிப்படையில் சென்னை ஆழ்வார்பேட்டையில் 'ஸ்ரீனிவாச காந்தி நிலையம்' என்ற தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார். இவரது சமூக மற்றும் தேசப் பணியைப் பாராட்டி, இந்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவித்தது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி (1886-1968) இந்தியாவின் முதல் பெண் மருத்துவப் பட்டதாரி

மற்றும் மெட்ராஸ் சட்டமன்றத்தின் முதல் பெண் உறுப்பினராவார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டம் என்பது வெறும் அரசியல் விடுதலை மட்டுமல்ல. இந்திய சமூகத்தில் இருக்கும் அவலங்களை ஒழிப்பதும் தான் என்பதில் இவர் உறுதியாக இருந்தார்.

சட்டமன்றத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற இவர், பெண்களைக் சீரழித்துக் கொண்டிருந்த தேவதாசி முறையை ஒழிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வரப் போராடி, அதில் வெற்றியும் பெற்றார். பெண்களுக்கான திருமண வயதை உயர்த்துதல், இருதார மண தடைச் சட்டம் போன்ற பல சமூகச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றினார். காந்தி அவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, தன் சட்டமன்றப் பதவியைத் துறந்து நேரடியாக விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். ஆதரவற்ற பெண்களுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த இவர், 'அவ்வை இல்லம்' மற்றும் உலகப் புகழ்பெற்ற 'அடையாறு புற்றுநோய் மருத்துவமனை' ஆகியவற்றை நிறுவி மக்கள் சேவை செய்தார்.

**தில்லையாடி வள்ளியம்மை**

தென்னாப்பிரிக்காவில் பிறந்து வளர்ந்த தமிழ் வம்சாவளிச் சிறுமியான தில்லையாடி வள்ளியம்மை (1898-1914), மிக இளம் வயதிலேயே உலக வரலாற்றில் தடம் பதித்தவர். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட மூன்று பவுண்ட் வரி மற்றும் திருமணச் சட்டங்களை எதிர்த்து மகாத்மா காந்தி நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் வள்ளியம்மை பங்கேற்றார். கைது செய்யப்பட்டு, மிகக் கடுமையான சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். சிறையில் வழங்கப்பட்ட மோசமான உணவு மற்றும் கடுமையான உழைப்பால் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. சிறையிலிருந்து விடுதலையான சில நாட்களிலேயே, தனது 16-வது வயதில் வள்ளியம்மை மரணமடைந்தார். மரணப் படுக்கையில் இருந்தபோது காந்தியடிகள் இவரைச் சந்தித்து, "போராடியதற்காக வருத்தப்படுகிறாயா?" என்று கேட்டார். அதற்கு வள்ளியம்மை, "இல்லை, தேசம் சுதந்திரம் பெற மீண்டும் பிறந்து போராடத் தயார்" என்றார். காந்தியை ஒரு முழுமையான சத்தியாகிரகியாக மாற்றிய பெருமை வள்ளியம்மையின் தியாகத்திற்கே உண்டு.

**அடிமட்டப் போராட்டங்களின் வீராங்கனைகள்**

தமிழ்நாட்டின் கிராமங்கள் மற்றும் நகரங்களின் தெருக்களில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய பல அசாத்தியப் பெண்கள் வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்டுள்ளனர்:

- **எஸ். என். சுந்தராம்பாள் (திருப்பூர்):** காந்தியடிகள் திருப்பூர் வந்தபோது தன் கை வளையல்களைக் கழற்றித் தந்தார். 1941 தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தின் போது, தனது மூன்று மாதக் குழந்தையுடன் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையின் கொடூர சூழலையும் பொருட்படுத்தாது தேசப் பணியைத் தொடர்ந்தார்.
- **கே.பி. ஜானகி அம்மாள்:** சிறந்த மேடை நாடகக் கலைஞரான இவர், பாட்டுப் பாடியும் நாடகங்கள் மூலமும் கிராமத்து மக்களிடம் தேசபக்தியை விதைத்தார். ஆங்கிலேய அரசு இவருக்குப் பலமுறை தடை விதித்தது. பிற்காலத்தில் ஏழை விவசாயிகளின் உரிமைகளுக்காகப் போராடினார்.
- **சொர்ணத்தம்மாள் மற்றும் லட்சுமி பாய் அம்மாள் (மதுரை):** 1943-ல் மதுரையில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கப் பேரணியை முன்னின்று நடத்தினர். பிரிட்டிஷ் போலீசாரால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டு, நள்ளிரவில் யாருமற்ற அடர்ந்த காட்டுப் பகுதியில் வீசப்பட்டனர். எனினும், அவர்கள் அஞ்சாமல் மீண்டு வந்து மீண்டும் போராடினர்.

**இசை மற்றும் ஆயுதப் புரட்சி**

**கலை வழிப் போராட்டம்:** கர்நாடக இசையுலகின் மாபெரும் ஆளுமைகளான எம்.எஸ். சுப்புலட்சுமி மற்றும் டி.கே. பட்டம்மாள் ஆகியோர் தங்களது குரலையே ஆயுதமாக மாற்றினர். பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்ட மகாகவி பாரதியாரின் தேசபக்திப் பாடல்களை மேடைகளில் துணிச்சலாகப் பாடினர். கச்சேரிகள் மூலம் கிடைத்த பெரும் தொகையை காதி இயக்கத்திற்கும், சுதந்திரப் போராட்ட நிதிக்காகவும் முழுமையாக வழங்கினர்.

**நேதாஜியின் படைத்தளபதி: டாக்டர் லட்சுமி சாகல் (சுவாமிநாதன்):** சென்னையில் பிறந்து, மருத்துவப் படிப்பை முடித்த லட்சுமி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவத்தால் (INA) ஈர்க்கப்பட்டார். நேதாஜி அமைத்த உலகின் முதல் பெண்கள் போர்ப்படையான 'ஜான்சி ராணி ரெஜிமெண்ட்'டின் தலைவராகப் (Commandant) பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போரின் போது, பர்மா காடுகளில் துப்பாக்கி ஏந்தி பிரிட்டிஷ் ராணுவத்திற்கு எதிராக நேரடியாகப் போர் புரிந்தார்.

**முடிவுரை**

தமிழ்நாட்டின் இந்த அசாத்தியப் பெண்கள் வெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மட்டுமல்ல; அவர்கள் தங்களின் காலத்தை விட பல ஆண்டுகள் முன்னோக்கிச் சிந்தித்த சமூகப் புரட்சியாளர்கள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றிருந்த சமூகத்தில், அவர்கள் வீதிக்கு வந்து போராடினர், சிறை சென்றனர், துப்பாக்கி ஏந்தினர், சட்டங்களை இயற்றினர். இந்த "League of Extraordinary Women" விதைத்த வீரமும் தியாகமும்தான், இன்றைய சுதந்திர இந்தியாவின் மற்றும் தமிழ்நாட்டின் பெண் விடுதலைக்கு மிக வலுவான அடித்தளமாக அமைந்திருக்கிறது.

மஹான்களின் தரிசனம்

# ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்: மன்னார்குடி ப்ரம்ஹஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகள்.

- நிதீஸ்வரன்



பாரதப் புண்ய பூமியில், குறிப்பாகத் தென்னகத்தில் வேத நெறியும் அத்வைத வேதாந்தமும் தழைத்தோங்கிய பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில், ஸநாதன தர்மத்தின் ஆதாரமாக விளங்கும் வேத சாஸ்த்ரங்களின் ஒரு மாபெரும் பொக்கிஷமாக விளங்கியவர் மன்னார்குடி ப்ரம்ஹஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகள் ஆவார். ஈச்வரன் என்ற சொல் எப்படிப் பரமசிவனையே குறிப்பதாகக் கொள்ளப்படுகிறதோ, தீக்ஷிதர் என்ற சொல் எப்படி ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரைக் குறிக்குமோ, அதேபோல சாஸ்த்ரிகள் என்ற மாத்திரத்தில் மன்னார்குடி ராஜு சாஸ்த்ரிகள் ஒருவரே அகில உலகிற்கும் நினைவுக்கு வருவது லோகப் ப்ரஸித்தம். உன்னதமான வித்வத், உயர்வான குரு, கடுமையான ஆசார அனுஷ்டானங்கள், மற்றும் உலகியல் பற்றற்ற தன்மை ஆகியவற்றின் முழு வடிவமாகத் திகழ்ந்த இவரை, பொதுமக்கள் கலியுகத்தில் வாழ்ந்த மஹரிஷியாகவே கருதிப் போற்றினர். மேலும் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இவரை மன்னார்குடி பெரியவா என்றே அழைத்தனர்.

ஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகள், சைவ ஸமயத்திற்கும் அத்வைத தத்வத்திற்கும் புத்துயிர் ஊட்டி நமக்கு அனுக்ரஹித்த பரமேஸ்வர அவதாரமான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்களின் வம்சத்தில் ஒன்பதாவது நேர் தலைமுறையினராக அவதரித்தார். யுவ வருஷம் வைகாசி மாதம் 17-ஆம் தேதி (பொயு 1815 மே மாதம் 28-ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை, திருவோண நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் இவர் இப்பூவுலகில் ஆவிர்பவித்தார். இவர்களது முன்னோர்கள் வடஆற்காடு ஜில்லாவில் ஆரணிக்கு அருகிலுள்ள அடையப்பலம் என்ற கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், திருவாரூருக்கு அருகிலுள்ள கூத்தம்பாடி கிராமத்தை மான்யமாகப் பெற்று அங்கே வந்து குடியேறினர்.

இளமையிலேயே அசாதாரணமான மதி நுட்பத்துடன் விளங்கிய ராஜு சாஸ்த்ரிகள், தனது பாட்டனார் ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதரிடம் ஸாமவேதத்தை அதன் லக்ஷணங்கள் உள்பட எல்லா க்ரந்தங்களுடனும் மிகக் கடுமையான நியமங்களுடன் கற்று முடித்தார். பின்னர், தனது தகப்பனார் ஸ்ரீ மார்க்கஸஹாய வேங்கட ஸுப்ரஹ்மண்ய தீக்ஷிதரிடம் காவ்ய நாடகங்களைக் கற்றுத் தேர்ந்து, தனது பதினைந்தாவது வயதிலேயே ஸம்ஸ்க்ருத மொழியில் மிக ஸரளமாக ஸம்பாஷிக்கும் திறமையும், அழகான காவ்யங்களை இயற்றும் ஆற்றலையும் இவர் பெற்றிருந்தார்.

மேற்படிப்புக்காக மன்னார்குடி சென்ற இவர், அங்குள்ள தனது தாய்மாமன் இல்லத்தில் தங்கிக்கொண்டார். மன்னார்குடியில் ஸ்ரீ கோபாலாச்சாரியாரிடம் சில வருடங்கள் தர்க்கம் மற்றும் வ்யாகரண சாஸ்த்ரங்களை அப்யஸித்து, அதில் ஈடு இணையற்ற பாண்டித்யத்தைப் பெற்றார். இருபது வயது கூட நிரம்பாத இளம் வித்யார்த்தியாக இருக்கும்போதே, பெரிய பண்டிதர்களுடன் நடந்த வாதங்களில் ஈடுகொடுத்து ஒவ்வொரு முறையும் வெற்றிவாகைசூடினார். இவருக்கு வேதாந்த பாடங்கள் முதலில் ஸ்ரீ நாராயண ஸரஸ்வதியிடமும், பின்னர் அவரது குருவான ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாச யதிகளிடமும் தொடர்ந்தது. ஸம்ஸ்க்ருத இலக்கணத்தின் சிகரமான மஹாபாஷ்யத்தை மேலக்காவேரி சின்னண்ணா தீக்ஷிதரிடமும், மீமாம்ஸா சாஸ்த்ரத்தைக் கும்பகோணம் ரகுநாத சாஸ்த்ரிகளிடமும் பயின்றார். மீமாம்ஸா பாடங்கள் தொடங்கி ஒரு வருடமே ஆகியிருந்த நிலையில், சில குடும்ப நிர்பந்தங்களால் இவர் மன்னார்குடி திரும்ப நேரிட்டது. அப்போது விடைபெற வந்த சீடனின் புத்தித் திறனை உணர்ந்த குரு ரகுநாத சாஸ்த்ரிகள், உனது புத்தித் தீக்ஷண்யத்தாலும், உனது முன்னோர்களான தீக்ஷிதேந்திரர்களின் அருளாலும் நீயே தானாகவே எந்தவொரு கடினமான க்ரந்தத்தையும் படித்துப் புரிந்துகொள்ளலாம். உன்னுடைய விஷயத்தில் குரு, பாடம் கேட்டல் என்பதெல்லாம் ஒரு ஸம்ப்ரதாயமே

தவிர, அவசியமில்லாதது என்று கூறி ஆசீர்வதித்தார்.

இவரது இளம் வயதிலேயே இவரை "சாஸ்த்ரி" என்ற கௌரவப் பெயரால் இவருடைய குரு கோபாலாச்சாரியார்அழைத்தார். இவருடன்பாடம்கற்ற சிஷ்யர்கள் பொறாமைப்பட்டபோது, குரு நாராயண ஸரஸ்வதி அவர்கள், சாஸ்த்ரிகள் ஒரு அவதார விசேஷம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டார். அதேபோல், சின்னண்ணா தீக்ஷிதர் இவரைப் பரிக்ஷிப்பதற்காக மஹாபாஷ்யத்தின் மிகக் கடினமான, இன்னும் பாடம் நடத்தப்படாத ஒரு பகுதியை யதேச்சையாக எடுத்துக் கொடுத்து விளக்கச் சொன்னபோது, ராஜு சாஸ்த்ரிகள் தங்குத் தடையின்றி அதற்கு வ்யாக்கியானம் செய்தார். வியந்துபோன குரு, நீ என்னிடம் இவ்வளவு படித்ததே போதும், இனி வேறு யாரிடமும் நீ புதிதாகக் கற்க வேண்டியது ஏதுமில்லை என்று கூறி வழியனுப்பினார்.

தனது இருபத்தி நான்காவது வயதிலேயே ஸகல சாஸ்த்ரங்களிலும் பாரங்கதராக விளங்கிய ராஜு சாஸ்த்ரிகள், மன்னார்குடி நகரவாசிகளால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இல்லத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தை ஏற்று வசிக்கத் தொடங்கினார். அது முதல் தனது வாழ்நாளைச் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதிலேயே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

இவரது தினசர்யையானது ஒரு தூய்மையான வைதீக வாழ்விற்கு மிகச்சிறந்த இலக்கணமாகத் திகழ்ந்தது. தினந்தோறும் அதிகாலை மூன்று மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்து, சிஷ்யர்கள் பின்தொடரக் குளத்திற்குச் சென்று நீராடுவார். விடியற்காலையில் கையில் தீர்த்தப் பாத்திரத்துடன் வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டே வீதியில் வரும்போது, திண்ணைகளில் படுத்துறங்கும் தெருவாசிகள் பெரியவாள் மீதுள்ள மரியாதையால் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து மறைந்துக் கொள்வர். இல்லம் திரும்பியதும் ஔபாஸனம் முதலான அனுஷ்டானங்கள் ஸ்தோத்திரங்கள், ஜபங்கள் செய்ய இரண்டு மணி நேரம் ஆகும். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி த்யானத்திலும், ஸ்ரீ ஸந்தான கோபால மந்திர ஜபத்திலும் விசேஷ ஆஸக்தி கொண்டிருந்தார். காலை எட்டு மணி முதல் பதினோரு மணி வரை வேதாந்த வகுப்புகள் நடைபெறும். அதன் பின் மாத்யான்ஹிகம், சிவபூஜை, வைச்வதேவம் முடித்து, இல்லத்தில் தங்கியிருக்கும் சிஷ்யர்களுடனும் விருந்தினர்களுடனும் போஜனம் செய்வார். பிற்பகலில் தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா, அலங்காரம் ஆகிய பாடங்களைக் வகுப்புவாரியாக நடத்துவார்.

மாலை வேளையில் தர்ம சாஸ்த்ர ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள மக்கள் வாசலில் காத்திருப்பர். அவர்களுக்கு எல்லாவிதமான விளக்கங்களையும் அளித்துவிட்டு, எளிய மக்களின் சந்தேகங்களையும் அவர் எத்துணை பரிவுடன் அணுகினார் என்பதற்கு ஒரு சுவாரஸ்யமான நிகழ்வும் உண்டு.

ஒரு சமயம், பழைய கால வழக்கப்படி வருடம் தோறும் நடைபெறும் பொதுவான பண்டிகைக்காக ஏற்றப்பட வேண்டிய கொடியின் நிறம் கருப்பாக இருக்க வேண்டுமா அல்லது சிகப்பாக இருக்கலாமா என்பதைப் பற்றி ஒரு கிராம மக்களிடையே சர்ச்சை எழுந்தது. இதற்கான சரியான விளக்கத்தைப் பெரியவாளிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்ளலாம் என்று அவர்கள் வந்தனர். அவ்வமயம் பெரியவாள் பூஜையில் அமர்ந்திருந்தார்.

வீட்டு வாசலில் இருந்த அவரது சிஷ்யர்கள், வந்திருந்த கிராம மக்களிடம் சிறிது நேரம் வேடிக்கையாக அளவளாவிவிட்டு, "இந்த அற்ப விஷயத்திற்கெல்லாமா பெரியவாளைத் தொந்தரவு செய்வது?" என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

பூஜை முடித்து வெளிவந்த பெரியவாள், வாசலில் பேச்சரவம் கேட்டதே என்ன என்று விசாரித்தார். விவரம் தெரிந்துகொண்ட உடனே, நற்காரியங்கள் செய்வதில் ச்ரத்தையாக ஈடுபடும் அந்த மக்களிடம் சிஷ்யர்கள் காட்டிய அலக்ஷியத்தைக் கடுமையாகக் கண்டித்தார்.

சிவரஹஸ்யம் என்னும் க்ரந்தத்தில் இந்த மாதிரி உத்ஸவாதிகளில் சிகப்புக்கொடி ஏற்றவேண்டுமென அதிகார பூர்வமான குறிப்புகள் உள்ளனவே. ஏமாற்றத்துடன் திரும்பின அந்த ச்ரத்தை மிக்க ஜனங்களைப் போய் உடனே தேடிக் கண்டுபிடித்து சரியான பதிலைச் சொல்லிவிட்டு வாருங்கள் என்று சிஷ்யர்களுக்குக் கட்டளையிட்டார்.

தர்ம சாஸ்த்ரத்தில் எந்தவொரு சிறிய சந்தேகமாக இருந்தாலும், அதைத் தேடி வரும் பாமர மக்களின் ச்ரத்தையை மதித்து, அவர்களுக்கு சாஸ்த்ரப் ப்ரமாணத்தோடு பதிலளிக்கும் அவரது இந்தப் பண்பு, அவர் மீது மக்கள் கொண்டிருந்த பக்தியைப் பன்மடங்கு உயர்த்தியது. அதன் பின்னர் ஸூர்ய அஸ்தமன ஸமயத்தில் சிஷ்யர்களுடன் சென்று ஸந்த்யாவந்தனம் முடித்து, ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேச்வரர் ஆலய தரிசனம் செய்வார். இரவு வைச்வதேவத்தை செய்து மிக எளிமையான உணவுக்குப் பின், படுக்கைக்கு அருகில் எப்போதும் பனை ஓலைகளும் எழுத்தாணியும் தயாராக வைக்கப்பட்டிருக்கும். இரவில் சாஸ்த்ர ஸந்தேகங்களுக்கு ஏதேனும் விளக்கம் உதயமானால், உடனடியாகச் சந்த்ர வெளிச்சத்திலேயே அதை ஓலையில் எழுதிவிடுவார். அறுபது வருடங்களுக்கும் மேலாக இந்த நியமத்தை இம்மியளவும் பிசகாமல் அவர் கடைப்பிடித்து வந்தார். பிற்காலத்தில் விதிப்படி த்ரேதாக்னியை ஆதானம் செய்து கொண்டு அக்னிஹோத்ரம் இஷ்டி ஸோமயாகம் முதலான அனிஷ்டானங்களையும் தங்களுடைய பூர்வஜர்களான அப்பய்ய தீக்ஷிதர் வழியில் தவறாமல் அனுஷ்டித்து வந்தார்.

இவரது தந்தை அப்பா தீக்ஷிதர் ஒரு வரகவி. அவர் தனது மூத்த குழந்தையான இவரைப் பற்றி இரண்டு ஸ்லோகங்கள் இயற்றியுள்ளார். அதன் அர்த்தம் எனது மூத்த பிள்ளை ஸ்வாபாவிகமாகவே அமைதியான குணம் படைத்தவன். எப்பொழுதும் த்யானம் செய்வதில் விருப்பமுள்ளவன்.

வேதாந்தோபதேசங்களின் உட்கருத்துக்களை நன்கு அறிந்து வைத்திருப்பவன். ஸந்நியாஸாச்ரமத்திலும் மற்ற ஆச்ரமங்களிலும் இருக்கும் பல மாணவர்களுக்கு அவன் தினந்தோறும் நான்கு சாஸ்த்ரங்களையும் இடைவெளியோ ஓய்வோ இல்லாமல் தொடர்ந்து பாடம் சொல்லுகிறான். அவனது சித்தமோ ஸதா சிவபூஜையிலும் சிவத்யானத்திலும் பேராவலுடன் கூடிய ஈடுபாடு கொண்டிருக்கிறது. விபூதி, ருத்ராக்ஷ மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சரீரத்துடன் பிரகாசிக்கும் அவன், தனது பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெருமிதமான ஆனந்தத்தைக் கொடுப்பவனாக விளங்குகிறான். உபநிஷத்துக்களை ஆழ்ந்து படித்து சிந்தனை செய்வதால் தானாக ஏற்படும் ஆத்மானந்தத்தில் பூரிப்படைந்திருப்பவனும், அஹங்காரத்தின் அடையாளம் கூட கொஞ்சமும் இல்லாமலிருப்பவனுமான ஒரு புத்திரனையடையும் பாக்கியம் பெற்ற நான் எப்பொழுதும் அளவு கடந்த ஆனந்த ஸாகரத்தில் மிதப்பவனாக இருக்கிறேன். இது போன்ற மகிழ்ச்சியைப் ப்ரபு புருஷோத்தமன் கூட அனுபவித்திருக்க முடியாது என்று நான் எண்ணுகிறேன் என்று தனது மகிழ்ச்சியை ஸ்லோகரூபமாக பெருமையுடன் எழுதியுள்ளார்.

கூத்தம்பாடியில் வாழ்ந்த தந்தை, நாற்பது ஏக்கர் நிலம் இருந்தபோதிலும் கடுமையான நிலவரிச் சுமையாலும், இயற்கைச்சீற்றங்களாலும் பொருளாதார இக்கட்டில் வாடினார். தந்தையின் கஷ்டத்தைப் போக்க ராஜு சாஸ்த்ரிகள் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தின் நவராத்திரி வித்வத் ஸதஸ்ஸிற்குச் சென்று ஸதஸ்ஸில் பாகம் வகித்து குடும்ப பாரத்தைப் போக்கினார். ஒருமுறை பஞ்சம் தலைவிரித்தாடியபோது, நிலவரி கட்டாவிட்டால் நிலங்கள் ஜப்தி செய்யப்படும் என்ற நிலையில், சாஸ்த்ரிகளிடம் பெருமதிப்பு கொண்டிருந்த மன்னார்குடி ப்ரமுகர் குன்னியூர் நாணு அய்யர் என்பவர் தனது சொந்தக் கடுக்கன் ஜோடியை அடமானம் வைத்து இருநூறு ரூபாய் கொடுத்து உதவினார். இந்த தாராள குணத்தை சாஸ்த்ரிகள் வாழ்நாள் முழுவதும் நன்றியோடு நினைவுகூர்ந்தார். மேலும் அங்கிருந்த பல தனிகர்கள் சாஸ்த்ரிகள் மேல் கொண்ட அன்பின் பேரில் அங்கு பாடம் கேட்க வரும் மாணவர்களுக்கு தங்க இடமும் ஆஹாரத்திற்கான வசதிகளும் செய்து கொடுத்து ஆதரித்தார்கள்.

சாஸ்த்ரிகளின் தர்மபத்தினியான ஸுந்தரி அம்மாள், இல்லத்தில் நடக்கும் எல்லா அனுஷ்டானங்களையும் ச்ரத்தையுடன் கவனித்துக் கொள்ளும் உத்தமியாக விளங்கினார்கள். இல்லத்திற்கு வரும் வைதீகர்களை இன்றைய வைச்வதேவத்தை இங்கேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் உபசரிப்பார்கள். சாஸ்த்ரிகளின் தாயாரும் மிக வயோதிகக் காலம் வரை இவர்களுடன் வாழ்ந்தார். எல்லோரையும் அன்புடன் ஆதரித்து வந்தார்கள்.

தென்னிந்தியாவில் வாழ்ந்த புகழ்பெற்ற எந்தவொரு வித்வானும் ராஜு சாஸ்த்ரிகளுடன் வாதத்தில் ஈடுபடாமல் இருந்ததில்லை. புதுக்கோட்டை அரச ஸபை, இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் மேலும் பல ஸதஸ்களிலும் சாஸ்த்ரிகள் பாகம் க்ரஹித்து பாண்டித்யத்தை வெளிப்படுத்துவார்கள். இவரது மேதாவிலாஸத்தைக் கண்ட ஸ்ரீ க்ருஷ்ணானந்த யதி, அவரது ஸமயோஜித புத்தித் திறன் நிகரற்றது, பண்டித உலகில் அவருக்கு நிகர் யாருமில்லை என்று போற்றினார். புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில், வ்யாகரண சாஸ்த்ரத்தில் புகழ்பெற்ற வையாகரண ரங்காச்சாரி என்ற வித்வான் சாஸ்த்ரிகளிடம் வாதத்தில் தோற்று, குணத்திலும் சாஸ்த்ரத்திலும் யாரும் வெல்ல முடியாத சிங்கம் அவர், அந்தச் சிங்கத்தின் முன் நாம் சாதாரண மான்கள். இவரை வெல்ல நினைப்பது மஹாஸமுத்ரத்தைக் கைகளால் நீந்திக் கடக்க நினைப்பதற்கு ஸமம் என்று உருகிப் பாராட்டினார்.

சாஸ்த்ரிகளிடம் கல்வி கற்க பாரதத்தின் எல்லா தேசங்களிலிருந்தும் எல்லா ஆஸ்ரமத்தை சேர்ந்த சிஷ்யர்களும் வந்தனர். ஸன்யாஸியான சிஷ்யர்கள் கோபிநாதன் குளக்கரையிலிருந்த மடத்தில் தங்கினர். அவர்களுக்கு உள்ளூர்வாசிகள் பிக்ஷை அளித்து ஆதரித்தனர். பாடம் நடக்கும்போது வகுப்பில் மிகக் கடுமையான கட்டுப்பாடு இருக்கும்; கொட்டாவி, சிரிப்பொலி போன்ற எந்தவொரு சப்தமும் எழாது. சாஸ்த்ரிகளுக்குக் கையில் புத்தகப் பிரதி தேவைப்பட்டதில்லை, சாஸ்த்ரங்களின் எல்லா வரிகளும் நினைவில் இருக்கும். சிஷ்யர்கள் ஓலைச் சுவடிகளில் வாசிக்கும்போது ஏற்படும் எழுத்துப் பிழைகளை உடனுக்குடன் திருத்துவார்.

இரவு உணவிற்குப் பின் சிஷ்யர்கள் திண்ணையில் அமர்ந்து பாடம் படிக்கும்போது, சாஸ்த்ரிகள் ரேழியில் இருட்டில் அமர்ந்து அவர்கள் படிப்பதைக் கவனிப்பார். மாணவர்கள் எந்த இடத்தில் தடுமாறுகிறார்கள் என்பதை உணர்ந்து, மறுநாள் வகுப்பில் எதேச்சையாகக் கேட்பதுபோல அக்கேள்வியை எழுப்பி, அவர்களின் ஸந்தேகத்தைத் தீர்த்து வைப்பார். சிஷ்யர்களுக்கு அவர் அருளிய முக்கிய உபதேசம், ஆசாபாசங்களில் சிக்கித் தவிக்கும் மனதை, சொந்த லாபமின்றிச் செய்யும் தர்ம கார்யங்களால் அதாவது நிஷ்காம்ய கர்மாக்களால் தூய்மைப்படுத்தி, த்யானத்தின் மூலம் ஸமநிலை பெறச் செய்து, அத்வைத ப்ரம்ஹானந்தத்தை அடைய வேண்டும் என்பதாகும்.

சாஸ்த்ரிகளின் சிஷ்யர்களில் மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்த்ரிகள், கணபதி சாஸ்த்ரிகள், யக்ஞஸ்வாமி சாஸ்த்ரிகள் (பேரன்) ஆகியோர் முதன்மையானவர்கள். கணபதி சாஸ்த்ரிகள் தனது குருவின் மீதுள்ள பக்தியால் ஸ்ரீகுருராஜ ஸப்ததி என்ற எழுபது சுலோகங்கள் கொண்ட உன்னதக் காவ்யத்தை இயற்றியுள்ளார்.

மற்றொரு சிஷ்யரான நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரிகள், அக்காலத்தில் வேகமாகப் பரவி வந்த கிறிஸ்துவ மதப் பிரசாரத்தைத் தனது ஸிம்ஹக் குரலாலும் கூர்மையான எழுத்தாலும் தடுத்து நிறுத்தினார். அவர் ப்ரம்ஹ வித்யா என்ற ஸம்ஸ்க்ருத தமிழ் மாதாந்திரப் பத்திரிகையை நடத்தி அத்வைதக் க்ரந்தங்களை வெளியிட்டார். கிறிஸ்துவப்

பாதிரியார்கள் இவரைக் கண்டு அஞ்சினர். பழமாநேரி ஸூந்தர சாஸ்த்ரிகள் என்ற சிஷ்யர் ராமநாதபுரம் மற்றும் மைசூர் ஸம்ஸ்தானங்களில் ஆஸ்தான பண்டிதராகத் திகழ்ந்தார். இவரைப் பற்றிச் சாஸ்த்ரிகள் எழுதும்போது, சாஸ்த்ர ஞானத்தில் கரைகண்ட உத்தம வித்வான் என்று சிலாகித்துள்ளார். மேலும், பருத்தியூர் க்ருஷ்ண சாஸ்த்ரிகள், மருத்துவக்குடி ஸ்வாமி சாஸ்த்ரிகள் போன்ற மாமேதைகளும் இவரிடம் பாடம் கேட்டதைப் பெருமையாகக் கருதினர். இதைப் போல் பல பெரிய சாஸ்த்ர வித்வான்கள் இவர்களிடம் படித்தவர்களே. மேலும் இன்றளவும் இவருடைய சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையானது சாஸ்த்ர ஸேவை செய்து வருகிறது.

சாஸ்த்ரிகள் ஸனாதன தர்மத்தை நிலைநாட்டப் நிறைய அரிய க்ரந்தங்களை இயற்றினார். அவற்றுள் மிக முக்கியமானது ந்யாயேந்து சேகரம் ஆகும். கும்பகோணம் அத்வைத ஸபையின் மிகக் கடினமான, கௌரவமிக்க பரீக்ஷையாக இந்த க்ரந்தமே விளங்குகிறது. மேலும் ஸத்வித்யாவிலாஸம், ஸாம ருத்ர ஸம்ஹிதாபாஷ்யம் போன்ற நூல்கள் அப்பய்ய தீக்ஷிதரின் நூல்களுக்கு இவர் எழுதிய வ்யாக்யானங்களும் இவரது அஸாத்ய வித்வத்திற்குச் சான்றுகளாகும். சில ஸமயங்களில் நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கூட ஸனாதன தர்மம் சம்பந்தமான ஸந்தேஹகங்கள் நேர்ந்தால் சாஸ்த்ரிகளிடம் வந்து கேட்டு தெளிவார்கள்.

பொயு 1887-ஆம் ஆண்டு விக்டோரியா மஹாராணியின் வெள்ளிவிழாவின்போது, பிரிட்டிஷ் அரசாங்கம் தென்னாட்டின் மிகச்சிறந்த அறிஞராக இவரைத் தேர்வு செய்து மஹாமஹோபாத்யாய பட்டத்தை அளித்தது. ஆனால், அஹங்காரத்தின் வாஸனையறியாத சாஸ்த்ரிகள், மல்லினாத ஸூரி போன்ற மேதைகளுக்குரிய இப்பட்டத்திற்கு நான் தகுதியற்றவன் என்று தர்பாருக்குச் செல்ல மறுத்துவிட்டார். பல மாதங்கள் காத்திருந்து அரசாங்கமே தஞ்சாவூர் கலெக்டர் மூலமாக, இறுதியாகப் பட்டத்துக்கான மெடலை அவரது இல்லத்திற்கே அனுப்பி வைத்தது.

அளவற்ற புகழும் கௌரவமும் வந்தபோதும், அவர் ஒருபோதும் பணப் பெட்டியைத் தொட்டதோ, கணக்கு வழக்குகளைப் பார்த்ததோ இல்லை. சலனமற்ற மலைச்சிகரம் போல விளங்கிய இவரை எந்தவொரு இன்ப துன்பமும் அண்டவில்லை.


காஞ்சி காமகோடி மூலாம்னாய ஸர்வஜ்ஞ பீடத்தின் 66வது ஜகத்குரு சங்கராசார்யராக விளங்கிய ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் பொயு 1894-ஆம் ஆண்டு கும்பகோணத்தில் அத்வைத ஸபா தொடங்கப்பட்டபோது, சாஸ்த்ரிகள் ஸம்ஸ்க்ருதத்தில் மூன்று மணி நேரம் காயத்ரீ மஹிமை பற்றி உபன்யாஸம் செய்து எல்லோரையும் அனுக்ரஹித்தார். தனது 82-வது வயதில் (1897-இல்) தனது தர்மபத்தினி சுந்தரி அம்மாள் மறைந்தபோது, சாஸ்த்ரிகள் என்னுடைய அக்னிஹோத்திரத்தையும் எடுத்துக் கொண்டு அவள் போகிறாள் என்று நெக்குருகி அழுதார். ஏனெனில் பத்னி இல்லாத க்ருஹஸ்தனுக்கு அக்னிஹோத்திர அதிகாரம் இல்லை என்ற சாஸ்த்ர விதியே அவரது துக்கத்தை அதிகமாக்கியது. இரண்டு மாதங்கள் கழித்து அவளுக்குப் பிறந்த கொள்ளுப் பேரனான ஸ்ரீ ந. மஹாலிங்க சாஸ்த்ரியைத் தனது கைகளில் ஏந்தி, எனது பேரனை குலவழக்கப்படி சாஸ்த்ர படிப்பில் என்னால் நிர்பந்தித்து ஈடுபடுத்த முடிந்தது. ஆனால் உன்னை ஆங்கில படிப்பில் தான் போடப்போகிறார்கள். எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், எந்தவிதமான கல்வியில் நீ போடப்பட்டாலும் அதில் பாரங்கதனாக விளங்குவாய் என்று மனதார ஆசீர்வதித்தார்.

தனது 86-வது வயது வரை சிஷ்யர்களுக்குப் பாடம் கற்பிப்பதையும் நித்ய கர்மாக்களையும் அவர் நிறுத்தவில்லை. 88-வது வயதில் கடுமையான இருமல் ஏற்பட்டுத் தனது அந்திம காலம் நெருங்குவதை உணர்ந்தார். தனது ஸ்வீகாரக் குமாரனான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரையும், பேரன் யக்ஞஸ்வாமியையும் அழைத்து, எப்போதும் ஸதாசாரத்தைக் கொஞ்சமும் குறைபாடில்லாமல் அனுஷ்டிக்க வேண்டும். உண்மையான ஆனந்தம் செல்வத்திலோ பதவியிலோ இல்லை; பரிசுத்தமான வாழ்க்கை, பிறரிடம் அன்பு காட்டுவது, ஈஸ்வரனிடம் பக்தி வைப்பதில்தான் பேரானந்தம் உள்ளது என்று புன்னகையுடன் உபதேசித்தார்.

தனது இறுதி நாட்களில் சிஷ்யரான பருத்தியூர் க்ருஷ்ண சாஸ்த்ரிகள் படுக்கை அருகில் அமர்ந்து ஒரு மாத காலம் பாராயணம் செய்த ராமாயண உபன்யாஸத்தை மூடிய கண்களுடன் அனுபவித்து ஸ்ரவணம் செய்தார். அவருடைய கடைசி காலத்தில் அவரை தரிசிக்க கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்தார்கள். இறுதியாக, சுபகிருத் வருடம் மாசி மாதம் 21-ஆம் நாள் (பொயு 1903 மார்ச் 4) புதன்கிழமை சுக்லபக்ஷ ஷஷ்டி நள்ளிரவில், சுற்றிலும் சிஷ்யர்கள் வேத மந்த்ரங்களையும் உபநிஷத்துக்களையும் பாராயணம் செய்ய மஹரிஷிகளாகவே இருந்த நமது சாஸ்த்ரிகள் ப்ரம்ஹ நிலையை அடைந்தார். அவரது மறைவு கேட்டு மன்னார்குடியிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள் ஆகியவை மூடப்பட்டு ஒட்டுமொத்த நகரமே சோகத்தில் ஆழ்ந்தது. வரலாற்றில் கண்டிராத மாபெரும் இறுதி ஊர்வலத்துடன் அந்த மஹானுக்கு அந்திம க்ரியைகள் ச்ரத்தையுடன் செய்யப்பட்டது.

இப்படி நம் ஸமீப காலத்தில் தனது தர்மமான ஜீவனத்தின் மூலமாக க்ருத யுகத்தை நம் கண் முன்னே நிறுத்தியவரும் வேதத்தின் ரக்ஷகராகவும், அத்வைத ஸித்தாந்தத்தின் தூணாகவும் விளங்கிய மஹாமஹோபாத்யாய ப்ரம்ஹஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகளின் அவதாரத் திருநாளான வைகாசி மாத திருவோண (ச்ரவண) நக்ஷத்திரம், நடப்பு வருடத்தின் ஜூன் 5-ஆம் தேதியன்று வருகிறது. மன்னார்குடி க்ஷேத்திரத்தில் அவர் வாழ்ந்து தவம் செய்த புண்ய இல்லத்தில் இந்த ஜயந்தி மகோத்ஸவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரும் அந்த மஹானின் திவ்ய சரித்திரத்தைச்


SRI SRINGERI SHARADA PEETHAM CHARITABLE TRUST
with
ANANYA FOUNDATION
"Empowering Skills for a Better Tomorrow."
Free Computer Education for Women
DIGITAL BASICS & CONFIDENCE
✓ Computer & Internet Basics
✓ Smartphone & ChatGPT Usage
✓ Communication & Confidence Skills
CREATIVE & DIGITAL PROGRAMS
✓ Canva, Photoshop & Video Editing
✓ Social Media Content Creation
✓ AI Tools & Freelancing
DATA & ANALYTICS
✓ Advanced Excel & Reports
✓ Dashboards & Power BI
✓ AI-Assisted Data Analysis
ADVANCED CAREER PROGRAMS
✓ Web Development Basics
✓ UI/UX & Digital Skills
✓ Projects & Portfolio Creation
Upgrade Your Skills. Upgrade Your Life.
SRI SRINGERI SHARADA PEETHAM CHARITABLE TRUST
12, Thanigachalam Salai, Near M-Central Hotel, T. Nagar, Chennai – 600017
78718 92233, 75981 01633



# கொன்றை வேந்தன் கதைகள்

## சேகர் எடுத்த பாடப்பிரிவு

கலாவதி

பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியாகி இருந்தது. நகரின் பிரபலமான அந்தப் பள்ளியில் வேண்டிய பாடப்பிரிவுகளில் சேர, மாணவர்கள் வந்திருந்தனர். அதே பள்ளியில் பொதுத்தேர்வு எழுதிய சந்துரு, சேகர், சரவணன் என நண்பர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

"எனக்கு மருத்துவத் துறையில வேலை செய்ய ஆசை. அறிவியல் பிரிவு வேணும்" என்று பள்ளி அலுவலகத்தில் கேட்டான் சந்துரு. "உன் மதிப்பெண் 400 தான் தம்பி. குறைந்தது 450 மதிப்பெண்ணாவது இருந்தாதான் அறிவியல் பிரிவு கிடைக்கும்" என்று கண்டிப்பாக சொன்னார், அலுவலகத்தில் வேலை செய்யும் சண்முகம் அண்ணா.

"அண்ணா, நான் இன்ஜினியரிங் படிக்கலாம்னு ஆசைப்படறேன். கம்ப்யூட்டர் சயின்ஸ் கிடைக்குமா?" என்று சரவணன் கேட்டான். "அதுக்கு இன்னும் மதிப்பெண் வேணுமே பா. எதுக்கும் 437 மதிப்பெண்ணுக்கு கிடைச்சிரும்னு நினைக்கறேன். பார்க்கலாம்" என்று சண்முகம் சமாளித்தார்.

"எனக்கும் 435 மதிப்பெண் இருக்கு. என்னோட மதிப்பெண்ணுக்கேத்த பிரிவு கிடைச்சா போறும்" என்று தனது விருப்பத்தைச் சொன்னான் சேகர். சேகர் அப்படி சொன்னது மற்ற இரண்டு பேருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அவனது அப்பா நகரத்தில் பெரிய டாக்டர். அண்ணாவும் எம்பிபிஎஸ் படிக்கறான். அவனும், மருத்துவம் தான் படிப்பான் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர்.

"என்னடா அதிசயமா இருக்கு? உங்க அப்பா ஒரு வார்த்தை சொன்னா, நகரத்துல எத்தனையோ பிரபலங்கள் உதவி பண்ணுவாங்க. அப்புறம் என்ன?" என்று சந்துருவும், சரவணனும் கோரசாக கேட்டார்கள்.

"இந்த பள்ளியில பரிந்துரைக்கெல்லாம் வேலை கிடையாதுப்பா. சரி, நீங்க கேட்ட குரூப்பு கிடைக்குமான்னு ரெண்டு நாளுல தெரிய வரும். இப்போ போயிட்டு வாங்க" என்றார் சண்முகம்.

அவர் சொன்னபடி, அடுத்த இரண்டு நாட்களில் யார் யாருக்கு என்னென்ன பாடப்பிரிவு என்ற அறிவிப்பு, தகவல் பலகையில் ஒட்டப்பட்டிருந்தது. மூன்று பேரில், சரவணனுக்கு மட்டும் அவன் கேட்ட பாடப்பிரிவு கிடைத்தது. மற்ற இரண்டு பேருக்கும் கிடைக்கவில்லை. சந்துரு வேறொரு பிரபலமான பள்ளிக்கு மாறி, அறிவியல் பாடப்பிரிவு எடுத்தான். சேகர் அதே பள்ளியில் அக்கவுண்ட்ஸ் பிரிவில் சேர்ந்தான். முதலில் அவனது அப்பா மகனை அறிவியல் பிரிவு எடுக்கச் சொல்லி எவ்வளவோ போராடி பார்த்தார். ஆனால், சேகர் பிடிவாதமாக தனக்கு கிடைத்ததே போதும் என்று சொல்லிவிட்டான்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் வந்த பிளஸ் 2 தேர்வில் சேகர் நல்ல மதிப்பெண் வாங்கி தேர்ச்சி அடைந்திருந்தான். மற்ற இருவரையும் விட அவன் அதிக மதிப்பெண் வாங்கியதை, நண்பர்களும் பாராட்டினார்கள்.

"பரவாயில்ல டா சாதிச்சிட்ட. ஆனா, உங்க அப்பா, அண்ணன் மாதிரி நீயும் டாக்டராக தானே ஆசைப்பட்டே. ஏன், அக்கவுண்டன்சி எடுத்தே" என்று சரவணன் கேட்டான்.

"எங்க அப்பா என்னை வற்புறுத்தத்தான் செஞ்சார். ஆனா, எங்க அம்மா எது வந்தாலும் ஏத்துக்கிட்டு சந்தோஷமா இருக்கணும்னு அடிக்கடி சொல்லுவார். இப்ப என்ன, நாளைக்கு அதே ஊருல பெரிய ஆடிட்டரா வருவேன். பார்த்துட்டே இரு" என்று சேகர் நம்பிக்கையுடன் சொன்னான்.




**கிட்டாதாயின் வெட்டென மற!**

# சினிமா சாரல்

- சேஷு

## Tom Clancy's Jack Ryan: Ghost War

### அமேஸான் ப்ரைம்

Jack Ryan சீரிஸ் பார்த்தவர்கள், இந்த 107 நிமிட படம் எப்படி இருக்கிறது என்பதை நீங்களே சொல்லுங்கள். இதற்கு முன்புள்ள தொடர்கள் உலகலாவிய பயங்கரவாதத்தை முறியடிக்க CIA எடுக்கும் நடவடிக்கைகள், உளவு வேலைகள் என பரபரப்பாக நகரும் கதை களமாக இருந்தது. ஆனால் கோஸ்ட் வார் இறுதிப் பகுதி என நம்பப்படும் இந்த தொடரில் உங்க ஸ்பை வேலையே வேண்டாம் என சாதாரண சிவிலியனாக இருக்கப் போகிறேன் என கிளம்பிய Jack Ryan (John Krasinski )ஐ CIA அதிகாரி கிரியர் ( Wendell Pierce ) மீண்டும் ஒரு ஆப்ரேஷனுக்காகத் தூக்கி கொண்டு வரும் முதல் காட்சியே விறு விறுப்பு.




இந்த வேலையே வேண்டாம் என்று தானே வால் ஸ்ட்ரீட்டில் இருந்தேன், மீண்டும் என்னை ஏன் பாடாய் படுத்துறீங்க என ரியான் ஜேம்ஸ் கிரியரிடம் வாக்குவாதம் செய்ய. ஒரு சின்ன வேலை, துபாய்க்கு கிளம்பி போ, அங்கு நான் ஒருவரை (MI6) ஏஜெண்டை சந்திப்பதாக இருந்தது, நீ அவரை சந்தித்து தகவலை வாங்கி வா! அது போதும் என்கிறார். சிம்பிளான வேலை தான் என ரியானும், புது கேரக்டராக அறிமுகப்படுத்தப்பட்ட MI 6 பொறுப்பாளர் Emma Marlow என்ற பெண் அதிகாரியுடன் துபாய் செல்கிறார்.துபாயின் இரவுக்காட்சிகள், அழகை ஏதோ சுற்றுலா விளம்பரப்படம் போல காட்டுகிறார்கள். ரியானும், எம்மா மார்லோவும் MI 6 சந்திக்கச் சென்ற போது அங்கு ஏஜெண்ட் கொலையும் ஸ்டார்லிங் குறித்த செய்தியும் அதிர்ச்சியளிக்கிறது. அமெரிக்காவின் 9/11 தாக்குதலுக்குப் பிறகு, எவ்விதச் சட்ட விதிகளுக்கும் உட்படாமல், எதிரிகளை மனதளவில் சிதைக்கவும், படுகொலைகளை அரங்கேற்றவும் ஜேம்ஸ் க்ரீயர் மற்றும் பிரிட்டன் உளவுத்துறையால் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒரு கொடூரமான நிழல் உலகப் படைதான் இந்த ஸ்டார்லிங். காலப்போக்கில் அது கைவிடப்பட்டதாகக் கருதப்பட்ட நிலையில், தற்போது லியம் கிரவுன் அந்தப் படையை மீண்டும் உயிர்ப்பித்துத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளான். எதிரியின் ஒவ்வொரு அசைவையும் முன்கூட்டியே கணிக்கும் திறன் கொண்ட அந்த 'கோஸ்ட்' படையிடமிருந்து, உலகைக் காப்பாற்றும் பொறுப்பு மீண்டும் ஜாக் ரையான் மற்றும் அவனது சகாக்களின் தோள்களில் விழுகிறது.

ஐந்தாவது சீசனாக எடுக்க வேண்டிய கதையை, 107 நிமிடத் திரைப்படமாக சுருக்கி எடுத்ததில் தயாரிப்புக் குழு பெரும் சவாலைச் சந்தித்துள்ளது. ஆண்ட்ரூ பெர்ன்ஸ்டைன் (Andrew Bernstein) இயக்கத்தில், ஜான் க்ராசின்ஸ்கி மற்றும் ஆரோன் ராபின் ஆகியோரின் திரைக்கதையில் உருவான இந்தப் படம், லண்டன், நியூயார்க் மற்றும் துபாய் நாட்டில் படமாக்கப்பட்டுள்ளது. முந்தைய சீசன்களில் இருந்த அதே 'ரா' (Raw) ஆக்ஷன் காட்சிகள், இந்தப் படத்திலும் கொஞ்சமும் குறையாமல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, லண்டன் வீதிகளில் நடக்கும் அந்த அதிவேக கார் சேஸிங் (Car Chase) மற்றும் கிளைமேக்ஸ் காட்சிக்காகத் துபாயின் மாபெரும் சர்வர் மையத்தில் நடக்கும் அந்தத் தொழில்நுட்பத் திருட்டு (Data-Retrieval Operation) ஆகியவை ஹாலிவுட் பிளாக்பஸ்டர்களுக்கு இணையான திரை அனுபவத்தைத் தருகின்றன. படத்தின் ஒளிப்பதிவும், பின்னணி இசையும் ஒரு சர்வதேசப் போர்ச் சூழலின் பதற்றத்தை ஒவ்வொரு ஃப்ரேமிலும் கடத்துகின்றன.

ஜாக் ரையானின் வழிகாட்டி ஜேம்ஸ் க்ரீயராக வரும் வெண்டெல் பியர்ஸ், தனது முதிர்ச்சியான நடிப்பால் படத்திற்கு ஒரு எமோஷனல் வெயிட்டேஜ் தருகிறார். அதேசமயம், எந்தச் சூழலிலும் கலங்காத கள அதிகாரியான மைக் நவம்பராக மைக்கேல் கெல்லியின் வருகை, படத்திற்குப் பெரும் பலம். ஜாக் மற்றும் மைக்கிற்கு இடையேயான அந்தத் தோழமைப் பிணைப்பு, திரைக்கதையை சுவாரசியமாக நகர்த்துகிறது.

முந்தைய எபிசோடுகளில் இருந்த கேரக்டர் பின்னணி கட்டமைப்பு இதில் இல்லையென்றாலும் ஜாக் ரையானும், ஜேம்ஸ் க்ரியரும் நம்மை சுவாரஸ்யப்படுத்தத் தவறவில்லை.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.